https://telegram.me/aedahamlibrary

# காவிய மனைவி



இலக்கிய சாம்ராட்.
கோவி. மணிசேகரன்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# காவிய மனைவி

# Kaaviya Manaivi

Author:

இலக்கிய சாம்ராட் கோவி. மணிசேகரன்

**Ilakkiya Samrat Kove. Manisekaran**

For more books

http://www.pustaka.co.in/home/author/kove-manisekaran

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

## பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

# 1

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஒரே கூட்டம். பெரும் பிரமுகர்களும் அமைச்சர்களும் வருகை தந்திருந்தனர். சுற்றிலும். பத்திரிகை நிருபர்கள் காமிராவைத் தோளில் மாட்டிக் கொண்டு இறங்கி வரும் விமானத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

பூதாகரமான சத்தத்துடன் அந்த விமானம் தரை தட்டியது. முதலில் பலர் - ஆண்களும் பெண்களுமாக இறங்கிக் கொண்டிருந்தனர்.

அதோ... கறுப்புக் கண்ணாடியணிந்து கோட்டும் சூட்டுமா...

ஒரே கைதட்டும் ஆரவாரம்...

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் சங்கர் அமைதியாகக் கையைக் தூக்கிஅசைத்த வண்ணம் இறங்கி வந்து கொண்டிருந்தான்.

முதலில் அமைச்சர்களும் பிரமுகர்களும் மாலை அணிவித்தனர். அதைக் கண்டு பெற்ற தாய் ராஜாமணியம்மாள் பூரித்து நின்றாள். சங்கர் அன்னையின் காலைத் தொட்டு வணங்கினான்.தாயுள்ளம் ஆசீர்வதித்து மகிழ்ந்தது.

சங்கர் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி. அவன் இப்படிப் பலர் முன்னிலையில் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்ட காட்சி மெய்சிலிர்க்க வைத்தது. அவனுடைய தாய்ப் பக்தியைக் கண்டு வியக்காதவர் யார்?

மூளை சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிக்காக அவன் அமெரிக்காவுக்குச் சென்று ஓராண்டு தங்கி இப்போது திரும்புகிறான். கம்ப்யூட்டர் என்ன? மனிதனையே இரும்பில் படைக்க முடியும் என்று சூள் கொட்டி ஆராய்ந்து வருபவன். ‘ரோபோ’ என்கிற இரும்பு மனித இயக்கத்துக்கு எலக்ட்ரானிக் மூளை பொருத்தி ஆயிரம் மனிதர்கள் செய்யக் கூடியவற்றை அந்த ஒரு மனிதயந்திரம் செய்துவிட முடியும் என்பது அவனுடைய ஆராய்ச்சி. அவன் கண்டுபிடித்த ஓரிரண்டு புதிய படைப்புகளைக் கண்டு அகில உலகமே வியந்தது. ஆனாலும் கம்ப்யூட்டர் கண்டுபிடிப்பு என்பதே இருபதாம் நூற்றாண்டின் நிகரிலா சாதனை. அதையும் பல படி மீறி ஒருவன் ஆராய்ச்சி நடத்துகிறான் என்றால் உலகின் கண்கள் அவன் மீது மொய்த்ததில் வியப்பொன்றும் இருக்க முடியாதல்லவா?

பத்திரிகை நிருபர்கள் தேனீக்களைப் போல மொய்த்தனர். எங்கும் ‘கிளிக் கிளிக்’ என்கிற ஓசை. ‘பளிச் பளிச்’ என்கிற ஒளி. பின்னர் ஒரு பத்திரிகை நிருபர் முன் வந்து கேள்வி கேட்டார்.

“இந்தச் சோதனையில் நீங்கள் வெற்றியடைவீர்கள் என்று நினைக்கிறீர்களா?”

சங்கர் சொன்னான். பூவிட்டிருக்கிறது. காய்த்துப் பழுக்க வேண்டும். இதற்குள் இனிப்பா புளிப்பா என்பதை யாராலும் நிர்ணயிக்க முடியாது. ஆனாலும் முயற்சியில் நம்பிக்கையுள்ளவன். எனவே வெற்றி பெறுவேன் என்கிற நம்பிக்கையிருக்கிறது.”

இன்னொருவர் கேட்டார். “நீங்கள் திருமணம் செய்து கொள்வீர்களா?”

“இயந்திரப் பெண்ணை என்னால் படைக்க முடியாது.”

அப்போது சின்ன சிரிப்பொலிகள் எழுந்தன.

“சினிமா நட்சத்திரம் யாரையாவது...”

“உஸ்! என் அம்மா இருக்கிறார்கள். அவர்கள் பார்த்து ஒரு பொம்மைக்குத் தாலி கட்டு என்றால் கட்டிவிடுவேன்!”

“இவ்வளவு தாய்ப் பக்தியுள்ளவர், ஏன் கடவுள் பக்தியைப் புறக்கணிக்க வேண்டும்?”

“தாயின் பேரில் அபார பக்தியிருப்பதால்தான்!

“நீங்கள் நாத்திகரா?”

“சத்தியமாக இல்லை.”

“பின் கடவுள் நம்பிக்கையில்...”

“நான் கடவுளை வெறுக்கவில்லை. கைகூப்புகிறவர்களையும் சாடவில்லை. கோவிலை இகழவில்லை. கொடுப்பதையும் தடுக்கவில்லை. ஆனால் நான் ஒரு விஞ்ஞானி! இயற்கையை வழிபடுவதற்குப் பதிலாக அதனுடன் விளையாடுகிறேன். எனவே நான் இயற்கைக்கு மாறுபட்டு இருக்கிறேன். அவ்வளவே!”

“பயன் தருகிறபோது வெளிநாட்டுக்குப் போய் விடுவீர்களா?”

“தமிழகத்துக்குப் பெருமை சேர்ப்பேன். நேரமாகிறது. தயவு செய்து உங்களையொன்று வேண்டிக்கொள்வேன். இல்லாததும் பொல்லாததுமாகத் திரித்து எழுதிப் பிரச்சினைகளை உண்டுபண்ணித் தமிழகத்தின் பெருமைகளை குலைத்துவிடாதீர்கள்!”

சங்கர் நடக்க ஆரம்பித்தான்.

அப்போது –

தொலைவில் ஓர் உருவம் - ரதிப்பதுமை – பேசும் பொற்சித்திரம் நின்று தலை வணங்கி அன்பைத் தெரிவித்தது. ஆமாம்! பிரபல ஆடலணங்கு சித்ரா தான். அவளைக் கண்ட சங்கர் புன்முறுவலால் அன்பைத் தெரிவித்துப் பெற்றோரைப் பின் தொடர்ந்தான்.

அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு தனக்காக வந்த தன்னுடைய காரில் பெற்றோருடன் ஏறியமர்ந்து கொண்டான். கார் புறப்பட்டது.

அடையாறு காந்தி ரோடில் மானமுள்ள மனிதனைப் போல நிமிர்ந்த மாளிகை. “விஞ்ஞானம்” என்று கம்பீரமாகப் பெயர் பெற்று விளங்கிய அந்த மாளிகையின் முன் கார் நின்றது. தாயார் ராஜாமணியம்மாள் உள்ளே சென்று தயாராக இருந்த ஆலத்தட்டைக் கொண்டு வந்து மகனுக்குக் கண்ணேறு கழித்தாள்.

மாளிகையினுள் சென்று சுற்றும் முற்றும் கவனித்தான் சங்கர்.

“என்னடா சங்கர்! என்ன பார்க்கிறே?” தகப்பனார் சந்திரசேகரன் கேட்டார். அவர் ஓர் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி.

“ஒண்ணும் இல்லேப்பா! ஏதேனும் மாற்றம் இருக்கான்னு பார்த்தேன்.”

“அது எப்படியடா, இந்த ஒரு வருடத்துலே மாற்றம் வந்துடும். நீ கல்யாணம் பண்ணிக்கிட்ட பிறகுதானே இந்த வீட்டுக்கே ஒரு மாற்றம் - ஒரு மங்களகரம் ஏற்படும்!”

தகப்பனார், பாதையைச் சரிப்படுத்தித் தன்னைத் தயாராக்குகிறார் என்பதை புரிந்து கொண்ட சங்கர், மாடிக்குத் தன்னறை நாடி நடந்தான்.

“அதுக்கென்ன! வர்ற ஆவணியில் முடிச்சிடறதுன்னு நான் தீர்மானிச்சிட்டேனே!” என்றாள் தாயார் ராஜாமணியம்மாள்.

அவள் தீர்மானித்த பிறகு யார் குறுக்கே நிற்க முடியும்? தாய்க்கு அடங்கிய பிள்ளையாயிற்றே சங்கர்!

மாடி விசாலமாக இருந்தது. தூய்மையாகவும் காக்கப் பெற்றிருந்தது. அறைக் கதவுகள் திறந்து விடப்பட்டிருந்தன. ஆங்காங்கு விஞ்ஞானிகளின் புகைப்படங்களும் இயற்கைத் தோற்றங்களும் காட்சியளித்தன.

மேசை மீது பெரிதான நடராஜர் சிலை. சுத்தமாகத் துடைத்து வைத்திருந்தார்கள். அவனுக்கு இந்த உலகிலேயே பிடித்தமான சிலை அது ஒன்று தான். தெய்வ பக்திக்காக என்று சொல்லிவிட முடியாது. ஆனால் சங்கர் ஓர் அபாரமான கலாரசிகன். நாட்டியம் என்றால் உணவும் உறக்கமும் தேவையில்லை. உலகில் நாட்டியக் கலையைக் கண்டுபிடித்தவன் அபாரமான அறிவாளி என்று மேலை நாட்டிலும் அவன் பேசியிருக்கிறான். மனிதனின் முதல் கலை நாட்டியக் கலைதான் என்பதை பரிபூரணமாக ஒப்புக் கொண்டவன். அப்பேர்ப்பட்ட நாட்டியக் கலையை பெண்கள் மட்டுமே ஆடி

வயப்படுத்தும் நாட்டியக் கலையை ஆண் வடிவில் ஒப்புக்கொண்டு மயங்குகிற அளவுக்குப் படைத்து வடித்தானே அந்தச் சிற்பி… ஆ! அவன் ஒரு விஞ்ஞான அறிவு படைத்தவன் தான் என்பது மட்டுமல்ல – அவன் தமிழனாக இருந்து விட்டது. அவனுக்குள் ஒரு பெருமை! "எடுத்த பாதம்" என்று அப்பர் பாடியதிலிருந்தே அதன் பழமை தமிழகத்துக்கே உரியதல்லவா?

நடராஜர் சிலையை வெகுநேரம் ஊன்றிக் கவனித்து விட்டுத் தன்னுள் நகைத்துக் கொண்டான். பின்னர் வெந்நீர் தயாராக இருக்கிறது என்ற குரல் கேட்டுக் குளிக்க ஆயத்தமானான்.

குளித்து முடித்து உணவருந்திய பிறகு அலங்காரப் புருஷனாக வெளியில் கிளம்பினான். அவன் எங்கே கிளம்புகிறான் என்பது பெற்றவர்களுக்குத் தெரியும். ஆனாலும் கண்டு கொள்ளவில்லை. எல்லாம் திருமணம் ஆனதும் சரிப்பட்டு விடும்.

தியாகராயநகர் பாண்டிபஜார் பக்கமாக கார் வருகிற போது எதிரே சிலர் நின்று கவனித்தனர். புகைப்படங்களின் மூலம் தெரிந்து கொண்டவர்கள் அவர்கள். வலதுபுறமாக இருந்த பழக்கடைச் சந்தில் புகுந்து நேராகச் சென்று ஒரு மாளிகை வாசலில் கார் நின்றது.

காரைக் கண்டதும் சித்ரா ஓடோடி வந்து வரவேற்றாள். அன்புக் காதலர் வெளிநாட்டிலிருந்து வந்ததும் வராததுமாகத் தன் வீட்டை நாடி இவ்வளவு சீக்கிரம் வருவார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

இருவருமாக உள்ளே சென்றனர். கூடத்திலிருந்த சோபாவில் அமரச் செய்து உள்ளே ஒடினாள்.

"சித்ரா எங்கே ஓடுகிறாய்?"

"ஓவல் கொண்டு வர்றேன்!"

"இப்பத்தான் சாப்பிட்டு வந்தேன். அப்புறம் பார்த்துக்கலாம். இப்படி உட்கார்."

அரும்புப் பற்கள் வெளியே தெரிய, ஆம்பல் முகம் இதழ் விரிக்க, அன்னம் போல நடந்து வந்து அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

"சித்ரா நலந்தானே?"

"ம்ம்…!"

"உன் கடிதம் எல்லாம் கிடைச்சுது. மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்."

அவளை இருக அணைத்துக் கொண்டான். அவள் சிணுங்கவுமில்லை. விலகவுமில்லை. இரண்டும் அவளுக்கு அவசியமில்லை.

“ஆமாம். நீ ஏதோ ஓர் அபூர்வமான ‘டான்ஸ்’ கண்டு பிடிச்சிருக்கியாமே!”

“விஞ்ஞானியின் காதலியல்லவா?”

“ஒண்டர்புல்!”

“என்னோட புதிய நாட்டியமும் ஆச்சரியமானது தான்!”

“பேரு...”

“நவக்கிருக நாட்டியம்!”

‘நவக்கிரகம்! நீ ஏன் அதுகளோடு சேட்டை பண்றே? ஜோசியருங்க பண்றது போதாதா?’

“அது ஜாதகம். இது சாதகம்!”

“ரெண்டுக்கும் அர்த்தம் ஒண்ணுதான்!”

அப்போது-

ஏதோ ஒன்று தொப்பென்று மேல விழ, சித்ரா அரண்டு மருண்டு கூச்சலிட்டுத் துள்ளியெழுந்தாள்.

## 2

ப ல்லி தலையில் விழுந்து தோளில் ஏறிப் பின்னர் குதித்து ஓடியது. சங்கர் பெரிதாகச் சிரித்தான். “சித்ரா உன் நாட்டியத்தைக் காணப் பல்லிக்கும் ஆர்வம்!”

“ஆமாம். உங்களுக்குப் பல்லி சாஸ்திரம் தெரியுமா?”

சித்ராவுக்கு அரட்சி கண்டது.

“ஏன்.”

“பல்லி தலையில் விழுந்தா என்ன பலன்?”

“தலைமயிர் அடியோடு கொட்டிவிடும்.”

“ஐயய்யோ!” கூச்சலிட்டு விட்டாள் சித்ரா.

“சித்ரா! உனக்கு எவ்வளவு தைரியமிருந்தா என்னையே பஞ்சாங்கக் கேள்வியைக் கேட்டிருப்பே? பல்லி விழறதாவது. பாம்பு விழறதாவது... சரி சரி, உன்னோட நவக்கிரகம் நாட்டியத்தை நான் பார்க்கணும் போல ஆசையா இருக்கு!”

“அடுத்த வாரம் அண்ணாமலை மன்றத்துலே புரோகிராம் இருக்கு! பார்த்தால் போச்சு!”

“ஓகே! என் சித்ரா ஆடறதைப் பார்க்க நான் ஒரு வாரம் காத்துக்கிட்டிருக்கனுமா? அப்படின்னா... நான் உன்னை அடுத்த வாரம் சந்திக்கிறேன்!”

சங்கர் எழுந்து கொண்டான் சித்ரா தாவிச் சென்று அவனுடைய தோள்களைப் பற்றி அமரச் செய்தாள். “இப்படித் திடீர்னு மூக்கு மேலே கோபம் வரும்னுதான் முன்னேற்பாடா இருக்கிறேன். டேப் மியூசிக் இருக்கு... அதை ‘ஆன்’ பண்ணி ஆடறேன்! ஆனா டிரஸ்... ஒப்பனை... வண்ண விளக்குள் - காட்சி ஜோடனைகளுடன் பார்க்கிற ‘கிக்’ இதுலே இருக்காது!”

“பரவாயில்லை. அது பாமர மக்களுக்கு! நான் கற்பனை செய்து பார்த்துக் கொள்வேன்! ஆடு சித்ரா!”

டேப்பைக் கொண்டு வந்து ‘ஆன் செய்தாள். பின்னணி இசை தொடங்கியது. சித்ரா ஆடத் தொடங்கினாள்.

வான சஞ்சாரத்தில் பறப்பது போலத் துள்ளிக் குதித்து ஆடினாள்! ஒன்பது கோளங்களில் அவளுடைய கலை ஒளிர் விட்டது. சூரியன், சந்திரன், செவ்வாய், புதன். குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய கிரகங்களைத் தன் காலடியில் போட்டு மிதித்து துவம்சம் செய்கிறாள் சித்ரா என்று தான் முதலில் சங்கர் நினைத்தான். ஆனால் அத்தனை கோளங்களின் - கிரகங்களின் பலாபலன்களைச் சொல்லி வழிபடுவதாக அல்லவா இருக்கிறது. இந்தப் புதுமை நாடகம்! கோளங்களை விரல்களின் நுனியில் வைத்து விளையாடும் ஒரு விஞ்ஞானியின் காதலி என்பதற்காக இதனைத் தயார் செய்தாளா? அல்லது விஞ்ஞானங்கள் பெருகினாலும் சாஸ்திரங்களை அழிக்க முடியாது என்பதற்குச் சவால் விடுவது போல இதை தயார் செய்தாளா? தன்னைக் கவுரவிக்க ஆடுகிறாளா? அல்லது அவமதிக்க ஆடுகிறாளா?

அவள் ஆடி முடித்தாள். டேப்பும் முடிந்தது!

தேங்காய்ப்பூ துவாலை எடுத்து அரும்பி வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். பின்னர் அலங்கார மேசை மீதிருந்த ரெவலான் வாசனைத் திரவத்தை எடுத்து அழுத்தி மேலே பீய்ச்சிக் கொண்டாள். குப்பென்று வாசனை பரவியது. பின்னர் அருகே வந்தமர்ந்தாள்.

“எப்படி என் நாட்டியம்” என்றாள் சித்ரா.

“புதியது. ஆனால் புதுமை என்று சொல்லிவிட முடியாது. பழைய குப்பைக்கு ரெவலான் சென்டை தெளிச்ச மாதிரி!” என்றான் சங்கர்.

“சித்ரா! பொதுமக்கள் பாராட்டலாம். பத்திரிகைகளும் விமர்சகர்களும் பாராட்டலாம். ஆனா... நான் விஞ்ஞானி. இதை நீ மறந்து விடக்கூடாது. சரி... வா... மாடிக்குப் போய் காற்றாட உட்கார்ந்து பேசலாம்.” என்று அவளுடைய தோள்பட்டைகளைப் பற்றி அழுத்தித் தெம்பு ஏற்றி அழைத்துச் சென்றான். “சித்ரா! ஓய்வுக்காக எங்காவது போகலாம்னு நினைக்கிறேன். அடுத்த வாரம் தானே நாட்டியம்? நாலு நாள் எங்காச்சும் போய் வந்தா என்ன?”

“எனக்குக்கூடக் குற்றாலத்துக்குப் போய் வரணும் போல இருக்கு!”

“நல்ல திட்டம்! நாளைக்கே புறப்படலாமா? எனக்கும் வேட்டையாடி நாளாச்சு.”

“ரெயில்லே போகணுமா.”

“ஏன்? என் கார் என்ன செய்யறது?”

“சரி காரிலே போகலாம்.”

அவளுடைய இடுப்புக்குக் கீழே குதத்தில் ஓங்கித் தட்டினான் சங்கர். சித்ரா “உய்”என்று சத்தமிட்டு திரும்பிப் பார்த்தாள்.

வெகு நேரம் கழித்து வீடு திரும்பினான் சங்கர். பெற்றோர் ஒன்றும் கண்டு கொள்ளவில்லை. சூடு பறக்க காபி கொண்டு வந்து கொடுத்தான் வேலைக்காரன்.

அன்னை ராஜாமணியம்மாள் மகனை நோக்கி “ஏண்டா ராஜா! நாளை சிதம்பரம் போகணும். நீயும் வாயேன்!”

சங்கருக்குப் புரியவில்லை. குற்றாலம் நிகழ்ச்சி வேறு. அம்மா இப்படி அழைக்கிறார்களே!

“ஏம்மா சிதம்பரத்துக்கு?”

“நாளைய கழித்து ஆருத்ரா தரிசனம்!” நடராஜ பெருமான் நாட்டியத்தை தரிசனத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கணும்.

“அதுக்கு நான் என்னம்மா செய்யறது.”

“உனக்குத்தான் நடராஜனைப் பிடிக்குமே! நாட்டியத்தைப் பாரேன்!”

“நடராஜரே நாட்டிய மாடறாரா?”

தந்தை சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ் இடி இடி என்று சிரித்தார். “சுவாமியைத் தூக்கிக் கொண்டு ஆடுவார்கள்.”

“அதைவிடக் கழை கூத்து நல்லா இருக்கும். அம்மா! உங்களுக்கு விருப்பம்னா நீங்க போங்க! எனக்குத் தடையில்லை. என்னை ஏன் கூப்பிடறீங்க?”

“கார் ஓட்டறதுக்கு டிரைவர் கூட இல்லையே?”

“கார்லே போறீங்களா? நான் குற்றாலம் போகணுமே! அங்கே பல நண்பர்கள் நாளைக் கழித்து என்னைச் சந்திக்கிறாங்கள்!” எனக்கும் வேட்டைக்குப் போய் ரொம்ப நாளாகிறது!”

சந்திரசேகரனுக்குப் புரிந்துவிட்டது. “அதுக்கு என்னடா எங்களை நீ சிதம்பரத்துலே விட்டுவிட்டு, நீ அப்படியே போகலாமே!”

“வர்றப்ப?”

“இருக்கவே இருக்கு போட் மெயில்!”

“அப்படின்னா சரி...”

ராஜாமணியம்மாள் மேலும் பேச்சைத் தொடர்ந்தாள்.

“சங்கர்! அப்படியே சிதம்பரத்துலே ஒரு பொண்ணு இருக்குன்னு கேள்விப்பட்டேன்.”

“அப்படியா... அதுக்கென்ன?”

“அவளையும் பார்த்துட்டு வரலாம்னு...”

“பார்த்துட்டு வாங்க!”

“நீ பார்க்க வேண்டாமா?”

“நீங்கப் பார்த்தாலே போதாதா?”

“வாழப் போறவன் நீடா?”

“என்னைப் பெத்தவர்களைப் பத்தி எனக்குத் தெரியும். நல்ல மருமகளைத் தேர்ந்து எடுக்க உங்களுக்கும் தெரியும்.”

சந்திரசேகரன் குறுக்கிட்டார். “நல்லா சொன்னேடா ராஜா! நல்லா சொன்னே!”

சங்கர் தன்னுள் சிரித்துக் கொண்டான். குடும்பத்தைப் பொறுத்தமட்டில் அவன் ஒரு நல்ல மகனாகவே இருந்து வருகிற லட்சியம் உடையவனாயிற்றே!

ஆனாலும் சித்ராவின் தொடர்பை எப்படி அறுப்பது என்பது பெற்றவர்களின் குழப்பம்!

பயணம் குறித்துச் சித்ராவை எப்படி தேற்றுவது என்பது சங்கரின் கஷ்டம்!

மாற்று ஏற்பாட்டை உடனடியாகக் கவனிக்கலானான்.

சிதம்பரம் தெற்குமாட வீதியில் இருந்த மிராசுதாரர் செங்கல்வராயப் பிள்ளை விட்டில் தாய் தந்தையரை இறக்கி விட்டான் சங்கர். அவன் உடனடியாகப் புறப்பட ஆயத்தமானான். ஆனால் பிள்ளைவாள் அவ்வளவு எளிதில் விட்டு விடுவாரா? அதுவும் புகழ் பெற்ற விஞ்ஞானி தம் வீடு தேடி வந்த பிறகு?

பிள்ளைவாள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அன்றிரவு அங்கு தங்கவேண்டியதாய்ப் போய்விட்டது. அப்போது மாலை ஐந்து மணி இருக்கும். இனிமேல் போய் என்ன செய்யப் போகிறோம்? சித்ரா இன்றிரவு ரயிலேறி நாளை காலையில்தான் அங்கு வந்து சேருவாள். நாமும் அந்த நேரத்தில் அங்குச் சென்று கலந்து கொள்ள வேண்டியது தான் என்று இருந்து விட்டான் சங்கர்.

மிராசுதாரர் வீட்டு விருந்து. அதுவும் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி தங்கி இருக்கிறான். கேட்க வேண்டுமா? கேள்விப்பட்ட சிதம்பர முக்கியப் பிரமுகர்கள் தேடி வந்து விட்டனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வரை செய்தி எட்டி விட்டது. இரவு எட்டு மணி இருக்கும். மாணவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து விட்டனர். அவர்களிடமெல்லாம் அளவளாவித் திரும்ப இரவு 11 மணியாகி விட்டது. அவனுள் ஓர் ஆசையிருந்தது. எந்தப் புதிய அபூர்வ கலைக் கண்டுபிடிப்பென்று நடராஜர் சிலையைப் போற்றி மேசை மீது வைத்திருக்கிறானோ அந்த நடராஜர் வாழும் ஊரல்லவா சிதம்பரம்!

கோவிலுள் சென்று அந்தச் சிற்றம்பல மூலத்தானத்தில் தங்க வடிவம் கொண்டு ஒளி நிறைந்து காணப்படும் நடராசப் பெருமானைக் காண வேண்டும் என்கிற ஆசைதான். உலகம் என்ன சொல்லும் என்கிற பயம் கிடையாது. அவன் என்ன வெளியே நாத்திகம் பேசி உள்ளுக்குள் தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்கிறவனா? அவன் ஒரு விஞ்ஞானி. உலகை ஆட்டிப் படைப்பவன்! தன் மனச்சாட்சிக்கு அது உகந்ததாகத் தெரியவில்லை என்று தான் முதலில் தயங்கினான். பின்னால் எட்டு மணி சுமாருக்குக் கோவிலுக்குப் போய்த் திரும்பலாம் என்கிற நோக்குடன் தான் தங்கவும் செய்தான். ஆனால் பார்வையாளர்களுடன் பேசி நேரம் கடந்து விடவே உணவை முடித்துக் கொண்டு உறங்கச் சென்று விட்டான்.

பொழுது பலபலவென்று விடிகிறபோது காலைக் கடன்களை முடித்துக் கொண்டு காரை எடுத்துக் கொண்டு குற்றாலம் நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

கார் சிதம்பரம் அருகே இருந்த வல்லம்படுக்கைக் கிராமம் வழியாகச் சென்று கொண்டிருந்தது. குறைந்தது எழுபது, எண்பது கிலோ மீட்டர் வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்தான். இன்னும் கொஞ்சம் முன் கூட்டியே புறப்பட்டிருக்கலாம். நன்றாகத் தூங்கி விட்டான். பெற்றோரும் எழுப்பவில்லை.

கிராமத்து எல்லையைக் கடக்கிற போது

வழியில் ஒரு சிவன் கோவில்...

நதியில் குளித்து முடித்த ஈரக்கூந்தலில் நீர் சொட்டச் சொட்ட நனைந்த புடவையை மேலே சுற்றிக் கொண்டடிருந்ததால் அங்கங்களின் பொலிவு தெரிந்தும் தெரியாமலிருக்க நெற்றியில் திருநீறு பட்டையாகப் பிரகாசிக்க முழங்கால் தெரிய நின்றவண்ணம் கைகூப்பிக் கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்து கிடந்தாள் இளமையின் பரிபூரண முத்தரையுடன் கூடிய அழகியொருத்தி அந்த வல்லம் படுக்கைக் கிராமத்து மிராசுதாரர் உலகநாத முதலியாரின் ஒரே புதல்வி செல்லப் புதல்வி உமா!

# 3

சங்கர் தன்னால் ஆன மட்டும் காரின் ‘ஆரனை’ அழுத்தியழுத்திச் சத்தமெழுப்பிப் பார்த்தான். காதுகள் அடைப்பட்டுக் கிடந்தன. உண்மையான தியானத்துக்குப் புலன்கள் அடங்கிவிட வேண்டியவைதாமே!

தெய்வத்தை வணங்க இந்தப் பெண் இப்படியா நடுத்தெருவில் நிற்க வேண்டும்? கோவில் ஓரத்தில் நின்றால் என்ன வந்துவிட்டது.

அந்தப் பக்கம் கார்கள் போவதென்பது அபூர்வம் கட்டை வண்டிகள் தாம் அநேகமாகப் போகும்! இவனை யார் வழி தெரியாமல் இப்படி வரச் சொன்னது? இது சங்கருக்குப் புரியவில்லை. அவன் ‘ஆரனை’ அழுத்துவதை நிறுத்திவிட்டுக் காரைவிட்டே இறங்கிவிட்டான். வெகு நேரம் வரை காரின் மீது சாய்ந்து கொண்டு வேடிக்கை பார்த்தான். எப்போதுதான் தியானம் முடிகிறது என்று பார்க்கலாமே!

தியானத்தை முடித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தாள் உமா. எதிரே ஓர் ஆடவன் - அலங்காரப் புருஷனாய் காருடன் காத்திருப்பது தெரிய வந்தது. யார் இவன்?

ஓ...வழிமறித்து நின்று கொண்டிருந்தோம். அவளுக்கே புரிய வந்தது. “மன்னிக்கவும்” என்று கூறி நடந்தாள்.

அவளை அப்படிச் சும்மா போகவிட சங்கருக்கு மனமில்லை. “செய்துவிட்டு மன்னிப்புன்னு ஒத்தை வார்த்தையிலே சொல்லிடறது இப்ப சகஜமாப் போச்சு!”

உமா திரும்பிப் பார்த்தாள். “இப்ப என்னை என்ன செய்யணும்னு சொல்றீங்க?”

“பக்திங்கறது மத்தவங்களுக்குத் தொல்லை தராதது.”

“நான்தான் மன்னிப்பு கேட்டுட்டேனே...அப்புறம் பேச்சு எதுக்கு?”

“பத்து நிமிடம்... நான் இந்நேரம் பத்து மைல் போயிருப்பேன்! உன் மன்னிப்பு என் அவசரத்தைக் காம்பன்சேட்...சாரி நீ நாட்டுப்புறத்துப் பெண்ணா... ஈடு செய்யுமா?”

நாட்டுப்புறத்தாள் என்று குறிப்பிட்டது உமாவுக்கு வேதனையாக இருந்தது. அவள் சற்றே சினந்து நோக்கினாள்; “போலி நாகரிகம் அறிவாகாது; அறிவாயிருப்பது அலங்காரமாகாது! உங்களுக்கு உலகம் தெரியுமோ என்னவோ, எனக்குக் கடவுள் தெரிகிறார். பிலிப்ஸ் ஜேம்ஸ் பாய்லே என்ற அறிஞரைக் கேள்விப்படிருக்கிறீர்களா? அவன் சொல்கிறான்...” என்று தொடங்கி, அவன் சொன்ன வார்த்தைகளை ஆங்கிலத்தில் பொரிந்துதள்ளிவிட்டு, திரும்பிப் பாராமல் வேகமாக நடந்தாள். சங்கர் அவள் செல்வதையே வெறித்து வெகுநேரம் வரை பார்த்துக் கொண்டே நினறு விட்டான். எப்படிச் சவுக்கடி போலப் பதில்

சொல்லிவிட்டுப்போய்விட்டாள்! இவளிடம் இத்தனை பெரிய அடக்கமா?

மேலும் பத்து நிமிடங்கள் பிடித்தன காரைஸ்டார்ட் செய்ய! அதுகூட பின்னால் இருந்த கட்டை வண்டிக்காரன் “என்ன சாமி! எம்மா நேரம் நீ வண்டி நிறத்திக்கிட்டு இருக்கிறது; பொழப்பு என்னாவது?” என்ற குரல் கேட்டுத் தன்னையுணர்ந்து புறப்பட்டான். அவன் வண்டிக்காரனிடம் மன்னிப்பு கேட்க மறந்து விட்டான்.

வல்லம் படுகையிலும் அதற்கப்பாலும் ஏறத்தாழ ஐநூறு ஏக்கரா நஞ்சை பூமியும் இருநூறு தோப்புகளும் மாளிகையும் உடையவர் உலகநாத முதலியார். அத்துடன் பாபநாசத்தில் வேறு நிலபுலன்களிருந்தன.

தெருவாசலில் நின்று மகளுடைய வருகைக்காகக் காத்திருந்தார். உமா வருவதைக் கண்டு உள்ளே சென்றார். அவருக்கு மகளிடம் மரியாதை நிறைந்த ஓர் அன்பு. தெய்வபக்தி நிறைந்த ஒரு மகளைக் கொடுத்த ஆண்டவனை நன்றியறிதலுடன் வாழ்த்திக் கொள்வார்.

மாளிகையினுள் நுழைந்த உமா காலை அலம்பிக் கொண்டு நேரே பூசையறையினுள் நுழைந்தாள்.அவளுடைய தினப்படியான அலுவல் அது.

விளக்கை ஏற்றிவைத்துப் பூசையைத் தொடங்கினாள். அப்பர் பாடலை வாயாரப் பாடத் தொடங்கினாள். எப்படியும் அவள் பூசையை முடிக்க அரை மணி நேரமாகும் என்பது உலகநாத முதலியாருக்கு அத்துப்படி. எனவே காலைப் பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்தார்.

பூசை முடிகிறது என்பதை மணியோசை தெரிவித்தது. சற்றைக்கெல்லாம் சிவந்து கொழுந்துவிட்டு எரிகிற கர்ப்பூரத் தட்டுடன் தந்தையை நெருங்கி வந்தாள் உமா. பிரசாதத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டார். மீண்டும் பூசை அறையினுள் நுழைந்து தானும் பிரசாதமிட்டுக் கொண்டு வெளியே வந்தாள் உமா.

“உமா, இப்படி வாயேன்!” என்றழைத்தார் உலகநாத முதலியார்.உமா அருகில் வந்தாள்

“நீ என்னமோ இந்த விஞ்ஞான யுகத்தில் பூசை, பக்தினு இருக்கே! ஆண்டவன் படைச்ச மனுஷனை உண்டாக்க முடியுமுன்னு ஒரு விஞ்ஞானி சூள் கொட்டியிருக்கான்!” உலகநாத முதலியார் குரலில் வெறுமை எதிரொலித்தது.

“யாரப்பா அந்தப் புண்ணியவான்?”

“சங்கர்னு பேரு. உலகப் புகழ் விஞ்ஞானி. மூளையைப் பத்தி ஆராய்ச்சி செய்யறான்.”நாத்திகனா?”

“அப்படி தன்னை ஒப்புக்க மறுக்கிறான். அதே நேரத்துலே தான் ஒரு விஞ்ஞானி என்பதைப் பலமா அழுத்தமா சொல்றான்!”

“கடவுள் நம்பிக்கை உண்டா?”

“நம்பறதுமில்லே; நம்பறவங்களைப் பத்திக் கவலைப் படறதுமில்லே!” அவன் இயற்கையைத் தன் போக்குக்குத்திருப்ப முயற்சிக்கிறானேயொழிய, மனுஷர்களைப் பத்திக்கவலைப் படவில்லை.”

“விசித்திரமான விஞ்ஞானி! வடநாட்டுக்காரறா?”

“தமிழன்!”

“அந்த மட்டில் தழிழ் நாட்டுக்கு ஒரு பேர்கிடைக்கிறதே... அதுக்காக மகிழலாம்.ஒரு தமிழனுக்கா இவ்வளவு பெரிய பெயர் வந்திருக்கு? ஆச்சிரியம்தான்!”

“அவன் படத்தைப் பத்திரிகையில் கூடப் போட்டிருக்கிறார்கள்.” என்று தன் கையில் இருந்த பத்திரிகையை நீட்டினார் உலகநாத முதலியார்.

“போட்டோ வேற பிரசுரமாயிருக்கா?” என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்து கவனித்தாள். மறுகணம் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது.சற்று முன்தான் அவனுடன் வாதம் புரிந்துவிட்டுத் திரும்பி இருக்கிறாள்.

“என்னம்மா மலைத்துப் போயிட்டே?” என்றார் உலகநாத முதலியார்.

அவள் ஒளிவுமறைவு இல்லாமல் நடந்ததை நடந்தவாறு பிட்டுப் பிட்டுக் கூறினாள். கேட்க கேட்க உலகநாத முதலியார்க்கு நம்ப முடியாத அதிர்ச்சியே ஏற்பட்டது.

இந்த இணைநிகழ்ச்சியை என்னென்பது?

தில்லையம்பலத்தலம் திமிலோகப்பட்டது.

பண்டு புகழ்கொண்ட பொன்னம்பலம் ஆயிற்றே! ஆருத்திரா தரிசனம் என்றால் எங்கிருக்கும் மக்களும் திரண்டு விடுவர்.

ஆயிரங்கால் மண்டபத்தில் கூட்டம் வழிந்தது. பெரிதாக அலங்கரிக்கப் பெற்ற சப்பரத்தில் நடராசர் பெரிதாக அலங்கரிக்கப் புறப்பட்டு விட்டார். மக்கள் வழி விட்டு வரிசை கட்டி "சிவலோகம்" என்றும் "சிவபொருமானே" என்றும் பக்தி மேலிடக் கூச்சலிட்டனர்.

ஒருமருங்கே சந்திரசேகரனும் ராஜாமணியம்மாளும் மிராசுதாரர் செங்கல்வராயப் பிள்ளை குடும்பமும் நின்று நடராஜ தரிசனத்தை ஆனந்தமாகக் கண்டு களித்துக் கொண்டிருந்தது.

எதிர் வரிசையில் உலகநாத முதலியாரும் உமாவும் நின்று ஆண்டவனைத் தரிசித்தனர்.

தலையைக் கோதி நுனி முடியிட்டு, நெற்றியில் மூன்று பட்டைத் தியானித்து சாட்சாத் அந்த உமா மகேசுவரியே சிவபெருமானை வழிபடுவது போலத் தோற்றமளித்தாள் உமா.அவளுடைய அந்த நிலையைக் கண்டு சிலர் பார்வதி தேவியோ என்று பக்தியுடன் பார்வை செலுத்தி மெய் மறக்கலாயினர். அப்படி மெய்மறந்து கவனித்தவர்களுள் ராஜாமணியம்மாளும் ஒருத்தி!

"என்னங்க! அந்தப் பெண்ணைப் பாருங்களேன்!" கணவனைக் கூப்பிட்டழைத்துக் காட்டினாள். அதுவரை நடனமாடும் நடராஜர்பாலிருந்த கவனத்தைத் திருப்பி, மனையாள் சுட்டிக்காட்டிய திசைப்பக்கம் கண்களைச் செலுத்தினார். அவருக்கே வியப்பு.எத்தனை அழகாக இருக்கிறாள். கையெடுத்துக் கும்பிடலாம் போலத் தோன்றும் அழகல்லவா இது!

பக்கத்திலிருந்த செங்கல்வராயப் பிள்ளை கவனித்து விட்டார். "என்ன முதலியார் என்ன பார்க்கிறீங்க?" என்றார்.

"ஒண்ணுமில்லே! இந்தப் பெண்ணைப் பார்க்கிறப்ப, ஆருத்திரா தரிசனம் இங்கேயே தெரியறாப்பிலே இருக்கு!" என்றார் ஐ.ஏ.எஸ்.

"இது நம்ம வல்லம்படுகை மிராசு உலகநாதன் மகள். முதலியார் ஜாதிதான். பெரிய இடம். ரொம்ப அடக்கமான பெண்!"

"பக்தியிருக்கிற எந்தப் பெண்ணுக்கும் அடக்கம் தன்னால வந்துடும்.இத்தனைப் பண்பாடுகளும் பெண்களோட அடக்கத்துக்காகக் கண்டுபிடிக்கப்பட்டதுதானே!" ஐ.ஏ.எஸ். அறிவை அவிழ்த்து விட்டார்.

"சொல்லுங்க... பிடிச்சா... நாளையே சம்பந்தம் பேசலாம்" என்றார் பிள்ளைவாள்.

ராஜாமணியம்மாளுக்கு ஒரு தேவகானத்தைக் கேட்டது போன்ற உணர்வு."பிடிப்பதென்ன! இந்தப் பெண் என் வீட்டுக்கு விளக்கேற்ற நான் பாக்கியம் செஞ்சிருக்கணும்!"

"கவலைப்படாதீர்கள்! நானாச்சு!" என்று மேலும் ஊக்கமூட்டினார் செங்கல்வராயப் பிள்ளை.

அன்று மாலையே அனைவரும் வல்லம்படுகை நோக்கிச் சென்றனர். பசுமையான அந்தக் கிராமச் சூழ்நிலை சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.க்கு மிகவும் பிடித்திருந்தது.

வந்திருக்கிற விஷயத்தைக் கேள்விபட்ட உலகநாத முதலியார்க்கும் பேராச்சரியமாக இருந்தது.இப்படியும் இணை நிகழ்ச்சிகள் ஏற்படுவன உண்டா? ஏதோ கதாசிரியர்களின் கற்பனைகளில் காணலாம். நடைமுறைக்கு ஒத்து வரக்கூடியதுதானா?

உலகநாத முதலியாரும் காலையில் நடந்த நிகழ்ச்சியை எடுத்துரைத்தார். கேட்ட அனைவரும் விதிர் விதிர்த்துப் போயினர். இதில் ஏதோ பிறவித் தொடர் இருக்கிறது. இல்லாமல் இப்படி நடந்திருக்கக் காரணமே இல்லை என்று வாதித்தார் செங்கல்வராயப் பிள்ளை.

பிறகு முறைப்படி பேசப்பட்டது.

உலகநாத முதலியார் எல்லா விருப்பங்களும் பெண்ணைச் சார்ந்தது. அவள் ஒப்புக் கொண்டால் தனக்கு அட்டியில்லை என்று கூறிவிட்டார். ஆனாலும் ஒரு கேள்வி கேட்டார்: "உங்கள்' பிள்ளையாண்டான் நாத்திகனாக இல்லாவிட்டாலும் கடவுளை மறுக்கிற விஞ்ஞானி. எல்லா விஞ்ஞானிகளும் அப்படியில்லை. அது வேறு விஷயம். உங்க மகன் அப்படி. என் பெண் அனுஷ்டானி.பொருத்தமாகுமா?"

"பொருத்தமே! அவனுக்கு இப்படி ஒரு தேவதை வேணும்னுதான் தீர்மானம் பண்ணியிருந்தோம். மற்றபடி நீங்க எப்படிக் கல்யாணம் பண்றீங்களோ அப்படி.சென்னையிலேதான் கல்யாணம். உங்களால் முடிந்த அளவு செய்யுங்க!"

"செய்யறது பிறகு இருக்கட்டும். என் பெண்ணை ஒரு வார்த்தை கேட்டுப் பதில் சொல்றேன்."

"முக்கியம். வாழப் போறவள் அவள்! பிள்ளையை முன் கூட்டியே பார்த்துட்டா! கேட்டுப் பாருங்க!"

உலகநாத முதலியார் உள்ளே சென்றார்.

அதுவரையும் கதவின் மறைவில் நின்று அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தாள் உமா.

“உமா! நீ என்னமா சொல்றே?”

“முதல்லே அவங்க பிள்ளையைக் கலந்து முடிவு எழுதச் சொல்லுங்க! அப்பறம் யோசிச்சு முடிவு எழுதறதா சொல்லியனுப்புங்கப்பா!” கச்சிதமாகப் பதில் சொல்லிவிட்டாள். அவசரப்படுவானேன்.! கல்யாணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர்! நெல்லை விதைப்பதற்குப் பதிலாகக் கல்லை விதைத்துவிடலாமா?

பெண்ணின் புகைப்படம் ஒன்றுடன் புறப்பட்டனர் பிள்ளை வீட்டுக்காரர்கள்.

குற்றால அருவியில் பொற்றாமரைக் காதல் மணக்கவற்றாது அருந்திவிட்டு வழி திரும்ப முயன்றனர் சங்கரும் சித்ராவும்.ஐந்தருவியில் பத்துமுறை குளித்து இருப்பார்கள்! ஓராண்டு பசிக்கு மூன்று தின உணவு போதுமானதாகச் செய்து விட்டது குற்றாலச் சூழல்!

இருவரும் சென்னை நோக்கிப் புறப்பட்டனர்.

வழிநெடுக அவர்களுக்கு உல்லாசமாக இருந்தது. பயணக் களைப்பே தெரியவில்லை.

சித்ரா நல்ல பேரழகி. நாட்டியக் குலத்தில் உதித்தவளானாலும் நாயகனாகவே சங்கரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அவள் அப்படித் தேர்ந்தேடுத்துக்கொண்ட உண்மையும் சங்கருக்குத் தெரியும். அவனும் கைவிட நினையாத காரிகையாகத்தான் காப்பாற்ற உறுதி பூண்டானேயொழியக் கடிமணம் செய்து கொள்ளவில்லை. குடும்பம் இடந்தராது என்பது ஒரு புறமிருந்தாலும் விஞ்ஞானப் புகழுக்கு மாசு கற்பிக்க நினையாத நெஞ்சு சித்ராவினுடையது. அவளைப் பாராட்டி வாழ்த்த வேண்டும்.

சென்னையை அடைந்ததும் சித்ராவை வீட்டில் இறக்கி விட்டுத் தன் மாளிகை நோக்கிக் காரைச் செலுத்தினான் சங்கர்.

கார் மாளிகையை அடைந்தது.

அனைவரும் சிதம்பரம் சென்று திரும்பிவிட்டதைக் கண்டு மகிழ்ந்து கொண்டான்.

வாசலில் தந்தையார் ஓர் ஆங்கிலச் சினிமாப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

“எப்போ வந்தீங்க?”

“நேற்று!”

“தரிசனம் எப்படி?”

“வரமே கொடுத்துவிட்டது.”

அப்பா ஏதோ சொல்கிறார் என்ற நினைவுடன் மாளிகையுள் சென்றான். மாடிக்குச் சென்று உடைகளைக் களைந்து விட்டு, லுங்கியும் துண்டுமாகக் கீழே இறங்கி வந்தான்.

“குற்றாலம் எப்படிடா இருந்தது?” என்று விசாரித்தாள் ராஜாமணியம்மாள்.

“குளு குளுன்னு இருந்ததம்மா!” – சங்கர் சொன்னான்.

ராஜாமணியம்மாள் தலையை மட்டும் அசைத்துக் கொண்டாள்.

சங்கர் உனக்குப் பெண் பார்த்தாகிவிட்டது,”

“அப்படியாம்மா! மூணு நாளில் அவ்வளவு மலிவாகவா பெண் கிடைத்து விட்டது!”

“கொடுப்பனை இருந்தால் நிமிடத்துலேயும் கிடைக்கும்டா.”

பெண் ரதி மாதிரி இருக்காளா?”

“இல்லை...”

“இல்லையா?”

“உமா மகேசுவரி மாதிரியிருக்கா!”

“நான் சங்கரன்...”

“நீ சங்கர்தான்டா மன்மதனில்லை.”

சங்கருக்குத் தவறு புரிந்து தானே சிரித்தான்.

“போட்டோவையும் கொண்டாந்திருக்கிறோம்.”

ராஜாமணிம்மாள் புகைப்படத்தைக் கொண்டு வந்து காட்டினாள். புகைப்படத்தைப் பார்த்ததும் பெரிதாக அதிர்ந்து போனான் சங்கர்.பிலிப்ஷ் ஜேம்ஸ் பாய்லேவைச் சுட்டிக் காட்டி பேசியவள் அல்லவா இவள்?

“ஏண்டா சங்கர் மிரள்றே?”

“ஒண்ணுமில்லேம்மா.”

“வல்லம்படுகை சிவன் கோவில் ஞாபகத்துக்கு வருதா?”

“அம்மா!”

“பின்னால்தான் கேள்விப்பட்டோம். என்ன சொல்றே!”

“பெண் பூசாரி மாதிரி..”

“நீ சரியான ஆசாமியாக இருந்தால் பெண்ணை உன்வயமாக்கு! இல்லையென்றால் அவள் உன்னை வைரமாக்கட்டும்!”

“வைரம்னா?”

“பிரகாசிக்கச்செய்யட்டும், சம்மதம்தானே?”

“சம்மதம்மா!”

பெற்றவர்கள் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. உடனே கடிதம் எழுதிப் போட்டு விட்டனர்.

ஐந்து தினங்கள் கழித்துத் தந்தி வந்தது.

“பெண்ணுக்கு இந்தத் திருமணத்தில் சம்மதம் இல்லை!”

முதன் முறையாக சங்கருக்கு ஏமாற்றம் பெரிதாக ஏற்பட்டது!”

# 4

தனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் ஒருபுறமிருந்தாலும் தாய் தந்தையரின் ஆசை நிறைவேறாமல் போனது, அவனை சங்கடத்தில் ஆழ்த்தியது. தானே நேரில் சென்று “எனக்கு என்ன குறை” என்று பெண்ணிடமே கேட்டு விடுவது என்று காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான் சங்கர்.

கார் வல்லம்படுகையை அடைகிற போது மாலை நன்றாகப்

பூத்துவிட்டது.

அக்கம்பக்கத்தில் விசாரித்துக் கொண்டு மிராசுதாரர் உலகநாத முதலியார் மாளிகையை அடைந்து காரை நிறுத்தினான். பெரிதான கார் கிராமத்தில் நுழைந்துவிடவே சின்னஞ் சிறார்கள் கூடிவிட்டனர். தெருவில் ஏற்பட்ட சத்தத்தைக் கேட்டு வெளியே எட்டிப் பார்த்தாள் உமா. அவ்வளவுதான். அவளே மலைத்து, ஒரு கணம் சிலைத்துப் பின்னர் தலையை இழுத்துக் கொண்டாள். சங்கரே இப்படித் திடுதிப்பென்று வந்து விடுவார் என்பது அவள் கொஞ்சமும் எதிர்பாராதது. தந்தை வேறு வீட்டில் இல்லை. வயல்களைப் பார்வையிட வெளியே சென்றிருந்தார்.

உள்ளே நுழைந்த சங்கர் சுற்றுமுற்றும் கவனித்தான். என்ன இருந்தாலும் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி, தன் வீடு தேடி வந்த பிறகு....

“வாங்க... உட்காருங்க! அப்பா வயலைப் பார்வையிடப்போயிருக்கிறார்? இப்ப வந்து விடுவார்!” உமா உள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

சங்கர் குரல் வந்த திசையைக் கூடப் பாராமல் கூடத்தில் இருந்த பிரம்பு சோபாவில் அமர்ந்தான்.

சற்றைக்கெல்லாம் சூடு பறக்கக் காபி கொண்டு வந்து எதிரே வைத்தாள். “காப்பி குடிக்கிற பழக்கம் இருக்கல்லவா?”

சங்கர் பதில் சொல்லவில்லை.உமா உள்ளே சென்று விட்டாள். எதிரே வைத்தாள். காபி அப்படியே இருந்தது.

வயல்வரை செய்தி எட்டிவிட்டது.

கேள்விப்பட்ட உலகநாத முதலியார் யாரோ எவரோ என்று பறந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார்.தெருவாசலில் நின்ற பெரிய காரைப் பார்த்தார். அவசரமாக உள்ளே சென்றார். கூடத்தில் அமர்ந்திருந்த சங்கரைக் கண்டதும் முதலில் புரியவில்லை.

சங்கர் எழுந்து வணங்கி நின்றான்.

உலகநாத முதலியாருக்கு இப்போது புரிந்து விட்டது. மறு வணக்கம் செய்து, ‘வாங்க! எப்ப வந்தீங்க...இருங்க!’ என்றார் அன்புடன்.சங்கரே தன் வீடு தேடி வந்ததை அவர் ஒரு பாக்கியமாகவே கருதினார்.

சங்கர் அமர்ந்தான். உலகநாத முதலியாரும் உடன் அமர்ந்தார். எதிரே அப்படியே இருக்கும் காபியைக் கண்டு “ஏன் ? காபி சாப்பிடலயா?” என்றார்.

பிறகு தலையைத் திருப்பி மகளை கூப்பிட்டுக் கேட்கலாம் என்று வாயை திறக்க முனைந்த போது-

பூசை மணி கணகணவென்று ஒலிக்கத் தொடங்கிறது. பூசையறையில் மாலைப் பூசை நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான் சங்கர்.

உலகநாத முதலியாரும், “என் பெண் ரொம்பவும் ஆர்த்தடாக்ஸ்!” என்றார்.

சங்கரும் “அதனால்தான் நான் அவளை விரும்புகிறேன்” என்று கூறி முடித்தான். சாமர்த்தியமான பதில்தான்.

பூசை மணி ஒய்ந்தது.

“என் வீடு தேடி வந்திருக்கீங்க! என்ன விஷயமோ”என்று பேச்சைத் தொடங்கினார் உலகநாத முதலியார்.

“ஒண்ணுமில்லை; உங்க மகளுக்கு என்னைப் பிடிக்கலைன்னு தந்தி வந்தது. என்ன காரணம்னு கேட்டு விட்டுப் போகலாம்னு புறப்பட்டேன்!” என்றான் சங்கர்!

“அதோ அவளே வந்து விட்டாள்! அவள் கிட்டேயே கேட்டுக்கிங்க!”

“என்னப்பா...” உமா அருகே வந்தாள். அவளைக் காண சாட்சாத் மகேசுவரியைப் போலிருந்தது.

“ஒண்ணுமில்லேமா...ஏன் சம்மதமில்லேன்னு கேட்கஅவரே வந்திருக்காரு!”

“நாத்திகருக்கு ஒரு ஆத்திக மனைவியா? இது புரியவில்லையா?”

சங்கர் கோபமாகக் குறுக்கிடடான்: “நான் நாத்திகன் என்று எந்த மடையன் சொன்னான்?”

“பத்திரிகை!”

“இன்றைய பத்திரிகைகள் நம்ப முடியாத சாசனங்கள். நான் விஞ்ஞானி. தத்துவத்தைக் கடந்தவன்.என் நெஞ்சில் நம்பிக்கை எழவில்லை.அவ்வளவே!”

“அதற்குப் பெயர் என்னவாம்?”

“தன்வரை நம்பாமல் இருப்பது ஒரு யோகம்! பிறரைக் கெடுக்கப் பிரசாரம் செய்வது கொள்கை! வித்தியாசம் புரியவில்லையா, பிலிப்ஸ் ஜேம்ஸ் பாய்லேக்கு!”

“அறிவுக்கு எல்லையில்லை; வாழ்வுக்கு ஆயுள் உண்டு.”

“நான் வாதம் புரிய வரவில்லை!”

உலகநாத முதலியார் குறுக்கிட்டார்!”

“என்னம்மா, உன் பாட்டுக்கு பேசிக் கொண்டிருக்கிறாய்?

“என்னை நாட்டுப்புறத்தாள்னு நினைச்சவருப்பா இவரு! நாட்டுப்புறத்திலும் ஷேக்ஸ்பியர்கள் உருவாகலாம்ங்கிறதை சொல்லத்தான்!”

“நான் அன்றைக்கே என் மன அளவில் மன்னிப்புக் கேட்டுவிட்டேன்!”

“மகிழ்ச்சி!”

“என் அப்பா அம்மா மகிழ்ச்சியடைய வேண்டும்.”

“அவங்களுக்கு என்ன குறை?”

“நீ மருமகளாக வராதது?”

“அவங்களுக்கு மருமகள் பார்க்கத்தான் நீங்க வந்திருக்கீங்களா?”

“ஓர் உத்தமமான பிள்ளை இதைத்தான் செய்வான்!” வாயடைத்துப் போனாள் உமா.

“நீ எதை விரும்புவாய்?”- சங்கர்.

“ஓர் உத்தமமான பெண் மனைவியாக வாழத்தான் முதலில் விரும்புவாள். ஆனால் உங்கள் வழி வேறு; என் வழி வேறு.”

“எனக்கும் புரிகிறது, உமா! நான் உன் கொள்கையில் தலையிட மாட்டேன்; என் தாய் உன்னைவிட பக்தை! தந்தை ஒரு புராணிகர் மாதிரி. ஆனால் எனக்கு மனைவியாக நிற்கிற போது நான் ஏதாவது குறுக்கிடலாம். நீ வாதித்து என்னை வெல்லலாமே! ஏன்? உனக்குச் சாமர்த்தியமிருந்தால் என்னை ஆத்திகனாக்கு என்று

சொல்லவில்லை. ஏனென்றால் நான் நாத்திகனில்லை. விஞ்ஞானத்தைவிட பக்தி செலுத்துவது பிரதானம்ங்கிறதை நீ நிரூபித்து எனக்கு நம்பிக்கையூட்டலாம் அல்லவா?”

“போராடவா நான் மனைவியாகணும்? இதுவா என் வேலை?”

“போராடி வெல்பவள்தான் சரித்திரப் பெண்மணி. நீ என்னை வென்றுவிடு. ஏன் ஒரு சவாலாக ஏற்று வாழ்க்கைப் படு. ஒருகால் நான் செய்யற மூளையாரராய்ச்சி, உன் வாதத்தால் முழுமையடைந்தாலும் ஆச்சிரியபப்ட்டறதுக்கு இல்லையல்லவா?

வெகு நேரம் யோசித்த உமா ஒருவாறு முடிவுக்கு வந்து “ஒப்புதலைத் தெரிவித்து விடுங்க அப்பா” என்று கூறி உள்ளே சென்றாள்.

சங்கர் மகிழ்ச்சியுடன் எழுந்து கொண்டான்.

“எங்கே எழுந்துக்கிட்டிங்க?” என்றார் உலகநாத முதலியார்.

“நேரமாகிறது நான் புறப்படத் தேவலையா?”

“இந்த இருட்டின வேளையிலா?”

“இரவு தங்குவது சரியில்லை.”

உலகநாத முதலியார் மறுக்கவில்லை.

“சாப்பிட்டுப் போகலாமே!”

“அதுவும் முறையில்லை. தண்ணீரும் அருந்தக்கூடாது. ஆனாலும் உமா ஒப்புக் கொண்டதற்காக இந்த ஆறிய காபியைக் குடித்துவிட்டுப் புறப்படுகிறேன்.”

“இருங்க... சூடாவே கொண்டு வரச் சொல்றேன்.”

“தேவையில்லை. உமா முதன் முதல்லே தன் கையாலப்போட்டுக் கொண்டு வந்த காபி.எங்கள் வாழ்க்கை குளுமையாகவே ஆரம்பமாகட்டும்!”

சங்கர் காபியை எடுத்து அருந்திவிட்டுச் சொல்லிக் கொண்டு புறப்பட்டான். அப்போது அவனுடைய கண்கள் அண்ணாந்து நோக்கின.எதிரே நடராசப் பெருமாளின் படம் பெரிதாக மாட்டப்பட்டிருந்தது.

பெற்றவர்கள் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை என்றுதான் சொல்ல

வேண்டும். மகன் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பிவிட்டானே!

நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறிப்பிட முனைகிற போது, திருமண மேடையில் நிச்சயதார்த்தத்தை வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவு ஏற்பட்டது.

ஒரு சுபயோக சுபதினத்தில் சென்னையில் கோலாகலமாகத் திருமணம் நடந்தேறியது. மதுரை சோமுவின் கச்சேரியும் அமர்க்களமாக நடந்து முடிந்தது.

திருமணத்துக்குச் சித்ரா வரவில்லை. வரக்கூடாது என்பது பெற்றோரின் கட்டளை. எனவே அவள் வரவில்லை. வருவதும் நியாயமில்லை என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். காதலியாக இருப்பதிலேயே ஒரு நிறைவு – ஒரு நிம்மதி காண விழைந்துவிட்டவளாயிற்றே!

மகளையும் மருமகனையும் அழைத்துக் கொண்டு வல்லம் படுகைக் கிராமத்துக்குப் புறப்பட்டார் உலகநாதமுதலியார்.முதலிரவைச் சென்னையில் நடத்தி விட்டால் போதுமானது என்றுதான் சந்திரசேகரன் விரும்பினார். அவ்வளவு தூரம் சென்றுதிரும்ப வேண்டுமே!

ஆனால் உலகநாத முதலியார் ஒப்புக் கொள்ள வேண்டுமே ! அப்படிச் செய்வது அவருடைய மிராசுதார் கவுரவத்துக்கு இழுக்கல்லவா?

முதலிரவு தம்பதிகளுக்காக இனிக்கக் காத்துக்கொண்டிருந்தது.

அது-

இனிக்கக் காத்துக் கொண்டிருந்ததோ?

கசக்கத்தான் காத்துக் கொண்டிருந்ததோ?

# 5

வண்ண வண்ணமான பூக்களைக் கொண்டு அலங்கரிக்கப் பெற்றிருந்தது முதலிரவுக் கட்டில்!

மனித வாழ்வில் அலங்கரிக்கப்படுவதே மூன்று. ஒன்று பிறந்ததும் தொட்டில்; வாழ்வில் புகும் போது கட்டில்; மரணத்தில் பாடை! வேறு என்ன அலங்காரங்களை அவன் கண்டு விடுகிறான்?

சாளரத்து வழியாக வளர்பிறை நிலவு ஒளித்தாண்டவம் புரிந்து கொண்டிருந்தது. கட்டிலுக்கருகே முறைப்படி – வழக்கப்படி வைக்கப் பெற்றிருந்த பண்டு பலகாரங்களைக் கவனித்த வண்ணம் காத்திருந்தான் டாக்டர் சங்கர்.

சற்றைக்கெல்லாம் கிராமப் பெண்கள் அனைவரும் உமாவுக்குத் துணையாக நின்று அலங்கரித்து அறையினுள் தள்ளி விடை கொடுத்தனர்.

கதவைத் தாழிடக் கூட மறந்தவளாய் இரண்டடி முன் வைத்து, சிலைபோல நின்று கொண்டிருந்தாள் உமா. அவளுடைய கண்கள் தரையில் நிலைகுத்தி நின்றன.

நாணமாக நிற்கும் மனைவியை மழைத்து வந்து பக்கத்தில் அமர்த்த எழுந்தான் சங்கர். நேரே கதவண்டை சென்று தாழிட்டான். பின்னர் தோளில் இதமாகப்பற்றிக் கட்டிலின் அருகே அழைத்து வந்தான்.பார்க்கப்பளிங்குப் பதுமை போலிருந்த மனைவியின்பால் அவனுக்கு ஆசை அளவு கடந்திருந்தது.

கட்டிலில் அமர்த்தி மோவாயைப் பற்றி நிமிர்த்தி அந்த நிலவு வெட்கும் முகத்தை ஆவலுடன் நோக்கினான் அங்கே- இதயமே பிசைந்து வேதனை அளிக்கக்கூடிய காட்சியைக் கண்டு ஒரு விநாடி மருண்டு பின்னர் தேற்றிக் கொண்டான். எடுத்த எடுப்பில் குழப்பத்துக்கான வாதத்திலோ, குமுறலுக்கான ஆரம்பத்தையோ அவன் விரும்பவில்லை.

“உமா என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?” அன்புடன் தாடையைக் கிள்ளிக் கேட்டான்.

உமா பதில் சொன்னாள்; “இன்னும் பழக வில்லையே!”

“உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது.”

“நீங்கள் பழகி விட்டீர்கள்!”

“உமா...உனக்கு இந்தத் தெய்வபக்தி எப்போது முதல் ஆரம்பம்?”

“உங்களுக்கு எப்போது முதல் வெறுப்பு?”

“வெறுப்பல்ல; எனக்குத் தேவையில்லை என்கிற முடிவு!”

“அந்த முடிவுதான் எப்போது முதல்னு கேட்கிறேன்!”

“நான்காண்டுகளா!”

“எனக்கு நான்கு வயசு முதல்!”

“நான் விஞ்ஞானமா படிச்சிருக்கேன்? தமிழ்!”

“விஞ்ஞானம் படிச்சவனுக்கெல்லாம் இப்படியான தெளிவு பிறந்து விடுகிறதுன்னு சொல்லிவிட முடியாது. நான் கடந்த நிலைக்குப் போய்விட்டேன்; ஏன் நானே கடவுள்!
தாமஸ்பெயினைத்தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்! அவன் சொல்கிறான்

“மனிதா! உன் பெயர் கடவுள்!”

“என் பெயர் உமா!”

உற்றுக் கவனித்தான். உமா ரத்தினச் சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டாள்.

“உமா ஒரு வேண்டுகோள்!”

“என்ன வேண்டுகோள்?”

“நான் முன்னமே சொன்னேன்; நீ என்னைச் சார்ந்திருக்கப்ப என் கொள்கைப்படி நடக்கணும்! நீ வீட்டைச் சார்ந்திருக்கப்ப உன் கொள்கைப்படி நடந்துக்கலாம்!”

“இப்ப நான் என்ன உங்கக் கொள்கையில் மீறியிருக்கேன்?”

“சொன்னா செய்வியா?”

“முடிந்தால் செய்வேன்!”

“நெற்றியில் குங்குமம் அணிவது சுமங்கலிச் சின்னம். நான் அதை மறுக்கலை. ஆனா இந்தப் பட்டை இழுத்திருக்கிறது எனக்குப் பிடிக்கலை.”

“திருநீற்றைச் சொல்றீங்களா?”

“திருநீறோ, சாம்பலோ...என்னைப் பயமுறுத்தறாப்பிலேஇருக்கு!”

“இப்ப என்ன செய்யச் சொல்றீங்க?”

“அழிச்சிட்டுவான்னு சொல்றேன்!”

“என் உயிரை வேணும்னா அழிச்சிக்கிறேன். பின்னால் நீங்க இந்தத் திருநீற்றை அழிச்சிடலாம்!”

"உமா...!"

"ஆமாம்; என் உடன்பிறந்தது அது. என் தெய்வச்சின்னம் அது சாகிறவரை அது நெற்றியில் நிறைந்து இலுக்கணும். அது இருக்கிற வரைக்கும்தான் குங்குமம் என்னோடு நிலைக்கும். அப்படி ஒரு மன நம்பிக்கை."

"அதை அழிச்சா?"

"குங்குமமும் அழிஞ்சிடும்!"

"பிறகு இட்டுக்கிறது!" கண் கலங்க கணவனை நோக்கினாள். "நீங்க இருந்தாத்தான் அதுக்கு மதிப்பு."

"விபூதிக்கு மதிப்பில்லையே!"

"அது இருந்தாத்தான் குங்குமத்துக்கே மதிப்பு!"

"யார் சொன்னது"

"ஒருநாள் கனவில் என் தெய்வம் நடராசமூர்த்தி சொன்னார்."

"கனவு என்பது பித்தம்!"

"வாழ்க்கையே பித்தம்தான். அது தெளிய மருந்துதான் தெய்வம்!"

"நான் ஒப்புக்கறேன் உனக்காக! நான் தெய்வத்தை மறுத்தாதானே மருந்துக்கு மாரடிக்கணும்!"

"சரி என்னை என் போக்கில் விட்டு விடுங்கள்."

நீ வீட்டுக்கு மருமகளா இருக்கிறப்ப உன் போக்கில் நான் குறுக்கிடமாட்டேன். எனக்கு மனைவியா இருக்கிறப்பா நான் குறுக்கிட்டே தீருவேன். இப்பக்கூட என்ன சொல்றேன்? என்னோட நடமாடறப்ப இந்தப் பட்டை விபூதி தேவையில்லைன்னு சொல்றேன்!"

"என்னால் எடுக்க முடியாத விஷயத்தை வற்புறுத்தாதீர்கள்! தலை வாராமல் இருக்கச் சொல்றீங்களா... இருக்கேன்; ஆனா பூ வைக்காமல் இருக்க முடியாது. அப்படியானதுதான் இதுவும்."

"மறுபடியும் சொல்றேன் உமா!"

"மறுபிறவியில் சொன்னாலும் என் சிவச் சின்னத்தை நீக்க முடியாது.

நீங்கள் விஞ்ஞானியாக இருங்கள்; நான் மதவாதியாகவே சாகிறேன்.”

“முடியாதா?”

“முடியாது!”

“முடியாதா?”

முடியாது!”

“அப்படி என்றால், இந்தக் கட்டிலில் உனக்கு இடம் இல்லை. என்றைக்கு நீ இது முடிகிற காரியம்தான் என்று ஒப்புக் கொண்டு வருகிறாயே, அன்றைக்கு இந்தக் கட்டில் இனிக்கும்!”

உமா ஒரு கணம் - ஒரே கணம்தான் சிலையானாள். மறுகணம் வெறுமையாகச் சிரித்தாள்.

“கசப்பையும் இனிப்பாக்கிக் கொள்கிற பக்குவத்துக்கு வந்துவிட்டவள் நான். உங்களால் சித்ரா இல்லாமல் இருக்க முடியாது; என்னால் சிவம் இல்லாமல் இருக்க முடியாது.”

“உமா!”

ஆச்சரியப்படாதீர்கள்! கேள்விப்பட்டேன். தெரிந்தும் நான் உங்கள் வாழ்வில் குறுக்கிடவில்லை. அது உங்கள் சுயவிருப்பம்.ஆனால் நான் தர்மத்துக்குக் கட்டுப்பட்டு இருக்கிறேன். குறுக்கிடறீங்க! பரவாயில்லை. கட்டில்லே தானே இடமில்லே; அந்த இதயத்துலே இடமிருக்கே அது போதும்!”

உமா எழுந்து சென்று தரையில் படுத்துக் கொண்டாள். அவளுடைய திடத்தைக் கண்டு வெகுநேரம் அரண்டு கவனித்தான் சங்கர்.

இரவு முழுவதும் இருவருமே தூங்கவில்லை. முதலிரவு முழுமை பெறாத இரவாக கரைந்தது. பொழுதும் விடிந்து விட்டது.

மூன்றாம் நாள் சென்னைக்குப் புறப்பட வேண்டியிருந்தது.கிராமத்தவர்களும் அவர்களை வழிகூட்டி அனுப்புகிறவரை துணையாக இருந்தார்கள். மிராசுதாரர் வீட்டு விசேஷமாயிற்றே!...சீர் வரிசைகளை அமர்க்களமாக நடத்தினார் உலகநாத முதலியார். ஒரே பெண்; சொல்லப் போனால் கையில் பணமில்லை. எல்லாமே நிலபுலன்களாக இருக்கின்றன. எனவே கடன் வாங்கினாலும் உமாவுக்குத்தானே செய்கிறார்.!

எல்லாவற்றையும் லாரியில் போட்டு அனுப்பிவிட்டு, காரில் புறப்பட

ஆயத்தமாயினர். காரின் முன்சீட்டில் அவளை அமர்த்திக் கொள்ள அவன் விரும்பவில்லை. நெற்றியில் திருநீறு தும்பைப் பூப்போலப் பளிச்சென்று காட்சி தந்தது.

உமா கிராமத்து முக்கியமானவர்களிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள். முடிவில் தந்தையிடம் சொல்லிக் கொண்டாள். அவளுடைய கண்கள் பரிதாபமாகக் கலங்கின. உலகநாத முதலியாரும் பிரியாதிருந்த பெண்ணைப் பிரிகிற ஆற்றாமைதாளாமல் அழுதுவிட்டார். பெண்ணைப் பெற்றாலே பிரிய வேண்டியதுதானே!

கார் நல்ல சகுனம் நோக்கிப் புறப்பட்டது. சகுனம் பார்த்து அனுப்பியவர் உலகநாத முதலியார்.

# 6

"வ வலது காலை முன்னே வச்சுவாம்மா!" என்று அன்புடன் ஆணையிட்டாள் ராஜாமணியம்மாள். உமாவும் ஆலம் சுற்றிய பிறகு வலது காலை முன் வைத்துப் புக்ககம் புகுந்தாள்.

அன்று வெள்ளிக் கிழமையாதலால் முகூர்த்தத்தேங்காயை உடைத்துப் பூஜை நடந்தது மருமகள் வந்தராசி குடும்பம் செழிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர். யாருக்காகவும் இல்லாவிட்டாலும் பெற்ற தாய்க்காக அந்தச் சில நிமிடங்கள் பூசையறையினுள் நின்று கொண்டிருந்தான் சங்கர் உமாவுக்கே வியப்பாக இருந்தது. உள்மனதில் சற்றே தெளிவு.இவரை விட்டுப் பிடித்துவிடலாம். இவர் மனம் திருந்தக்கூடியதுதான். என்றாவது ஒரு நாள் கட்டிலில் இடம் கொடுத்தே தீருவார்.

சொல்லப் போனால் இந்த நான்காண்டுக்குப் பிறகு அவன் முதன் முறையாகப்பூசையறையினுள் நுழைந்து நின்றான். ஆனால் கைகூப்பி வணங்கவோ, பிரார்த்தனை செய்து கொள்ளவோ அவனுடைய நெஞ்சு இடம் கொடுக்கவில்லை.

அன்று மாலை ஓர் ஆங்கிலத் திரைப்படத்துக்குப் புறப்பட்டான் சங்கர் உடன் உமாவை அழைத்துச்செல்வான் என்றுதான் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவன் சட்டை செய்யவில்லை. உமாவும் அதுபற்றிக் கண்டு கொள்ளவில்லை.

ராஜாமணியம்மாள் மட்டும் "ஏண்டா, உமாவையும் அழைத்துக் கொண்டு போக வேண்டியதுதானே?" என்றாள்.

சங்கர் கலகலவென்று சிரித்தான்.

“ஏண்டா சிரிக்கிறே?”

“எனக்கும் அவளை அழைச்சிட்டுப் போகணும்னுதான் ஆசை. ஆனா!...அவள் நெற்றிப் பட்டையாகத் திருநீறும் வேஷமும் ஏதோ ஒரு பண்டாரப் பொண்ணு மாதிரி தெரிகிறாளேயொழிய, ஒரு விஞ்ஞானியின் மனைவியாகத் தெரியவில்லை. யாராவது பார்த்தா என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க?”

“நினைக்க என்ன இருக்கு? நம்ம பண்பாடுன்னு ஒண்ணு இருக்கப்பா! அதுப்படி திருநீறு அணியறதும் குங்குமம் வைக்கறதும் அசிங்கம்னா... அப்புறம் நீ மேல் நாட்டுப் பெண்ணைக் கட்டிக்கிட்டு வந்திருக்கணும்!” சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.குறுக்கிட்டார்.

“எது அந்தஸ்து, எது அந்தஸ்து இல்லைன்னு புரிய நம்பங்களுக்கு இன்னும் நாகரீகம் வரலைன்னுதான் தெரியுது. நீ போகலாம்.” சந்திரசேகரன் உள்ளே போய்விட்டார். சங்கர் புறப்பட முனைந்தான்.

அப்போது-

“சங்கர் இப்படி வாப்பா!” தாயார் உள்ளே அழைத்தாள். அறையினுள் தனியாக மகனை அழைத்துச் சென்ற ராஜாமணியம்மாள்,” சங்கர்! இத்தனை நாளா நான் எதுபத்தியும் பேசியது கிடையாது. நீ படித்தவன். இப்போ நீ கல்யாணமானவன். வெளியுலகத்தில் நீ மனைவியைக் கைப்பிடித்த பிறகு. இன்னொருத்தி –அவள் கல்லூரி சிநேகிதியானாலும் அவர்கூட நின்று பேசறதுகூட குடும்பத்துக்கு அவமானம். நான் சொல்றது உனக்குப் புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். அது மட்டுமில்லே...நீ உன் பெண்டாட்டியைப் பற்றி இன்னொருத்திக்கிட்டே விமர்சிக்கிறது கூட நாகரீகமாகாது. அவளுடைய பெயர்கவுரவம் எதுவும் இந்த வீட்டு வாசற் படிக்குள்ளேயே இருக்கணும். நீ விஞ்ஞானி. உனக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை.”

இருவரும் வெளியே வந்தனர். அன்னை எதற்காக இப்படி சுற்றி வளைத்துத் தொட்டுக் காட்டினாள் என்பது சங்கருக்குப் புரிய அதிக நேரம் பிடிக்கவில்லை.அவன் புறப்பட்டு விட்டான்.

காசினோ தியேட்டரில் அவுஸ்புல் என்றிருந்தது. மற்றபடி அவனுக்குத் தழிழ்ப்படங்களில் நாட்டமில்லை. அரைத்த மாவையே அரைத்துக் கொள்ளும் ஒரே ரீதியான படங்களைப் பார்க்க அவனுடைய மனம் இடம் தரவில்லை. நேரே காரை தியாகராயநகர்

நோக்கிச் செலுத்தினான்.

கார் சித்ரா வீட்டு வாசற்படியில் நின்றது. உள்ளே சென்றான். திருமணமாகி அவன் இன்றுதான் சித்ரா வீட்டுக்கு வருகிறான். சித்ரா அலங்கரித்துக் கொண்டிருந்தாள். எங்கோ வெளியில் புறப்படப் போகிறாள் என்பது தெரிய வந்தது.

சங்கரைக் கண்டதும் சித்ரா ஓடோடி வந்து வரவேற்றாள். “வாங்க? இப்பத்தான் இந்த வீட்டு விலாசம் நினைவுக்கு வந்ததா?”

“இந்த விலாசத்தை என்னால் மறக்க மடியுமா சித்ரா! நீ என்ன என்னோட காமக் கிழத்தியா! நீ தான் அப்படியானவளா? என் புகழை நீ மணந்தாய்; உன் கலையை நான் மணந்தேன்.”

“இது உங்கள் சகதர்மிணியாளுக்குத் தெரியுமோ.”

“சித்ரா ! பேச்சு நம் இருவரைப் பற்றியது. அவளை நான் வாரிசுக்காக மணந்து கொண்டவன். உன்னைப்பற்றி அவளறிந்து கேட்டாலும் நான் இப்படித்தான் பதில் சொல்வேன்.”

“எப்படி?”

“அது என் கலை! தலையிடாதே!” சித்ரா வாயடைத்துப் போனாள்.மேலும் மனையாளைப் பற்றிச் பேச அவன் நாமறுத்தது. அன்னை ராஜாமணியம்மாள் சங்கரின் கண்முன் நின்றாள்.

“சித்ரா! எங்கே புறப்பட்டுட்டே?”

“சினிமாவுக்கு ! வாங்க போவோம்!”

“எந்த சினிமாவுக்கு?”

“ராஜகுமாரிக்கு!”

“அவசியமா?”

“ஏன் அப்படிக் கேட்கிறீங்க!”

“எனக்கு மூட் இல்லை.”

“அப்ப நானும் போகலே!”

சங்கர் சிரித்துக் கொண்டான்!”

தன்பால் இவளுக்கிருக்கும் அன்பை என்னென்பது? இருவர்க்கும்

குளிர்ந்த பானம் வந்தது. அருந்தினர்.கடிகார முள் அவர்களைச் சுற்றி மும்முறை வலம் வந்தது. சங்கர் வீடு நோக்கிப் புறப்பட்டான். வாசலில் காவற்காரன் கண்விழித்திருந்து வரவேற்றான். வீட்டில் அமைதி. பெற்றவர்கள் உறங்கச் சென்று விட்டனர். உமாதான் கண்விழித்துக் காத்திருந்தாள். எங்குச் சென்றுவருகிறான் என்பது அவளுக்குத் தெரியாது. ஆனால் சித்ரா என்ற யாரோ ஒரு தொடர்புள்ளவளைக் கண்டுதிரும்பி இருக்க வேண்டும் என்பது மட்டும் புரிந்தது.

அறையினுள் சென்று உடைகளைக் கழற்றிவிட்டு சாப்பாட்டு அறைக்கு வந்தான். உணவு தயாராக இருந்தது.

“குளிக்கணுமா?” உமா கேட்டாள். அவள் கேட்டதில் அர்த்தமிருந்தது.

“இப்ப ஏன் குளிக்கணும்” –சங்கருக்கு முதலில் புரியவில்லை.

“தூய்மை தவறினால் வீடு துடைக்கும்னு சொல்லுவாங்க!” சங்கருக்குப் புரிந்து விட்டது. முதலில் கோபமாகப் பார்த்தான். “நீ பிடிக்கிற இடத்துக்கு அதுதானே காரணம்?” என்று சொல்லத்தான் வாய் திறந்தான். ஆனால் அவன் அவ்வாறு சொல்லவில்லை. “அது எனக்கும் தெரியும்” என்று கூறிச் சாப்பிடத் தொடங்கினான். சாப்பிட்டுக கொண்டே மனைவியின் முகத்தை அண்ணாந்து கவனித்தான். அங்கே மல்லிகைப்பூ நிறத்தில் திருநீறு துலங்கியது. “உமா, உறங்குகிற போதும்கூட இப்படி நீ சிவ பக்தையாகக் காட்சி தர வேண்டுமா?”

“உங்களுக்குஉறவு கொள்கிற எந்த நேரத்திலும் அது இருக்க வேண்டும். இது எனக்கு மட்டுமல்ல; உங்களுக்கும் கவசம்!”

“கவசமா? புரியும்படியாகச் சொல்லாமே உமா!”

“உங்களுக்கு அற்பாயுள்!”

ஆச்சிரியமுடன் அண்ணாந்து கவனித்தான் சங்கர் உமா! உனக்கு என் ஜாதகத்தைப் பத்தி எப்பிடித் தெரியும்? அம்மா இதை அனுப்பப் பயந்துதானே ஜாதகம் எழுதுகிறபழக்கம் இல்லைன்னு சொல்லிட்டாங்க !எனக்கு இந்த மூடநம்பிக்கையில் நம்பிக்கை இல்லை. ஆனால் அம்மா அப்பா இதைக் கட்டிக்கிட்டு அழறாங்க! இந்த ரகசியம் உனக்குத் தெரியக் காரணம்?”

“நான் சிவப்புதல்வி!”

“மந்திரமாகச் சொல்லாதே! மனம் விட்டுச் சொல்!”

“அது ஒரு தெய்வீகக் கதை; சொன்னால் நீங்க நம்பமாட்டீங்க!”

“சொல்; முடிந்தால் நம்புகிறேன்.”

உமா சொல்லத் தொடங்கினாள்.

# 7

உமா, தெய்வீகக் கதையைச் சொல்லுமுன் சுற்று முற்றும் கவனித்துக் கொண்டாள். சொல்லப் போகிற கதைக்காக அல்ல; கணவன் மனைவி உறவு சம்பந்தமாக இதுவரை பேசியது யார் காதுகளிலாவது விழுந்திருக்குமா என்கிற பயம்!

யாருமில்லை, மாமனாரும் மாமியாரும் உறங்குகிறார்கள். உமா சொல்லத் தொடங்கினாள்: “மூன்று ஆண்டுகளுக்கு முன் வேலூருக்குப் பக்கத்திலிருக்கும் ரத்தினகிரிக்குச் சென்றிருந்தேன்.”

“எந்த வேலூர்? காட்பாடிக்குப் பக்கத்திலிருக்கும் வேலூரா?”

“ஆமாம்; அந்த ரத்தினகிரி மலையில் ஒரு மகான் பெயர் பாலமுருகனடிமை. மந்திர மாய வித்தைகள் செய்யாமல் மக்களுக்காகவே பிரார்த்தனை செய்கிறஞானி; அவரை நாடிச் சென்று எனக்கு வரக்கூடிய கணவனைப் பற்றிக் கேட்டேன்!”

“என்ன சொன்னான்?”

“நா காக்க!”

“சாரி! என்ன சொன்னார்?”

“வரக்கூடய கணவன் உலக மேதையாக இருப்பார். ஆனால் அற்பாயுள்” என்று எழுதிக் கொடுத்தார். நான்துடி துடித்துப் போனேன். கண்கலங்கிக் காலில் விழுந்துபரிகாரம் கேட்டேன். அவர் சொன்ன பரிகாரம்தான் “எந்த நேரமும் நெற்றியில் சிவச் சின்னத்தை அணிய மறவாதே! இது எமனை விரட்டும்” என்பது!

“நீ நம்புகிறாயா?”

“நம்பித்தானே கட்டிலைத் துறந்தாலும் கழுத்தில் கட்டிய தாலியைக் துறக்க மாட்டேன் என்று பிடிவாதமாக இருப்பது.”

“வெறும் பித்தலாட்டம்.”

“பலரும் அப்படித்தான் முதலில் சொன்னார்கள். கர்ப்பூரத்துக்கும் கதிகெட்ட அந்தக் கோயிலைக் கனகாபிஷேகமாக ஆக்கி இருக்கிறார் என்றால் சக்தியில்லாமலா?” “நீ என்னை மறுத்ததும் அதுக்காகத்தானே?” “ஆமாம்; நீங்கள் என்னைப் பார்க்க வருவதற்கு முன்தினம்தான் சுவாமிகளிடமிருந்து கடிதம் வந்தது.”

“என்ன வந்தது?”

“ஏற்றுக்கொள் : சக்தி வேல் காக்கும்!”

“அணுகுண்டை விடப் பெரிய குண்டு!”

“நீங்கள் விஞ்ஞானி! மூளையைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர். நான் மூளையே இல்லாதவள். நீங்கள் இதையும் ஆராய்ச்சி செய்யுங்கள்! என்றைக்கு எனக்கும் மூளையிருக்கிறது என்று நம்புகிறீர்களோ அன்றைக்குக்கட்டிலில் இடம் தரலாம். அதுவரை நான் தாலி கட்டிய கன்னியாகவே இருப்பேன். தாம்பத்திய உறவு பெரிதல்ல; தாலி!”

சங்கர் உண்டு முடித்தான்.

நேரே மாடிக்குச் சென்றான். உமாவும் பின் தொடர்ந்து சென்றாள்.

அதுவரையிலும் ஒருமருங்கே நின்று இதனை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரசேகரனுக்குக்கண்கள் கலங்கி விட்டன. மனம் பதைபதைத்தது.

மாடிக்குச் சென்ற சங்கர், உமாவைக் கைப்பிடித்து இழுத்தான். “உமா! தயவு செய்து கட்டிலுக்காகவாவது நீ உன் விரதத்தைக் கலைக்கலாமே!”

“அப்படியானால் வெளியுலகிற்கு என்னை அழைத்துச் சென்று ஒரு மனைவிக்கு ஏற்படுகிற மகிழ்ச்சியை அளிப்பீர்களா?”

“அது முடியாது; என் ஆராய்ச்சிக்கு அது பங்கம் விளைவிக்கும்.”

“எந்த விதத்தில்?”

“நான் இயற்கையோடு போராடுகிறவன்!”

“இது இயற்கைக்கு மாறுபட்டதா?”

“மூட நம்பிக்கைக்கு விருந்து வைப்பது. உமா! நான் இறப்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. உன் அபரிமிதமான அழகை – அன்பை அனுபவிக்க வேண்டும்!”

“வெறும் தீபத்தில் ஒளியில்லை. திரி முக்கியம். நான் அதை இழக்க மாட்டேன். என் இதயத்தில் எரிகிற தீபம் அணையச் சம்மதிக்க மாட்டேன். என்னை ஒரு வேலைக்காரியாக நீங்கள் நடத்தினாலும் நான் சம்மதிப்பேன். விதவையாகத் திரிந்து வர உடன்பட மாட்டேன். விருப்பமிருந்தால் ஏற்றுக் கொள்ளுங்கள். வெறுப்பிருந்தால் நான் இப்படியே வாழ்ந்து என் கதையை முடித்துக் கொள்ளுகிறேன்.”

“உமா! அந்த ரத்தினகிரி சுவாமிகளைப் பிய்த்துவிட வேண்டும் போலத் தோன்றுகிறது.”

“காந்தியைச் சுட்ட நாடுதானே இது! நன்மைக்குக் காலம் கிடையாது. உங்களுக்கு இப்படித் தோன்றியதற்காக நான் கோபப்படவும் இல்லை.”

உமா கீழே போட்டிருந்த பாயில் படுத்துக் கொண்டாள்.

“உமா! நாளைவரை உனக்குக் கெடு தருகிறேன். நீ சம்மதித்தால் இந்த அறை; சாப்பாடு பரிமாற்றம்;யாவும்!”

“இப்போதே வேண்டுமானால் நான் அடுத்த அறைக்குச் சென்று விடுகிறேன்.ஆனால் மாமா மாமிக்கு நம் போராட்டம் தெரியக்கூடாது. தெரிவது நல்லதல்ல.”

சங்கர் அதற்குமேல் ஒன்றையும் பேசிக் கொள்ளவில்லை. அவன் கட்டிலில் சாய்ந்தான். காலம் ஊர்ந்து கொண்டே இருந்தது.

சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். தம் மனைவியிடம் சொல்லி மனதை ஆற்றிக் கொண்டார். ராஜாமணியம்மாள் புழுவாகத் துடித்துப் போனாள். இளம் பெண் கருகுகிறாளா?வாரிசுக்கு ஒரு குழந்தையைக் காண முடியாதா? கட்டையைப் போடுவதற்குள் ஒரு குழந்தையை எடுத்துக் கொஞ்சிற பாக்கியம் ஏற்படாதா? “என்ன செய்யச் சொல்றே!”

“நம்தான்ஏதாவது ஒரு முடிவுக்கு வந்து சமா தானத்துக்கு ஏற்பாடு

செய்யணும். வீணா பிள்ளை கெட்டு விடுவானே!”

“அதுக்காக.”

“உமாதான் விட்டுக் கொடுக்கணும்.”

“உனக்கு மூளையிருக்கா?”

“மூளை ஆராய்ச்சி நிபுணனைப் பெத்தவள்.”

“இதுலே குறைச்சல் இல்லை. அவ மாங்கல்யத்தோடப் போராடுகிறாள் என்பதை மறந்து விட்டாளா? குழந்தையைப் பார்க்கிறது அப்புறம் இருக்கட்டும். குழந்தை, யாரை அப்பான்னு கூப்பிடும்?” ராஜாமணியம்மாள் அழுதுவிட்டாள்.

“இதுக்கு முடிவே இல்லையா?”

“பிள்ளையைச் சமாதானம் செய்! மூளையாராய்ச்சி நிபுணனைப் பெத்தவளர்ச்சே! மூளையா இல்லை, யோசித்துப் பார்!”

சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். தம்முடைய அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டார். ராஜாமணியம்மாள் செய்வதென்ன வென்று புரியாமல் திகைத்தாள்.

மறுநாள்... அனைவரும் கூடத்தில் அமர்ந்திருந்தனர்.

உள்ளே பூசை செய்கிற மணியோசை...

சங்கர் சிரித்துக் கொண்டான்.

“ஏண்டா சங்கர் சிரிக்கிறே? பெண்கள் செய்யறபூசையில் தாண்டா குடும்பம் செழிக்கிறது?

“நான் சம்பாதிக்கிற சம்பாதனையைஅவமானப் படுத்துறீங்களா அம்மா!”

“என்னடா புடலங்காய் சம்பாதனை! உன் அப்பா கலெக்டரா இருந்து சம்பாதித்ததை நான் பார்த்தவள். செழிப்புங்கிறது...நோய் நொடியில்லாத ஆயுள் பலம்!”

“டாக்டர்கள் அவ்வளவு செலவு செயது படிக்கத் தேவையில்லை.”

“ஆமாம்... நான் பார்க்காத டாக்டர். பெனிசிலினால் மக்கள் எவ்வளவு பாதிக்கிறாங்கிறது புரியாம எடுத்ததற் கெல்லாம்...”

“அம்மா... நிறுத்து...! உனக்குப் புரியலை. மருந்தைக்குறை கூறாதே!”

சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ் குறுக்கிட்டார்: “உனக்கும் புரியலை. மருந்துக்கெல்லாம் அருமருந்து ஆண்டவன்.!”

மடக்கி விட்டர் சந்திரசேகரன்.

சங்கர் எழுந்து கொண்டான்.

ராஜாமணியம்மாள் சொன்னாள்.

“சங்கர் நாளைக்கு நானும் உங்கப்பாவும் ரத்தினகிரிக்குப் போகிறோம். அப்படியே வேலூருக்கு உன் மாமா வீட்டுக்குப் போய் நாளை கழித்து வருகிறோம்!”

“உங்களுக்கும் சாமியார் பைத்தியமா?”

“ஏன்? ஒரு நாளைக்கு உனக்கும் பிடிக்கலாம்!”

அப்போது உமா பிரசாதத் தட்டுடன் அங்கே வந்தாள். மாமியாரும் மாமனாரும் திருநீறு குங்குமம்எடுத்து இட்டுக்கொண்டனர். மறுப்பார் என்று தெரிந்தும் கணவனிடம் மேலுக்குக் கொண்டு சென்றாள்.சங்கருக்குக் கோபம் வரவில்லை. சிரித்துக் கொண்டான்.

“எனக்கும் சாமியார் பைத்தியம் பிடிக்கிறப்ப நானும் பிரசாதத்தை எடுத்து இட்டுக் கொள்வேன்.” என்றான் சங்கர்.

தெய்வீகப் புன்னகையுடன் கணவனை அண்ணாந்து கவனித்தாள் உமா.

# 8

பெற்றோர் ரத்தினகிரிக்குப் புறப்பட்டு விட்டனர்.

அன்று உமா என்னைக்குமில்லாத அலங்காரத்துடன் விளங்கினாள். நின்று கவனித்தவர்கள் பல நிமிடங்கள் வரை தெய்வத்தைக் கண்டது போல தவமிருப்பர். அப்படி அவள் காட்சி அளித்தாள்.

மாலை மறைந்தது.இரவு வந்தது. விளக்கேற்றிப் பூசையைமுடித்துக் கொண்டு கூடத்தில் வாரப் பத்திரிகையொன்றை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள்.

சங்கர் வெளியிலிருந்து திரும்பினான்.

கூடத்தில் மனைவி தனிமையில் அமர்ந்திருப்பதைக்கண்டான். அவளுக்குச் சிற்றின்ப உணர்வே இல்லாமலிருப்பது அவனுக்கே வியப்பாக இருந்தது.

உமாவைக் கண்ட சங்கருக்கு அப்படியே அணைத்து உச்சிமோந்து பிறகு இதழ் அமுதைப் பருக வேண்டும் போலிருந்தது. எத்தனை அழகாகக் காட்சி தருகிறாள்!

அருகே சென்று அமரலாம் என்று தோன்றியது. ஆனால் நெற்றியில் பளிச்சென்று துல்யமாக விளங்கிய திருநீற்றுப் பட்டை அவனுக்கு அசூசையாக இருந்தது. எதற்காகத்தான் இப்படிப் பட்டையாக விபூதி அணிகிறாளோ! வேதனை இதயத்தைப் பிழிந்தது. அவன் ஒன்றையும் கண்டுகொள்ளாமல் மாடிக்குச் சென்றான்.

உடைகளை கழற்றி வைத்துவிட்டு மேல்மாடிக்குச் சென்றான். விஞ்ஞானக்கூடம் அவனுக்கு அமைதியைத் தரவில்லை. விளக்குகள் அனைத்தையும் போட்டு வெளிச்சமடித்தான். மனம் இருண்டே கிடந்தது. உமாவைத் திருமணம் செய்து கொண்டு வந்த நாட்கள் முதல் அவனுக்கு ஆராய்ச்சியில் மனம் இடங் கொடுக்க வில்லை.எங்குக் கவனித்தாலும் உமாவின் பேரழகு தாண்டவமாடியது.அவளுடைய குழலினுமினிய குரல் சப்தசுரங்களாக ஒலித்தன.

ஏதோ எலக்டிரானிக் எந்திரத்தை முடுக்கிக் கணக்குப் போடத் தொடங்கினான்.

அப்போது பின்னாலிருந்து “காபி” என்று குரல் கேட்டுத்திரும்பிப் பார்த்தான். உமா சிரித்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய தலையில் மல்லிகைப்பூகனத்து மணத்துக் கொண்டிருந்தது.

காபியை வாங்கிப் பருகினான் சங்கர்.

அவனுடைய கண்கள் உமாவைப் பருகிக் கொண்டிருந்தன.

அப்படியே அள்ளிக் கடித்து விடலாமா? மீண்டும்அதே நினைவு.ஏதோ அடுத்தவளைக் கண்டு மனத்தில்சபலம் பெருக்கி ஏங்குகிற கயமை நிலைக்கு,தான் ஏன் ஆளாக வேண்டும் என்கிற உண்மை புரிந்தாலும், கொள்கைக் குறுக்கீட்டால் அவன் அலைமோதினான்.

“ஏன் அப்படிப் பார்க்கிறீங்க?” –உமா கேட்டாள். அவளும் அவனுடைய கொள்கையை உடைக்க வேண்டும் என்று தான் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள்.

“எவன் வீட்டுப் பெண்ணையோ கண்டு ஏங்குகிறகயமை நெஞ்சம் உன்னால் எனக்கு ஏற்பட்டு விட்டதே என்று வேதனைப்படுகிறேன் உமா!”

“அப்படி ஏற்படுவதே தருமமாகாதே!”

“உன்னால்தான்!”

“என்னால் என்று சொல்வது தவறு. நீங்கள் என்ன ஏகபத்தினி விரதரா?” உமா விருட்டென்று வெளியேறிக் கீழே சென்றாள்.

அவனுக்கு ஆராய்ச்சியில் மூளை செல்லவில்லை. இயந்திரத்தை நிறுத்தினான். அமெரிக்காவிலிருந்து ஒரு விஞ்ஞான மேதை கடிதம் எழுதியிருந்தார். “எலக்ட்ரானிக் பிரைன்” எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று. சங்கர் இன்னும் பதில் போடவில்லை.

விளக்குகளை அணைத்துவிட்டு முதல் மாடிக்குவந்தான். தன்னறையினுள் நுழைந்தான். சிந்தனை வெடித்தது. இந்த உமாவை எப்படி வழிக்குக் கொண்டுவருவதென்றே அவனுக்குப் புரிபடவில்லை.

இவளுக்குத் தன்னை போல காம விகாரங்கள் முகிழ்ப்பதில்லையா? கேள்விப்படிருக்கிறான். ஞானினிஜாதிப் பெண்களுக்கு இந்தச் சிற்றின்ப உணர்ச்சியே இராது. அது என்றோ தலைதூக்கும். அதே நேரத்தில் பத்தினி ஜாதிப் பெண்கள் சபலமுடையவர்கள்; ஆனால் கட்டுத்திட்டத்துக்காப் பயப்படுகிறவர்கள். சித்தினி ஜாதிப்பெண்கள் பரத்தைக் குணம் படைத்தவர்கள்! இவள் ஞானி ஜாதிப் பெண்ணாக இருப்பாளோ?

கீழே இறங்கி வந்து வராந்தாவை அடைந்தான். உமாவைக் காணோம். எங்கே அவள்? தேடிப் பார்த்தான். எந்த அறையினுள்ளும் அவள் காணப்படவில்லை. அவனுக்கே விழிப்பு ஏற்பட்டது. பாத்ரூமுக்குப் போயிருக்கிறாளா?

தட்டிப் பார்த்தான். கதவுதிறந்து காணப்பட்டது. எங்கே சென்றாள்?

ஒரே அறை பாக்கி இருந்தது. அது பூசையறை. அவன் போக நாணப்படுகிற அறை. அங்கே சென்றான். உமாகண்மூடி நடராஜர் சிலை முன் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய உதடுகள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

சற்றைக்கெல்லாம் வெளியே வந்தாள். சங்கர் கேட்டான். “மாலை பூசை செய்யவில்லையா?”

“தவறுவேனா?” “பின் இப்போது என்ன?”

“குறை கூறினேன்?”

“என்னைப் பற்றியா?”

“நான் பத்தினி ஜாதிப் பெண்! கணவனைக் கனவில்கூட குறை

கூறவோ, குறையாக நினைக்கவோ சம்மதிக்காதவள்.”

“ஓ... நீ பத்தினியா?”

அவன் மாடிக்குச் சென்றான்.

உமாவுக்கு கோபம் வந்துவிட்டது. ஆனாலும் அடக்கிக் கொண்டே பின்தொடர்ந்தாள். “இப்படி நீங்களா கேட்கிறீர்கள்?”

கணவன் விருப்பத்துக்குச் சம்மதியாதவள் பத்தினியாக மாட்டாள்.”
“நான் உமா! சித்ரா அல்ல; பார்த்துப் பேசுங்கள்.”

சங்கருக்குப் கோபம் தலைக்கேறி விட்டது. ஆனாலும் பொறுமையாக அறையினுள் நுழைந்தான்.

“சித்ரா உன்னை விட எவ்வளவோ தேவலை!”

“அப்படியா! அவளையே திருமணம் செய்து கொண்டிருக்கலாமே!”

“தவறு செய்துவிட்டேன்!”

“என்னை மணக்கச் செய்தது தவறா?”

“ஆம்!”

“இப்போது மட்டுமென்ன? நான் சம்மதிக்கிறேன் நீங்கள் சித்ராவைத் திருமணம் செய்து கொள்ளலாம்!”

“நீ சம்மதித்தால் போதுமா?”

“பெற்றோர் சம்மதிக்க வேண்டும் இல்லையா?”

சங்கர் மௌமாக இருந்தான்.

இதற்குப் பெயர் தான்மரபு!”

“மண்ணாங்கட்டி!”

“கோபத்தால் தங்கத்தை மண்ணாக மதித்தாலும் தங்கம் மண்ணிலிருந்து உதயமாகிறது”

அவள் உள்ளே செல்ல ஓரடி எடுத்து வைத்தாள்.

“உமா!”

உமா திரும்பினாள்.

“என்னங்க!”

“இன்றைக்கு உன் லட்சியத்தை நீ மாற்றிக் கொண்டே தீர வேண்டும்.” எனக்கு உங்களைத் தவிர வேறு லட்சியம் என்ன?”

“போதும்; அந்த விபூதிப் பட்டையைக் கலைத்தே தீர வேண்டும்!” “அதைக் கலைத்தால் அத்துடன் குங்குமமும் கலையும்!”

“குங்குமம் கலையாதவாறு கலைக்கலாம்.”

“குங்குமத்தின் அடியிலிருக்கிறது திருநீறு...?”

“நீ இப்படித்தான் வாதிப்பாயா?”

“இது வாதிப்பல்ல; என் வாழ்க்கை. இதனால் உங்கள் லட்சியம் எந்தவிதத்திலும் கெடவில்லை. என் முகத்தை மனைவியின் முகமாகப் பாருங்கள். மகாதேவன் முகமாக ஏன் பார்க்க வேண்டும்?”

“மகாதேவன் ஞாபகம் வந்துவிடுமோ என்கிற பயம்.” “வரட்டுமே ! நல்லது தானே?”

“அது உன்னால் எனக்கு வரத் தேவையில்லை; என் ஆராய்ச்சியில் தெளிவாகட்டும்!”

“தெளிவாவதென்ன! அது எப்போதோ கலை ரூபத்தில் உங்கள் உள்ளத்தில் புகுந்த தெளிவாகி விட்டதே! இல்லையென்றால் இந்த நடராசர் சிலை இங்கு இடம் பெற்றிருக்குமா? இதற்குப் பெயரும் மகாதேவ ஞானம் தான்!”

சங்கருக்கு இப்போது சினம்தலைக்கு மேல் போய் விட்டது. உமாவிடம் காட்ட வேண்டிய கோபத்தை நடராசர் சிலை மீது காட்டினான் மேசை மீது புன்னகையுடன் தூக்கிய திருவடிக் கோலமாக இருந்த நடராஜர் சிலையை எடுத்து ஓங்கித் தரையில் அடித்தான். வெங்கலமாதலால் சுக்கலாக உடைந்து சிதறியது.

“ஈஸ்வரா!” என்றவாறு மயங்கி விழுந்தாள் உமா.

# 9

துண்டுத் துண்டாக உடைந்த நடராசர் சிலையைக்கண்டு மயங்கி விழுந்த உமா, ஒருவாறு தெளிவு கண்டு எழுந்தாள். சிதறிக்

கிடந்த துண்டுகளைப் பொறுக்கி எடுத்து சேர்த்துப் பார்த்தாள். நடராசர் ஆகுமா?

அதுவரை கட்டிலில் வியர்த்து உடல் கிடுகிடுக்க அமர்ந்திருந்த சங்கர் சொன்னான்: "உடைந்த சிலை ஒன்று சேராது உமா! வாழ்க்கையும் அப்படித்தான்!"

கலங்கிய கண்களுடன் கணவனை அண்ணாந்து கவனித்தாள் உமா. அவனுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. கணவன் இத்தனைக் கோபத்துக்கு அடிமையாகி விடுவார் அல்லது மிருகமாகி விடுவார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

"கோபத்தை மனிதரிடம் காட்டுங்கள்; தெய்வத்திடம் வேண்டாம்!" உமா தொண்டையடைக்கச் சொன்னாள்.

கனல் கக்கிய கண்களுடன் உமாவை நோக்கிய சங்கர், "உமா ! இதுவரை நான் இப்படி நடந்தது கிடையாது. நடக்கக் காரணமாகிவிட்டவள் நீ! இதுவரை நான் தெய்வத்தை வணங்க மனமில்லா விட்டாலும் தூஷித்தது கிடையாது; வணங்குபவர்களைத் தடுத்ததும் கிடையாது; நீ என்னை மெல்ல மெல்ல நாத்திகனாக்கி வருகிறாய்! உன் பிடிவாதம் இப்படியே சென்றால், நாளை நான் கோவில்களை இடித்து விஞ்ஞானக் கூடங்களாக்குங்கள் என்று அறிக்கை விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை."

நெருப்பு தெளிப்பதுபோலச் சொல்லி முடித்தான் சங்கர்.ஒரு விஞ்ஞானி தன் கருத்தைப் பத்திரிகைகளுக்குத்தரலாம் அல்லவா?

உமா ஒன்றும் பதில் பேசிக் கொள்ளவில்லை.

"நீங்க பத்திரிகையில் கொடுப்பாதாலேயே நிறைவேறிடப் போகிறதா? எத்தனையோ பேர் கோவில்களுக்கும் தெய்வங்களுக்கும் கங்கணம் கட்டியாய் விட்டது!நிறைவேறியதா என்ன!" என்றுதான் இன்னொருத்தியாக இருந்தால் சொல்லியிருப்பாள். ஆனால் உமா அப்படி நெஞ்சில் நினைக்கக்கூட இல்லை.

"உமா" – கர்ச்சித்தான் சங்கர்.

உமா அண்ணாந்து கவனித்தாள்.

"முடிவாகச் சொல்கிறேன்! நீ உன் பிடிவாதத்தைத் தூக்கி எறிந்துவிட்டு என்னோடு வருகிறாயா, இல்லையா?"

உமா புன்முறுவலைத் தெய்வீகமாகப் பூக்கச் செய்து பிறகு

சொன்னாள். “முடிவாக நானும் சொல்கிறேன். பக்தி என்பது பிடிவாதமுமில்லை... அதைத் தூக்கி எறிவது என்பதும் தேவையில்லாதது. உங்களுடன் எங்கும் வர நான் சித்தமாயிருக்கிறேன்,”

பல நிமிடங்கள் வரை உமாவைக் கோபத்தால் விழுங்குவது போல நோக்கிய சங்கர், அடுத்து ஒன்றையும் பேசிக் கொள்ளாமல் வேகமாக வெளியேறினான்.

கண்ணீரைத் துடைத்துக் கோண்டு “ஈஸ்வரா! சோதனையை இப்போதுதான் தொடங்கியிருக்கே? இதில் நானோ, அவரோ யார் வெற்றி பெற்றாலும் கவலையில்லை. எங்கள் உறவுக்குப் பங்கம் வேண்டாம். அவர்உயிருக்குச் சேதம் வேண்டாம்” என்று நெஞ்சு விம்மக் கூறி வானத்தை நோக்கினாள். பிறகு மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்தாள். அவளுக்கு உணவில் நாட்டம் ஏற்படவில்லை. அவர் எங்குச் சென்றார்? சென்ற இடம் அவளுக்குத் தெரியும்! சித்ரா வீட்டுக்குத்தான் காரை ஓட்டினான் சங்கர் ! இந்தக் கோபத்துடன் அவன் அங்குச் சென்றிருக்கக்கூடாது. கோபத்தால் எதையேனும் உளறவேண்டி வரும் என்பதை அவன் நினைத்துப்பார்க்கவில்லை என்று சொல்லிவிட முடியாது. நினைத்துப்பார்த்து ஒரு முடிவுடன்தான் அவன் சித்ரா வீட்டுக்குச் சென்றான். ஏன்? சித்ராவின் உதவியை நாடிச் சென்றான். அவளை வைத்து ஒரு பயங்கரமான அருவருக்கத் தக்கதான நாடக மாடவும் முடிவு செய்து விட்டான். ஏதோ பேயறைந்தவன் போல வந்து கொண்டிருந்த சங்கரைக்கண்டதும் சித்ராவுக்குப் பயம் கண்டுவிட்டது. இந்த மாதிரி முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகளும் ஆடைகள் வியர்வையால் நனைந்த கோலமும் என்னமோ கொலை சம்பந்தப்பட்ட விஷயத்தில் தலையிட்டவர் போலவும் காணப்படுகிறாரே! சொல்லப் போனால் தெய்வத்தைக் கொலை செய்ததற்கு ஒப்பாகவல்லவா அவன் திரும்பி இருந்தான்!

“என்னங்க? என்ன நடந்தது? ஏனிப்படி வந்திருக்கீங்க?” சித்ரா பதற்றமுடன் கேட்டாள்.

“ஒண்ணுமில்லே! பிறகு சொல்றேன். இப்ப எனக்குக்குளுமையா ஏதாச்சும் குடிச்சு ஆகணும். கூலா ஏதாச்சும் இருந்தா கொண்டுவா!” என்று கூறிக் கொண்டே சோபாவில் தொப்பென்று உட்கார்ந்தான்.

சித்ராவும் வேகமாக குளிர்ந்த பானம் தயாரிக்க ஆயத்தமானாள். நன்னாரி சர்பத் போட்டு ஐஸ் கலந்து கொண்டு வந்தாள். அதனைப் பெற்று ஒரே மூச்சில் பருகி முடித்தான் சங்கர். பிறகு மின்விசிறியை

வேகமாக முடுக்கிவிட்டாள் சித்ரா. சங்கரின் மனவேகச் சுழற்சி போல் மின்விசிறி சுழலத் தொடங்கியது.

ஏறத்தாழ அரைமணிநேரம் வரை எதையும் பேசிக்கொள்ளாமல் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான் சங்கர். அவனுடைய சிந்தனையைத் தடை செய்கிற மாதிரி எதுவும் பேசிக் கொள்ளாமல் மவுனமாக இருந்தாள் சித்ரா.

சங்கரின் நினைவுகள் பலவிதமாகப் போரிட்டன. தான் எண்ணி வந்த நாடகத்தைச் செயல்படுத்துவதா? வேண்டாமா? செயல்படுத்துவதால் வரக்கூடிய நன்மைகள் என்ன? செயல்படுத்தாவிட்டால் வரக்கூடிய நட்டம் என்ன?

அம்மா அன்று சொன்ன சொற்களுக்கு மதிப்பில்லாமல் போய்விடுமல்லவா? மனைவி என்பவள் வீட்டில் எரிந்து கொண்டிருக்கும் ஞானதீபம். அந்தத் தீபத்தின் ஒளித்தூய்மை, வீட்டு வாசற்படியைத் தாண்டக் கூடாது. உயிர் நண்பனானாலும் அவனிடம் மனைவியைப் பற்றி பேசுவதோ, அல்லது மனைவியைப் பற்றி அவன்பேசுவதோ நாகரிகமாகாது; குடும்ப நியதியாகாது. பிறர் விமர்சிப்பவள் அல்ல மனைவி; அல்லது தாமும் பிறரிடம் விமர்சிப்பவளும் அல்ல மனைவி! தன்னுள் தானாகி, தானே ரசித்து இன்பமடையும் இதய கீதம் அவள்!...

சிந்தனை தடைப்பட்டது. அப்படிப் பார்த்தால் இன்று நடத்தத் திட்டமிட்ட நாடகம் என்னாவது? பெற்றோரும் ஊரில் இல்லை.இது நல்ல சந்தர்ப்பமல்லவா? இதன் மூலம் உமாவைத் தன் வசம் திருப்ப ஒரு சாதகமாக அமையும் அல்லவா?

இப்படியே விட்டுக் கொண்டு போய் ஞானதீபம் கோணல் விளக்காக அமைந்து விடுவதைவிட ஞானத்துக்கு இன்னொரு ஞானம் கற்பிப்பது புத்திசாலித் தனமானதாயிற்றே! சித்ரா இதற்கு உடன்படுவாளா? எடுத்துச் சொல்கிற விதத்தில் சொன்னால் அவள் நிச்சயம் உடன்படுவாள்.

சித்ராவுக்கும் உமாவுக்கும் ஒரே ஒரு வேற்றுமை இருப்பதாகவே சங்கரின் தேர்ந்த அறிவு முடிவு செய்து கொண்டிருந்தது. அது உமா தாலிகட்டியவள்; சித்ரா அதைக் கட்டாதவள். தேவையில்லை என்றும் வாதிப்பவள். கழுத்துதானே தாலியைக் கட்டிக் கொள்கிறது. அதனுள்ளிருக்கும் கனிந்த அன்பு எதைக்கட்டிக் கொள்கிறது?

தாயின் சொற்கள் ஒருபுறம் இருக்கட்டும். இதனால் என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான் சங்கர்.

சித்ராவை நன்கு அப்சரஸ் போல அலங்கரித்துக் கொள்ளச் செய்யவேண்டும். அவளை அழைத்துக்கொண்டு சரியாப் பன்னிரண்டு மணி இரவுக்கு வீட்டுக்குச் செல்ல வேண்டும். உமாவின் கண்களில் படப் படுக்கையறையுள் நுழையவேண்டும். இரவு முழுவதும் தங்க வேண்டும். காலையில் சித்ராவை அழைத்துக் கொண்டு திரும்ப வேண்டும்.

பெற்றோருக்குத் தெரிந்தால்...

உமாதானே சொல்ல வேண்டும்; ஒரு சொல்லடுக்கு; "உத்தமமான மனைவி கணவனைக் காட்டிக் கொடுக்கமாட்டாள்..."

உமா வாய் திறப்பாளா? கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன் என்று கட்டிக் கொண்டு அழுகிற நாடல்லவா தமிழ்நாடு!

முதலில் படுக்கையறையில் நுழைய விடுவாளா?

அப்படி ஒரு புரட்சி ஏற்பட வேண்டும் என்கிற எதிர்பார்ப்புத்தானே சங்கருக்கு! அது மட்டும் ஏற்பட்டுவிட்டால்...

அப்போது கேட்க வேண்டியதுதான். "நீயும் இந்தக்கட்டிலை அலங்கரிக்க மறுக்கிறாய்! அடுத்தவளையாவது அலங்கரிக்க விடு!"

"இதுதான் இடமா?" என்பாள்.

"நிரந்தரமானாலும் ஆச்சிரியப்படுவதற்கில்லை" என்று சொல்ல வேண்டியதுதான்.

பார்த்துவிடுவது; வருவது வரட்டும்!

முடிவு செய்து விட்டான் சங்கர்.

மெல்லச் சித்ராவை நோக்கினான். சிரித்தான்.

அவளும் சிரித்தாள்.

எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டு தலைசீவிக்கொள்ள முனைந்தான். பிறகு அமைதியாகச் சித்ராவிடம் பேச்சை ஆரம்பித்தான்.

# 10

"சித்ரா உன்னால் எனக்கு ஒரு பெரிய காரியம் நடக்க வேண்டும்."

என்றான் டாக்டர் சங்கர்.

சிந்தனை மருவிய கண்களுடன் நோக்கினாள் சித்ரா.

"என்ன சித்ரா, அப்படிப் பார்க்கிறாய்? உன்னால் முடியுமா?"
"உங்களுக்காக என் உயிரை வேண்டுமானாலும் தரச் சித்தமாயிருக்கிறேன்."

சித்ராவின் கண்களில் நீர் கரைகட்டியது.

மெல்ல எழுந்து அவளுடைய பக்கத்தில் அமர்ந்து தோளைப்பற்றினான் சங்கர்! என் வாழ்வில் புதைந்துஇருக்கிற சமீபகாலநிகழ்ச்சிகள்பயங்கரமானவை. எதை வெளியில் சொல்லக்கூடாது; சொல்வது நாகரிகமாகாது என்று என் தாய் சொன்னார்களோ அதை உன்னிடம் இப்போது சொல்லப் போகிறேன். கல்யாணமாகியும் நான் பிரம்மச்சாரியாக இருக்கிறேன் என்று சொல்வது நியாயமில்லாவிட்டாலும், என் மனைவி கன்னியாகவே இருக்கிறாள்!"

சங்கர் இவ்வாறு கூறியதும் அரட்சி நிறைந்த கண்களுடன் நோக்கினாள் சித்ரா.

சங்கர் பேச்சைத் தொடர்ந்தான்.

"பெற்றோருக்குப் பிடித்த பெண் என்பதனால் மட்டுமில்லாமல் எனக்கே அவளுடைய பேரழகு பிடித்திருந்தது. அதனால்தான் அவளுடைய பக்தி, கோவில், குளம் போன்ற நம்பிக்கைகளையும் மறந்து கட்டிக் கொண்டேன். இப்போது அவதிப்படுகிறேன்!"

"ஏன் உடன்பட மறுக்கிறார்களா?"

"அவன் மறுக்கவில்லை; நான் மறுக்கிறேன்."

"நீங்கள் மறுக்கிறீர்களா?"

"ஆமாம்; ஏதோ உள்ளளவில் பக்தி செலுத்துவது; நான் விஞ்ஞானி. எனக்கு அந்த மாதிரி நம்பிக்கைகள் பிடிக்காது.அதனால் அடுத்தவர் நம்புகிறதைப் பற்றி வேதனைப்படாதவன். நான் நாத்திகன் அல்ல. அதே நேரத்தில் ஆஸ்திகனும் அல்ல. அதனால் நீ என்னோடு:பழகுகிற போது வெளியுலகில் நடமாடுகிற போது என் விருப்பத்துக்கு இரு; மற்ற நேரங்களில் உன் விருப்பத்துக்கு இருக்கலாம் என்றேன்!"

“அவங்களுக்கு ரெட்டை வாழ்க்கை பிடிக்கலை.”

“இது ரெட்டை வாழ்க்கையா?”

“பின் இல்லையா? உங்களுக்காக ஒன்று; அவர்களுக்காக ஒன்று என்றால்?”

“எப்படிப் பொருந்தும்?”

“உதாரணமாக உங்களுடன் அவங்க வந்துகிட்டிருக்கிறாங்கன்னு வச்சிக்கங்க! வழியிலே சுவாமி ஊர்வலம் வருகிறது. உங்கள் கருத்துப்படி பார்த்தால் கையெடுத்துக்கும்பிடக்கூடாது. மற்றவங்க ஏதாவது நினைப்பாங்கங்கிற எண்ணம் உங்களுக்கு! கடவுள் உங்களுக்குப் பிடிக்காதே!”

“நீ அவளைச் சார்ந்து பேசுகிறாய். நீயும் பெண்ணல்லவா?”

“நான் நியாயத்தை சார்ந்து பேசுகிறேன். போகட்டும் படுக்கையறையில் தகராறு வருவானேன்?”

“பட்டைப் பட்டையாகத் திருநீறு பூசிக் கொண்டு பெரிசா குங்குமத்தோடு வந்து நிற்கிறாள்.”

”அதனால் என்ன? இருட்டில் அல்லது தனியறைதானே? யார் வந்து பார்க்கிறார்கள். வெளியில் வேண்டுமானால் அழைத்துச் செல்ல வெட்கப்படலாம்!”

“அவளை அந்தக் கோலத்தில்... பார்க்கும்போது எனக்குள் ஒரு விரோதியைச் சந்திப்பது போல இருக்கிறது. எப்படி இன்பமடைய முடியும்?”

“அவங்க என்ன சொல்றாங்க?”

“பிடிவாதம்; என் சிவச்சின்னம்,அதை அழிக்க முடியாது என்கிறாள்.”

“வேடிக்கைதான், இப்போது நான் செய்ய வேண்டியது?”

“நீ என்னோட வரவேணும்! அதே கட்டிலில் நீ என்னோடு படுத்துறங்கணும்!”

“ஐயய்யோ!”

“ஏன்?”

“நியாயமில்லை. வீட்டில் பெரியவங்க!”

“நியாயம் என்று நானே சொல்கிறேன். வீட்டில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லை!”

“ஒரு பெண் வயிற்றெரிச்சலை இன்னொரு பெண்கொட்டிக் கொள்ளக்கூடாது.”

“பரவாயில்லை.”

“உங்கள் அப்பா, அம்மா!”

“கவலையில்லை.”

“பின்னால் தகராறு முற்றினால்...”

“சித்ரா வீட்டுக்கு சங்கர் குடிமாறிவிடுவான்!”

“என்னால் இந்தப் போராட்டமா?”

“போராட்டம் அல்ல; புரட்சி!”

“எதுவோ ஒண்ணு.”

“நிகழட்டும்!”

சித்ரா தயங்கினாள்.

“நீ தயங்குவதானால், நாளைமுதல் இந்தப் பாதம் உன் வாசற்படியில் மிதிக்காது.”

அடுத்தவிநாடி-

தன்னை அலங்கரித்துக் கொள்ள எழுந்து கொண்டாள்.

சங்கருக்கு நிறைவு ஏற்பட்டது.

இத்தனையும் சொல்லி வந்தவன், அந்தச் சிவச்சின்னத்தில்தான் தன்னுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதாக உமா சொன்னதை அவன் சொல்லவில்லை. சொல்ல அவசியமும் இல்லை. ஏனென்றால் இந்தநம்ப முடியாத மூடச் சிந்தனையை முட்டாள்தனமான கருத்தைச் சொல்வதே வெட்கக்கேடு என்பது அவனுடைய அபிப்ராயம். ஒரு விஞ்ஞானிக்கு ஏற்படக்கூடடிய நியாயமான அபிப்ராயம்தான். ஆனால் தெளிந்த விஞ்ஞானிகளின் தெளிவே “கடவுள்” என்கிற நிலையானது. கடந்தநிலை – கடவுள் நிலை!

சங்கர் அந்த நிலைக்கும் இன்னும் போகவில்லை.

இரவு மணி பன்னிரெண்டு.

கண் விழித்தே காத்திருந்தாள் உமா. ஒரு மனைவி செய்யக்கூடிய கடமை என்று பொதுவில் சொல்லிவிடமுடியாது. ஒரு பவித்திரமான மனைவி செய்கிற கடமை போலக் காத்திருந்தாள். உண்டு முடித்துச் சோற்றுப்பருக்கையில் தண்ணீர் கொட்டிவிட்டுத் தாழ்ப்பாளைப் போட்டுக் கொண்டு, “அது வந்தால் பட்டினியோடுபடுக்கட்டும். வேளையோடு வர்றதுக்கு என்ன? கொழுப்பு அடங்கட்டும்” என்று முனகிய வண்ணம் தூங்குகிற மனைவிமார்கள்தானே முக்காலும்!

வேலைக்காரி போய்விட்டாள். யாருக்குத் தெரியும், இப்படிக் கணவன் தனியாகத் தவிக்கவிடுவான் என்று!

தெரு வாசலைத் தாழிட்டுக் கொண்டு அமர்ந்தவண்ணம் காத்திருந்தாள்.

சற்றைக்கெல்லாம் கார்வருவது தெரிந்தது.

ஆரன் சத்தம் கேட்டது.

மாளிகை வாசல் கதவை மட்டும் திறந்துவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

காரைவிட்டு இறங்கிய சங்கர், மதில் சுவர் வாசலில் இரும்புக் கேட்டைத் திறந்து கொண்டுகாரை உள்ளே செலுத்தினான்.

சித்ராவுக்கு “பக் பக்” கென்று அடித்துக் கொண்டது. ஆனாலும் காதலனின் மனைவியைப் பார்க்கப்போகிறோம் என்ற எதிரிபார்ப்பு இருந்தது. பேரழகி என்று வாயால் வருணித்த அழகைப் பார்க்கப் போகிறோம் என்கிற ஆசையின் உந்தல் தலைதூக்கியது.

மாளிகையினுள் நுழைந்து கதவுகளைத் திறக்க,அவைதிறந்து கொண்டன. உமாவிழித்துக் கொண்டிருக்கிறாள்.

மாளிகையினுள் நுழைந்தான் சங்கர்.

சித்ரா தயங்கினாள்.

“ம்...! பயப்படாமல் வரவேண்டும்.”

கூடத்தில் ஒற்றை விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

சித்ரா பயந்து பயந்து அடிமேல் அடிவைத்துப்பின் தொடர்ந்தாள். அப்போது-

எல்லா விளக்குகளும் குபீரென்று எரிந்து ஒளியை உமிழ்ந்தன.

சித்ரா கூச்சல் போட்டுவிடாமல் போய்விட்டாள்.

“யாரது... கூட வருவது?”

குரலில் அதிகாரம் தென்பட்டது.

உமா அருகே வந்தாள்.

மலையத்வஜன் மகளோ – மலைமகளோ எனமலைக்கும் வண்ணம் நின்றிருந்த உமாவைக் கண்டசித்ரா, பத்துவித நாடிகளும் பலவீனப்பட்ட மயக்கநிலை அடைந்து, “அக்கா!” என்று அலறியவளாய் நெட்டடங்கமாய்க் காலில் விழுந்தாள்.

சித்ராவைக் கண்ட உமா ஒன்றும் புரியாத விழிப்பு நிலையுடன் “அடிப்பாவி நீயா?” என்று குமுறும் குரலில் கூறியவளாய்க குமைந்து நின்றாள். எதிர்பார்த்தது ஒன்று, நடப்பது ஒன்றாகஇருக்கிற இந்த நாடகத்தைக் கண்டு அரண்டு மருண்டு போனான் சங்கர்.

காலில் விழுந்து பணிந்து எழுகிற போது சித்ராவின் கண்கள் குளமாகிக் காண்ப்பட்டன.

“அக்கா, என்னை மன்னிச்சுடுங்க அக்கா! நீங்கதான் இவரோட மனைவிங்கிறது எனக்குத் தெரியாது; சத்தியமாத் தெரியாது அக்கா!”- சித்ரா விம்மினாள். கனன்று கலங்கிய கண்களை மலர்த்திக் கூர்ந்து கவனித்தாளேயொழியஎதையும் பேசிக்கொண்டாளில்லை உமா. அவளுடைய அந்தப் பார்வை நெருப்பாகச் சுட்டது சித்ராவுக்கு!

“மன்னிச்சுட்டேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்கக்கா... நான் ஓடிப்போயிடறேன்.. இனிமே இந்தத்திக்குப்பக்கமே தலைவச்சியும் தூங்க மாட்டேன். உங்க மேலே இவருக்கு இருக்கிற அபார ஆசை உங்களுக்குத் தெரியாதுக்கா! எனக்குக் கல்யாண அழைப்புகூட வைக்கலைனா பார்த்துக்கங்களேன்... நான் கல்யாணத்துக்கு வரக்கூடாதுன்னு மாமியின் கட்டளை.... அழைப்பு வச்சா வந்தாகணுமில்லையா. அதனால் இவரு “உனக்குத் தேவையில்லை... அதனால் இவரு “உனக்குத் தேவையில்லை”னு சொல்லிட்டாரு... நான் இதுவரை அவர்மனசுக்கு மறுப்பா நடந்ததில்லை. உங்க பேரு உமா என்கிறது தெரியும். ஆனாலும் முழுப்பெயர் உமாமகேசுவரிஎன்கிறது தெரிஞ்சிதுண்ணா கூட... நீங்கங்கிறது

எப்படி நிச்சயப்படுத்த முடியும்? சில சமயங்கள்ளே நாம் எதிர்பாராதது நடந்துடறது. அதான் தெய்வச் செயல்... ஒரு திருப்தி... எவளோ இவர் வாழ்க்கையில் குறுக்கிட்டு உங்களுக்குத் தொல்லை தராமல் நானே குறுக்கிட்டுவிலகி ஓடறது... நீங்க செய்துக்கிட்டுவர்ற பக்தியின் பலன்தான்... நான் போறேன் அக்கா! மன்னிச்சேன்னு ஒருவார்த்தை சொல்லுங்க!"

உமா இன்னும் வாய் திறக்கவில்லை. அவளுடைய உதடுகள் துடித்தன. "சொல்லுங்கக்கா" என்று கூறி உமாவின் கால்களை பற்றப் போனாள் சித்ரா.

அப்போது-

"தொடலைக்கா... தொடலை... நீங்க என்னை மன்னிக்க மாட்டீங்க... சத்தியமா மன்னிக்க மாட்டீங்க... என்னைப் பொறுத்தவரை நீங்க எதிர்பார்த்த வாழ்க்கை வேறு... நான் வகுத்துக்கிட்ட வாழ்க்கை வேறு –நான் போறேங்கா..."

சித்ரா புறப்பட்டாள்.

"சித்ரா நில்!" சங்கர் கர்ச்சித்தான்.

"சித்ரா திரும்பிப் பார்த்தாள்.

"இவள் சொல்லிட்டாங்கிறதுக்காக நீ என்னைக்கூட மதிக்காமல் போயிட்டிருந்தா என்ன அர்த்தம்?" சங்கர் முழுங்கினான்.

"என் தெய்வத்தின் உத்தரவு!"

"நான்தான் உன் தெய்வம்!"

"அக்காளுக்கு! நான் உங்கள் காதலி!"

"போய்த்தான் தீருவீயா!"

"போயே...தீருவேன்!"

"போயே" என்ற சொல்லை அவள் இழுத்த பாணியில் பல அர்த்தங்கள் இருந்தன.

"இதுதான் உயிர்த் தியாகமா?"

"உயிரைத் தியாகம் செய்யலாம். மானத்தைத் தியாகம் செய்ய முடியுமா?"

“அப்படி என்ன மானம்?”

“நான் உங்களோட என் அக்காவுக்கே உரிய படுக்கையறைக்கு வருவது அவமானம்! எனக்கு மட்டுமல்ல; இந்தக் குடும்பத்துக்கே!”

அதுவரை பொறுமையாக இருந்த உமா, “விஜயசித்ரா!இங்கே என்ன வாதம்! நீ முதலில் வெளியேறு!” என்று கத்தினாள். அடுத்த விநாடி நாளங்கள் கிடுகிடுக்க வெளியேறினாள் சித்ரா.

இவள் பெயர் விஜயசித்ராவா!

# 11

மின்னல் பறந்த சிந்தனையுடன் திருதிருவென்று விழித்தான் சங்கர். எல்லாமே ஏதோ நாடகத்தில் பார்க்கிறது போன்ற உணர்வுடன் நடந்து முடிந்து விட்டன.

“விஜயசித்ரா...”

அதுதான் அவளுடைய முழுப் பெயர்! “விஜய” என்ற சொல்லை அவள் நீக்கிவிட்டாள். உண்மையிலேயே இப்போது அவளுடைய வாழ்வின் விஜயமே போய் விட்டது!

உமா அங்கிருந்து நடந்து சென்று ஒரு தூணில் சாய்ந்து தலையை உயர்த்திக் கண்களை இறுக மூடிக்கொண்டாள். நீர் முத்து முத்தாகச் சரங்கோத்தது.

அவளுடைய நினைவுகள் கடந்த கால நிகழ்ச்சிகளுன்கொட்டமடித்தன. விஜயசித்ரா இப்படி ஆவாள்; அதுவும் தன் வாழ்வில் குறுக்கிடுவாள் என்பது அவள் கனவுகூட காணாதது.எப்படியோ, காலத்தின் விரல்களைக் கணக்கிட முடியாத அளவுக்கு நடந்து விட்டது.இந்தச் செய்தி அப்பாவுக்குத் தெரிந்தால் எவ்வளவு வேதனைப்படுவார்?

“ஈஸ்வரா!” என்று நெஞ்சு முனகிக் குமுங்கியது.

உடல் முழுவதும் வியர்த்துவிட்ட சங்கர், சற்றே அமைதி காண கூடத்து சோபாவில் அமரச் சென்றான். மின்விசிறியை முடுக்கிவிட்டு அமர்ந்தான். கடிகாரம் ஒருமுறை அலறி அழுதது. மணி ஒன்று.

“சாப்பாடு முடிந்ததா?” – அருகே வந்த உமா மெதுவாகக் கேட்டாள்.

சங்கர்ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

மீண்டும் கேட்டாள். மவுனமே பதிலாகக் கிடைத்தது.

அங்கு நிற்க மனமில்லாமல் மாடிக்குச் செல்ல நினைத்தாள். மனம் வரவில்லை. எந்தக் கட்டில் தனக்கே உரியது; அது இன்றில்லாவிட்டாலும் என்றைக்காவது தனதாகும் என்று எண்ணி எதிர்பார்த்து இறுமாந்து வந்தாளோ, அந்த இறுமாப்புக்குப் பங்கம் ஏற்பட்டது போல இன்றைய நிகழ்ச்சி நடந்து முடிந்தது வருந்தத் தக்கதாவும், வறுத்து எடுப்பதாகவுமிருந்தது.எனவே அவளுக்கு மாடியறைக்குச் செல்ல மனமில்லை. ஏன்? என்றைக்குமே அங்குச்செல்லக்கூடாது என்கிற முடிவுக்கும் வந்துவிட்டாள். இடம் கிடைக்கிற நல்ல நாளில் அந்த அறையில் காலடிவைப்பதாகவும் சங்கற்பம் செய்து கொண்டாள்.

கூடத்தின் ஒரு மருங்கே சமக்காளத்தை விரித்துப்போட்டு சோபாவிலிருந்து தலையணையை எடுத்துக் கொண்டு படுக்கச் சென்றாள்.

சங்கர் இதனைக் கவனித்தான்.

“ஏன் மாடிக்குப் போவதற்கென்ன?” –அதட்டலான குரலுடன் கேட்டான்.

அவள் அப்போது மவுனம் சாதித்தாள்.

“நான் கேட்பது காதில் விழவில்லையா?”

“நன்றாக விழுகிறது!”

“பின் என்ன?”

“அங்கு எனக்கு வேலையில்லை.”

“நேற்றுவரை?”

“நேற்று வரை வேலை கிடைக்கும்னு எதிர்பார்க்கிறமுதல் வகுப்பு பட்டதாரி போலப் பின் தொடர்ந்தேன். இன்னிக்குத்தான் தெரிஞ்சுது...நான் நிரட்சரக்குச்சின்னு!”

“சாமர்த்தியமா பேசறதா நினைப்பு.”

“பிழைப்பைக் கெடுக்கிற நினைப்போ,வாழ்க்கையைக் கெடுக்கிற நெஞ்சோ எனக்கு எப்பவும் ஏற்பட்டதில்லை.”

“எனக்கு ஏற்படுதுன்னு சொல்றியா?”

“அவ்வளவு துணிவுமில்லை;அப்படி நினைக்கிறவளும் நானில்லை.”

“மாடிக்குப் போய் படுக்கலாம்.”

“தரையிலா, கட்டிலிலா?”

“கட்டிலுக்கு நீ உன்னைத் திருத்திக் கொள்ளவில்லை!”

“ஆண்டவன் நெற்றியைப் படைத்ததே விபூதி,குங்குமத்துக்காகத்தான். இதில் திருத்தம் காண ஒன்றுமே இல்லை.”

“இனிமேலும் படுக்கை இங்குத்தான்!”

“நீங்கள் திருத்தம் காணுகிறவரை இங்குத்தான்!”

“அம்மா அப்பாவுக்குத் தெரிந்தால்?”

“தெரியட்டுமே!”

“தெரியட்டுமேவா?”

“இப்போது மட்டும் தெரியாதுன்னு என்ன நிச்சயம்.”

“தெரியுமா?”

“சந்தேகம் வேண்டாம். அன்று மாமா கவனித்துப் பேசினதிலிருந்து உங்களுக்குப் புரியலையா?”

“போகட்டும்; நான் கேட்கிற கேள்விக்காவது சரியான பதில் சொல்வியா?”

“நீங்க என்ன கேக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியும்.விஜயசித்ரா என்னை “அக்கா”ன்னு அழைத்தது பற்றித்தானே?”

சங்கர் பற்களைக் கடித்துக் கொண்டு தலையசைத்தான்.

“அதை அவளையே போய் கேட்க வேண்டியதுதான். அழைத்து வந்தவர் நீங்கள்; அவள் அழைப்புக்குப் பதில் சொல்ல வேண்டியது நானா?”

“பதில் சொல்ல மாட்டாய்?”

“இது எனக்கு அவசியமில்லாப் பிரச்சினை!”

“நீயும் அவளுடைய இனத்தைச் சோர்ந்தவதானா?”

என் அப்பாவைக் கேட்க வேண்டியகேள்வி!”

சங்கருக்கு எரிச்சலாக இருந்தது.

பொங்கி வந்த மிருக உணர்வை அடக்கிக்கொண்டான்.

ஏனென்றால் அவன் புகழ்பெற்ற விஞ்ஞானி; அவளோ பூசிக்கத்தக்க மனைவி!

நேரே சித்ரா வீட்டுக்குச் செல்ல நினைத்தான். இது நாகரிகமாகாது. மாடி நோக்கி நடந்தான்.

விடிந்ததும் விசாரித்துக் கொண்டால் போகிறது.

பொழுது விடிகிறவரை மூன்று உருவங்கள் முழுமையாகத் தூங்கவில்லை. அதிகமாகத் தூக்கமில்லாமல் தவித்தவள் சித்ரா. அவள் எதிர்பாராத பேரிடிக்கு ஆளானவள். வாழ்வை எப்படி இனிச் செப்பனிட்டுக் கொள்வது என்பது பற்றியே தீவிரமாகச் சிந்தித்தாள். அதற்காகத்திரையில் வரும் இரண்டாம் கதாநாயகிகளைப் போலத் தற்கொலை செய்து கொள்ளவும் விரும்பவில்லை. அது பெண்மைக்கே இழுக்கு தேடுவது என்பது அவளுடைய தீவிரமான எண்ணம்.இயற்கையாக மரணம் சம்பவிக்கிறது; அது வேறு விஷயம்.எதற்காகச் சாக வேண்டும்?

அபரிமிதமான நாட்டியக் கலையறிவு கற்பவிருட்சமாக இருக்கிறதே! ஆனால் சங்கருக்கு என்ன பதில் சொல்வாள்?

எப்படியோ சொல்லித் தீர வேண்டும் என்கிற கட்டாயமுடிவுக்கு வந்து விட்டாள். அப்போது கார்வந்து தெருவாசற்படியில் நிற்கிற சத்தம் கேட்டது. அவர் – சங்கர் வந்து விட்டார். மனதைத் திடப்படுத்திக் கொண்டாள் சித்ரா. சங்கர் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

“வாங்க!” என்று வரவேற்றவாறு எழுந்து நின்றாள் சித்ரா.

“உட்கார் சித்ரா!” என்று கூறிக்கொண்டெ அமர்ந்தான் சங்கர். சித்ராவும் எதிர்ல் அமர்ந்தாள்.

“ஏன் சித்ரா, கண்ணெல்லாம் சிவந்து இருக்கு?”

“ராத்திரி தூக்கமில்லை.”

“ஓகோ! அதிகமா பயந்துட்டியா?”

“பயப்படலை; அதிர்ச்சி!”

“அவசியமே இல்லை.”

“எனக்கு அவசியமாப் போச்சே!”

“நீ ஒரு கோழை!”

“என்ன செய்வது; நானும் ஒரு பெண்!”

“வீராங்கனையாக இருக்கலாமில்லையா?”

“கதையெழுத நன்றாக இருக்கும்!”

“இருந்திருக்கிறார்களே!”

“கதை! அவர்களை நேரில் சந்திக்காதவர்கள்; உணராதவர்கள். அவர்களும் பலவீனமுடையவர்களே! இறைவனின் நிஜப் படைப்பே பெண்களுக்கு வைத்தபலவீனம். அந்தப் பலவீனம்தான் இன்றைக்கு இத்தனை பெரிய நாகரீகத்துக்கு அஸ்திவாரம்!”

“நீ தத்துவம் பேசுகிறாய்!”

“ஓ...நீங்கள் விஞ்ஞானி; மறந்து போயிட்டேன்!”

“என்னையே மறந்துடுவே போலிருக்கே...அப்படித்தானே?”

“இன்று முதல் அந்த நிலைக்கு நானே தயாராகிவிட்டேன்?”

“மறந்துடவா?”

“ஆமாம்.”

“சித்ரா....!”

“இப்போது நான்உங்கள் சித்ராவல்ல; உமாவின் தங்கை விஜயசித்ரா.”

“ஏன் ‘விஜய’ என்ற சொல்லை நீக்கிவிட்டாய்?”

“என் தந்தை வைத்த பெயருக்குக் களங்கம் தேடக்கூடாதுன்னு ஒரு பாதியைத் தூக்கி எறிந்துட்டேன். என்னுடைய விஜயம் இன்னிக்கோடு முடியறது.”

சங்கர் அதிர்ச்சி கண்டவனாகச் சித்ராவை நோக்கினான். பிறகு பேசிக்

கொள்ளலாம் என்று விடுத்து. வந்த காரியத்தைப் பற்றிப் புலனறிய முற்பட்டான்.

“ஆமாம், சித்ரா! உன் தந்தையென்று குறிப்பிட்டாயே. அவரேதான் உமாவின் தந்தையா?”

“ஆமாம்!”

“பெயர்?”

“உலகநாத முதலியார்!”

“நீயும் முதலியாரா?”

“முதலியாருக்குப் பிறந்தவள்!”

“என்ன சொல்கிறாய்?”

“நானும் முதலியார் என்று சொல்லுகிறேன்.”

“அப்படியானால் தாய் வேறா?”

“ஆமாம்; என்னைப் பெற்ற தாய் வேறு; உமா அக்காளைப் பெற்ற தாய் வேறு.”

சங்கருக்கு ஒரு நிறைவு. சந்தேகத்தில் ஒரு பகுதிகுறைந்தது. மனத்திலிருந்த பாரத்தின் ஒரு பகுதி இறங்கியது.

“சித்ரா! என்னைக் குழப்புகிறாய்.தயவு செய்து உங்கவாழ்க்கை வரலாற்றைத்தான் சுருக்கமாகச் சொல்லிடேன்.!”

“நீங்க ஏன் குழம்பறீங்கன்னு எனக்குப் புரியவில்லை. என் அக்கா உமா, தவறிப்புகாத இடத்திலே புகுந்துட்டாளேங்கிற குழப்பம் எனக்கு. என் அக்காள் புனிதமான பசு வயிற்றிலே பிறந்த கோரோஜனம்.!”

“முழுமையும் சொல்லி முடியேன்.”

“சொல்றேன். என் அம்மா அந்தக் காலத்துலே தமிழ்நாடு புகழற நாட்டிய அரசி. நாட்டியம் நல்ல நாயகின்னா ரசிகர் கூட்டம் திரளும். பணக்காரக் கூட்டம் புரளும். அப்பேர்ப்பட்டவள் பாபநாசம் உலகநாத முதலியாரைக் காதலித்தாள்!”

“பாபநாசமா? வல்லம்படுகைதானே அவரோட ஊர்?”

“ஓ... இப்ப வல்லம்படுகையில் இருக்கிறாரா?”

“அங்குத்தான் அவர் மிராசு!”

“பின்னாளில் ‘செட்டில்’ ஆகியிருக்கலாம். அப்ப அவர் பாபநாசத்தில் இருந்தார். நெல் வியாபாரம், நாலு நெல் மிஷன்களுக்குச் சொந்தக்காரர். நிலபுலன்கள் ஏராளம்.

ஆள் அழகாக இருப்பார். பாபநாசம் மைனர் என்றேஅவரைக் கூப்பிடுவார்கள். அவருக்கும் எங்கம்மா நல்ல நாயகிக்கும் தொடர்பு ஏற்பட்டது. சட்டப்படி திருமணமே செஞ்சிக்கிட்டாங்க!”

“உமாவின் தாயார்ஒப்புக் கொண்டார்களா?”

“அந்த மகா புனிதவதி அப்போது கிடையாது. உமாவை பெற்றுவிட்டுப் பரலோகம் அடைந்து விட்டார்கள்.”

“ஒகோ...நல்ல சவுகரியம்!”

“குறுக்கு வழியில் சிந்திக்காதீங்க...எங்கம்மாவோட தொடர்புக்குப் பிறகு நான் பிறந்தேன்.ஆனாலும் ஒண்ணு எங்கப்பாவுக்குரிய சொந்த வீட்டில் உமா அக்கா வளர்ந்தது; எங்களுக்குன்னு கட்டித் தந்த வீட்டிலே நாங்க இருந்தோம்.” “உமா வருவது கிடையாதா?”

“கிடையாது. ஒரு செவிலித்தாயை அமர்த்திக் கட்டுத்திட்டத்தோடு வளர்த்தார். பின்னாளில் காலேஜ்படிப்புக்குப் போக ஏற்பட்ட பிறகுதான் அக்கா அடிக்கடி எங்க வீட்டுக்கு வர்ற பழக்கம் வச்சிக்கிட்டது.”

“அது மட்டும் ஏன்?”

“பெற்ற தாயை அறியாத அக்கா...எங்கம்மா மேலே உயிரா இருந்தது. எங்கம்மா ஒரு குடும்பஸ்திரியைக் காட்டிலும் பன்மடங்கு உயர்வா...பாபநாசமே மூக்கின்மேல் விரல் வைக்கிறஅளவுக்கு வாழ்ந்து காட்டியவங்க! ஒரு விஷயம். எங்கம்மாவுக்கு என் மேலே கூட ஆசையில்லை, அக்கா உமாவின் பேரில்தான் கொள்ளை ஆசை.”

“நீ என்ன பாவம் தெய்தாய்?”

“கொஞ்சம் துடுக்காக எதிர்த்துப் பேசுவேன். அக்கா பதவிசு. அப்பவே பக்தி அதிகம், அம்மாவுக்கு அது பிடிக்கும்.”

“உனக்குப் பக்தி கிடையாதா?”

“கிடையாது என்று சொல்லிவிட முடியாது. கடவுளை நினைப்பது ஒன்று;

தியானிப்பது மற்றொன்று. நான் முதல் ரகத்தவள்,”

“சரி...கதையைச் சொல்!”

“கதை என்ன? அம்மா தலையைப் போட்டாள். நான் நாட்டியமாடத் தொடங்கினேன். அப்பாவுக்கு அது கட்டோடு பிடிக்கவில்லை.நான் யாரையாவது மணந்து நிம்மதியா வாழ்னும்னு எதிர்பார்த்தார்.நான் மறுத்துக்கலை வாழ்வை மேற்கொண்டேன். அப்பாவுக்கும் எனக்கும் சண்டை.வீட்டை விட்டு வெளியேறினேன். சென்னைக்கு வந்தேன். உங்களோடு அணைந்தேன் இது தான் கதை.”

“உனக்கு நாட்டியம் சொல்லித் தந்தது குற்றமாயிட்டது.”

அப்பாவும் இப்படித்தான் சொல்வார்.என் அம்மா தன்னோடிருந்த கலை வீணாகக் கூடாதேன்னு சொல்லி வச்சா! அதுதான் தவறுன்னு சொல்லிவிட முடியாது. என் அக்கா உமாகூட பிரமாதமா ஆடும். ஆனா அது என்னை மாதிரிகலை பைத்தியம் கண்டு அலையிலையே! என்ன செய்யறது? என்னோட ரத்தம் அப்படியானது!”

சங்கர் விழிகள் மருவ நோக்கினான. “என்ன உமா ஆடுவாளா?”

“அது தெரியாதா உங்களுக்கு? சாட்சாத் அந்த ஆதிபராசக்தி ஆடவதைப் போலவே இருக்கும். நான் என்ன ஆட்டம் ஆடுகிறேன்!

அக்காள் கற்றுக் கொண்டதில் பாதிகூட கிடையாது. பயங்கரமான ஊர்த்துவத்தாண்டவமே ஆடும்.”

“ஊர்த்துவத் தாண்டவம்னா...?”

“தில்லை காளி யாடிய ஆட்டம்.”

“நீ நிஜமாகவா சொல்லுகிறாய்?”

“இது சத்தியமான உண்மை. உங்களுக்கு அக்கா சொல்லலையா?”

சங்கர் நினைவுகள் உமாவைச் சுற்றி வட்டமிட்டன.

“உமா நாட்டியம் ஆடுவாளா?”

சங்கர் உதடுகள் முனங்கின.

சித்ரா சொன்னாள்:

“ஆடற்கலையரசி!”

# 12

‘ஆடற் கலையரசி!’ மீண்டும் சங்கரின் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டன. அவனுள் பெரிய மகிழ்ச்சி கிளைவிரித்துத் துளிர்க்கத் தொடங்கியது. ‘உமா நாட்டியம் ஆடுவாள்?’

“உங்களுக்கு ஏன் இந்த ஆச்சரியம்?” – சித்ரா கேட்டாள்.

“ஆச்சசரியமில்லை, மகிழ்ச்சி! அவளை ஆடவைத்துப் பார்க்க வேண்டும் போல ஆசை!”

“அது முடியாது!”

“முடியாதா?”

“ம்ம்..!”

“அது எப்படி அவ்வளவு உறுதியா சொல்றே?”

“அவங்க லட்சியம் எனக்குத் தெரியும்!”

“அது என்ன லட்சியம்?”

“அவங்க வணங்குகிற சிவபெருமான் ஆடற்கலையரசன். அந்த ஆண்டவனுடைய கலையைத் தானும் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற பிடிவாதத்தாலேதான் அப்பாகிட்டே அனுமதி பெற்று அம்மாகிட்டே கத்துக்கிட்டது! அதனால ஆத்மாத்மாகக் கத்துக்கிட்ட கலையை யார் முன்னாலேயும் ஆடறதில்லேங்கிறது அக்காவோட லட்சியம்.”

“இதுவரை மேடையில் ஆடியதே கிடையாதா?”

“கிடையாது!”

“காலில் சதங்கை கட்டியதே கிடையாதா?”

“ஒரே ஒரு முறை!”

“எப்போது?”

“என் அம்மா சாகக் கிடக்கிறப்ப!”

“எதுக்காக?”

“நான் ஆடி அம்மாவுக்குத் திருப்திபடலை... அம்மாவோட பரிபூரணக்கலை அக்காவிடம்தான் சேர்ந்தது. அதனால் கண்மூடறதுக்கு முன்னால் அக்கா ஆடிப் பார்க்கணும்னு ஆசைப்பட்டா அம்மா. அதுக்காக அப்பாவோட உத்தரவின் பேரில் ஆடிச்சு!”

“என்ன நடனம்?”

“நடராசர், உமாமகேசுவரி ரெண்டு பேரும் போட்டியிட்டு ஆடின ஆட்டத்தை அக்கா ஒருத்தியே மாறி மாறி ஆடிச்சு! அந்த மாதிரி ‘ஸோலாவா’ ஆடறதுங்கிறது ரொம்ப கஷ்டம். கலையில் தேர்ந்தவங்களாலேதான் ஆட முடியும். அக்கா ஆடியதைப் பார்த்த பிறகு எனக்கே என் கலை மேலே அவநம்பிக்கையும் வெட்கமும் வந்திடுச்சு!”

“ஓகோ!... நான் ஆடவைச்சு ரசிப்பேன்!”

“உங்க சாமர்த்தியம். ஒரு வேளை புருஷன் என்கிறதுக்காக ஆடினாலும் ஆடும். போகட்டும் இப்ப என் கதைக்கு நான் வரலாமா?”

“அது என்ன உன் கதை?”

“இந்த உங்களோட வருகைதான் கடைசி வருகையா இருக்க வேணும்!”

சங்கர் புரியாமல் விழித்தான்.

“புரியலையா! முந்தியே சொன்னேனே... என்னை மறந்துடணும். என் அக்காதான் உங்க மனைவின்னு தெரிஞ்சப்ப நான் மேலும் அதுக்குத் துரோகம் செய்யறது மன்னிக்க முடியாத பாவம்ஃ”

“முடிவு செய்தாகிவிட்டதா?”

“மாத்திக்கிறதில்லேன்னு என் கலை மேலே நான் சத்தியமும் பண்ணிட்டேன். நீங்க போகலாம்!”

“சித்ரா!”

“தயவு செய்து அன்போடு புறப்படலாம். ஒண்ணை மட்டும் ஞாபகம் வைத்துக் கொண்டால் போதும். இந்தச் சித்ரா விஞ்ஞானி சங்கரைத்

தவிர வேறு எவர்க்கும் நெஞ்சில் இடம் தரமாட்டாள். உங்களுக்காக இல்லாவிட்டாலும், என் அக்காளுக்காகவாவது என் நெஞ்சைக் காப்பாத்துவேன். ஒரு விதத்தில் சந்தோஷம், என் அக்கா வாழ்க்கைப் படவிருந்த கணவரோட முந்திய அத்தியாயம் என்னுடையதாக இருந்ததுங்கறதுதான்! புறப்படுங்க. இனியும் என் அக்காளுக்கு நீங்க துரோகம் பண்ண நினைக்காதீங்க... அவளோட கண்ணீர் சக்தி வாய்ந்தது. இதயம் சத்தியம் நிறைஞ்சது! அவள் ஒரு தெய்வப் பிறவி – காவிய மனைவி!"

"ஆமாம்... நீ என்ன செய்யப் போறே... சித்ரா?"

"இப்போது என்ன செய்துக்கிட்டிருக்கேனோ அதைத்தான் செய்யப் போறேன். ஆனால், நான் சென்னையிலிருக்கமாட்டேன். உங்க குடும்பத்தார் கண்ணிலேயே படமாட்டேன். வேறு ஊருக்குப் போயிடறதா முடிவு பண்ணிட்டேன். நிகழ்ச்சிகளை முன்னிட்டு சென்னைக்கு வந்தாலும் என்னை வந்து பார்க்க முயற்சி பண்ண வேண்டாம்."

சித்ரா அதற்கு மேலும் நின்று பேசிக் கொண்டிருக்க மனமில்லாமல் உள்ளே சென்றுவிட்டாள். மனம் அலைந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டு தன்னைத்தானே தேற்றிக்கொண்டாள்.

வெகுநேரம் வரை சிந்தனைத் தவத்திலிருந்த சங்கர், பின்னர் பதுமை போல எழுந்து வெளிவாசலை நோக்கி நடந்தான்.

ரத்தினகிரிக்குச் சென்ற சந்திரசேகரனும் ராஜாமணியம்மாளும் வீடு திரும்பி இருந்தனர்.

"மாமி! சுவாமிகளிடத்துலே என்ன கேள்வி கேட்டீங்க" என்றாள் உமா.

ராஜாமணியம்மாளும், "நான் அதைக் கேக்கலைமா, இந்தச் சண்டாளனுக்கு ஏற்பட்ட நாட்டியக்காரி தொடர்பு எப்பத் தொலையும்னு கேட்டேன்" என்றார்.

"என்ன பதில் எழுதிக் கொடுத்தார்."

"இன்னும் ஒரு வாரத்துக்குள் தொலையும்னு எழுதிக் கொடுத்தார். அது எப்படி ஒரு வாரத்துலே தொலையும் என்பதுதான் புரியலை. அப்படித் தொலைந்தா 22 ரூபாய் காணிக்கையனுப்ப எழுதினார். அவர் எப்போதுமே 22 ரூபாய் மேல் கேட்டதில்லை. ஆனால் உங்க மாமா அப்பவே 22 ஆயிரத்துக்கு ஒரு செக் எழுதி ஒரு திருப்பணிச்

செலவுலே சேர்க்கச் சொல்லிக் கொடுத்துவிட்டார். காரியம் முடிஞ்சதும் அனுப்பி இருக்கலாம். அவசரம் 22 ஆயிரம் யார் தின்னபாடு?”

“தெய்வ காரியத்துக்குத் தானே! அவர் அருள்வாக்கு எப்பவுமே வீணானதில்லை. சரி... என்னைப் பற்றி விசாரிச்சாரா?”

“நிறைய விசாரிச்சார். பராசக்தியின் அவதாரம்னு வேறு பலகையிலே எழுதிக் காட்டினாரு! குழந்தை பிறக்குமான்னு கேட்டேன்.”

“என்ன சொன்னார்?”

“பதிலே எழுதலை! மவுனமா இருந்துட்டாரு!”

உமாவின் விழிகள் ஓரத்தில் நீர் ததும்பியது.

“ஆமாம், ராத்திரி அவன் உனக்குத் துணையாத்தானே இருந்தான்?”

“ஆமாம்... ஏன் இப்படிக் கேக்கறீங்க?”

“நாங்க இல்லேன்னா வீடு தங்கமாட்டான்.”

“இப்ப நான் இருக்கிறேனே!”

எத்தனைப் பவித்திரமாகக் கூறிவிட்டாள் உமா.

ராஜாமணியம்மாள் மருமகளைக் கூர்ந்து கவனித்தாள். அவளுக்கு ஓரளவு உண்மை தெரியும். “நீ இருந்து என்ன புண்ணியம்?” என்று கேட்கத்தான் மனம் துணிந்தது. ஆனால் கேட்கவில்லை.

அப்போது தபால்காரன் வெளியில் குரல் கொடுத்தான்.

உமாதான் ஓடிச்சென்று தபாலை வாங்கினாள். தபால் சந்திரசேகரனுக்கு வந்திருந்தது.

“மாமா! உங்களுக்குத் தபால் வந்திருக்கு!” என்று குரல் கொடுத்தாள் உமா.

துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு வெளியே வந்தார் சந்திரசேகரன்.

தபாலைப் பெற்றுப் பிரித்துப் படித்தார்.

வல்லம்படுகையிலிருந்து வந்திருந்தது.

“உன் அப்பாதானே எழுதியிருக்கிறார். மேலே பேர் இருக்கிறதே, பிரித்துப் படிக்க வேண்டியதுதானே!”

“அது எப்படி மாமா! தபால் உங்க பேருக்குத் தானே?”

“ஓ.. உன் புருஷன் பேருக்கு வந்திருந்தால் பிரித்துப் பார்த்திருப்பாய்.”

“உரிமைங்கிற பேரால் பிரிக்கலாம். ஆனா... உடமைங்கிற பேரால் பார்த்தால் அதுவும் தப்புத்தான்.”

“சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். படிக்கத் தொடங்கினார்.

தீபாவளி வரிசை பற்றி உலகநாத முதலியார் எழுதியிருந்தார். தீபாவளிக்கு ஒரு வாரத்துக்கு முன்னால் வந்து மாப்பிள்ளையையும் பெண்ணையும் அழைத்துச் செல்வதாக எழுதி இருந்தார்.

“என்ன மாமா அப்படி எழுதியிருக்கிறார்.” – என்றாள் உமா ஆவலுடன்...

‘எல்லாம் நல்ல சமாச்சாரம் தான்!’ என்று கூறிச் சிரித்த வண்ணம் மருமகளிடம் தபாலை நீட்டினார்.

அப்போது –

சங்கர் காரைவிட்டு இறங்கிப் பேயறைந்தவன் போல உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

# 13

டாக்டர் சங்கர் ஒருவரிடமும் பேசிக் கொள்ளாமல்நேரே மாடியேறிச் சென்றான். அவனுடைய அந்த நிலை அனைவருக்குமே ஐயத்தை உண்டுபண்ணியது.

சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். கண் சமிக்ஞையால் மருமகளை நோக்கி, என்னவென்று கேட்டார். உமாவும் தனக்கொன்றும் தெரியாது என்று சமிக்ஞை மூலம் தெரியப்படுத்தினாள்.

“சரி, சரி! நீ அவன் பின்னால் போமா? ஏதோ “மூட் அவுட்” டாய் வந்திருக்கான்!” என்றார், சந்திரசேகரன்.

உமாவும் பதவிசாகப் பின்தொடர்ந்தாள். உள்மனம் குழம்பியது. ஏதோ நடைபெற்றிருக்கிறது. அதனால்தான் இப்படி எதையோ பறிகொடுத்தவர் போல வந்திருக்கிறார்.

சங்கர் நேரே தன்னுடைய விஞ்ஞானக் கூடத்துக்குச் சென்றான். அங்கே அவனுக்கு மன அமைதி கிடைக்கும் என்கிற நினைவு. கூடம் வெறிச்சேடி கிடந்தது. எழுதிய விஞ்ஞானக் குறிப்புகளின் மீது வெயிட் கல்லை வைத்திருந்தான். ஆராய்ச்சி நூல்கள் சில பிரித்து வைத்தது பிரித்து வைத்தபடி இருந்தன.

சாய்வு நாற்காலியில் சென்று தொப்பென்று அமர்ந்தான். பெற்றோர் திரும்பி இருக்கிறார்கள் என்ற செய்தி தெரிந்தும் அவன் சட்டை செய்யாமல் மேல் மாடிக்கு வந்தான் என்றால் அவனுடைய மனநிலை என்னவாக இருக்கும் என்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டாள் உமா. அதனாலேயே அருகே நெருங்க அவள் வெகுவாகப் பயப்பட்டாள்.

“அம்மாகிட்டே ஒரு வார்த்தைகூடப் பேசாம வந்துட்டீங்களே.. நமக்குள்ளே ஆயிரம் பிரச்சினை இருக்கும். இதை நாம இப்படியா வெளிப்படுத்துறது..?” மிகவும் லாவகமாகப் பேசினாள் உமா.

சங்கர் திரும்பிப் பார்த்தான். கோபாக்கினி கண்களில் தெறித்தது. ஆனாலும் ‘நமக்குள்ளே ஆயிரம் பிரச்சினைகள்’ என்ற வார்த்தைகள் அந்தக் கோபத்தை ஒருவாறு சமாதானப்படுத்தின. உமா நடந்த விவகாரங்களைப் பெற்றோரிடம் சொல்லவில்லை என்பது அந்த வார்த்தைகள் மூலம் தெரியவந்தது. உமா தன் கொள்கைக்குப் புறம்பானவளானாலும், சித்ரா குறிப்பிட்டது போல ஒரு காவிய மனைவி என்பதை உணர்ந்தான். முன்பே உணர்ந்த ஒன்றானாலும் அது உறுதியாகியது.

அவன் வாய் திறக்கவில்லை.

உமா மேலும் அங்கு நிற்க விரும்பவில்லை. ஏதேனும் கோபத்தால் வெடிப்பு நிலை உருவாகக் கூடாதல்லவா?

உமா செல்வதைக் கவனித்த சங்கர், “உமா!” என்று மெல்ல அழைத்தான்.

உமா திரும்பி வந்தாள். “சித்ரா, எல்லாவற்றையும் சொன்னாள்!”

“எல்லாவற்றையும் சொன்னாளா?”

“உன் குடும்ப வாழ்க்கையைப் பற்றிப் புனிதமாக எடுத்துச் சொன்னாள். உன் மேல் கோபம் ஏற்படுவதற்குப் பதிலாக அன்பும் ஆசையும் அதிகரித்தன. இனிமே தன் வீட்டுக்கு என்னை வரக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். அக்காளுக்குத் துரோகம்

செய்யும் பாவச் சுமையை அவளால் சுமக்க முடியாதாம்.”

“ஓகோ!.. சுமந்தது போதும்னு நெனைச்சாளோ... அதுவே அவளுடைய பாவத்தைக் கழுவிவிட்டது.”

உமாவின் நாட்டியத் திறமையைப் பற்றிப் பேச்சைத் தொடங்கலாம் என்று நினைத்தான். அது சரியான நேரமில்லை என்பதை உணர்ந்து கொண்டான். இரவு பேசிக் கொள்ளலாம் என்று வாளாயிருந்து விட்டான்.

“உமா! நமக்குள் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும் வெளியில் காட்டிக்கிறது சரியில்லை அல்லவா?”

உமா தலையசைத்தாள்.

“நீயும் நேத்து ராத்திரி படுத்துக்கிட்ட மாதிரி இன்னிக்கு ராத்திரியும் செய்யாதே! அது நம்மை நாமே காட்டிக் கொடுப்பதோடு, நம்மோட பகையை வளர்க்கும்.”

உமா ஊன்றிக் கவனித்தாள். தன்னுள் சிரித்துக் கொண்டாள்.

“என்ன உமா சிரிக்கிறே? சித்ரா தன்னோட இந்த முடிவால் உன் படுக்கை அறையைத் தூய்மைப்படுத்திட்டா இல்லையா?”

“ஆகட்டும்!” ஒற்றைச் சொல்லில் சொல்லி முடித்து, “சரிசரி, கீழே இறங்கி வாங்க!” என்று அழைத்தவாறு நடந்தாள். சங்கரும் பின்தொடர்ந்தான்.

இரவு மனிதர்களை இளைப்பாறச்செய்ய எழுந்தது. படுக்கையில் படுத்துக் கொண்டு மூளை பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான் சங்கர். சற்றைக்கெல்லாம் உமா உள்ளே நுழைந்தாள்.

“உமா!”

“என்னங்க!”

“உன்னைப் பற்றிச் சித்ரா ஒண்ணு சொன்னதிலிருந்து எனக்கு ஆச்சரியமும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டுக்கிட்டு இருக்கு!”

“என்ன சொன்னா?”

“நீ பிரமாதமா நாட்டியமாடுவாயாமே! சாட்சாத் அந்த சிவபெருமான் காளி மாதிரியே ஆடுவாயாமே! நீ ஆடறதைப் பார்க்க

அண்டசராசரமும் அசந்து போய் நிற்குமாமே!"

"அதிகப்படியாகச் சொல்லிவிட்டாள்."

"அவள் எனக்குக்காதலியா இருந்தாளேயொழிய, இருந்த நாள் முதல் உண்மையாக நடந்து கொண்டவள். பொய்யிராது."

உமா கூர்ந்து கவனித்தாள்.

"உமா! அன்னிக்கு நான் உயிராக மதிக்கும் நாட்டியக் கலையின் சின்னமான நடராசர் சிலையை எடுத்து உடைச்சிட்டேன். கோபத்துலேதான்! பிறகு அப்படிச் செய்ததற்கு மிகவும் வருத்தப்பட்டேன். இப்பத்தான் அப்படி செய்தது சரி. வருத்தப்பட்டிருக்கவே தேவையில்லைன்னு புரியுது."

"ஏன்?"

"ஆடற்கலையரசியே என் அகத்தில் அமர்ந்த மனைவியாவாய்ச்சிட்ட பிறகு, அந்த வெறும் சிலை எதற்கு?"

"நான்தான் வெறும் சிலை. என்னிக்காவது உடைபடப் போகிற சிலை. அது அந்த நடராசமூர்த்தி ஊழிக்கப்பாலும் உயிரின் ஜீவாதாரமாய் நின்று நடனம் புரியும் தெய்வம். இந்தத் தத்துவம் உங்களுக்குப் புரிந்திருக்கும். ஏற்க மனமில்லை, அவ்வளவுதான்.

"எப்படியோ, நீ ஆடி நான் பார்க்க வேண்டும், ரசிக்க வேண்டும்."

"நான் ஆடுவதில்லை."

"அது எனக்கும் தெரியும்"

"தெரிந்துமா கேட்கறீங்க!"

"தெரிந்தே கேட்கிறேன். உன் கணவன் கேட்கிறேன்."

"என் ஆத்ம சுகத்துக்காக நான் பயின்ற கலை அது!"

"அகமுடையானின் ஆசைக்காக அதனை வெளிப்படுத்த முடியாதா?"

"சாதகமில்லாததால் மறந்திருக்கலாம் அல்லவா?"

"கலையும் கல்வியும் மறப்பதில்லை, ஒருமுறை தடுமாறினாலும் மறுமுறை நிலைநின்று ஒளிவிடும். நீ ஆடத் தொடங்கு! பிறகு அது தன்னால் வந்துவிடும்."

உமாவுக்கு அறத் துன்பமாய்ப் போய்விட்டது. கணவனுக்குள்ள கலைப்பித்தைப் பற்றி அவளறிவாள். நல்ல அறிஞர்கள் உதயமாவதற்கே கலை ரசனைதான் காரணம். ரசனையோடு கலைஞர்களாகவே இருந்து விட்டால் அவர்களுடைய அறிவு பன்மடங்கு பரிமளித்துவிடுகிறது. இந்த நுட்பச் சிந்தனையைப் பற்றி அவள் படித்தறிந்து இருக்கிறாள்.”

“என்ன உமா யோசிக்கிறே?”

“உங்களுக்காக நான் கட்டுப்பட்டே தீர வேண்டும். ஏன்னா நீங்க என் கணவர் – கண்கண்ட தெய்வம்!”

சங்கர் மகிழ்ந்து போனான். “உமா...!”

“இது ஆடக்கூடிய இடமா?”

“நான் இப்போதே கேட்கவில்லை. அம்மாவையும் அப்பாவையும் வெளியில் சாக்கு சொல்லி அனுப்ப எனக்குத் தெரியும். அப்போது!”

“ஆடுகிறேன்!”

“ஆகா!”

“ஆனால்...”

“ஆனால்...?”

“அதற்கு முன் இந்தக் கட்டிலில் மனைவி என்கிற ஸ்தானத்துக்கு இடம் வேண்டும்!”

ஒரு கணம்...

சிந்தனையில் மின்னல் பளிச்சிட்டது!

உமா சரியான கட்டத்தில் மடக்கி விட்டாள்.

# 14

சங்கர் இரவுகள் தோறும் கெஞ்சுவான் உமாவின் நாட்டியத்துக்கு. விளக்குகளெல்லாம் அணையுமா என்று எதிர்பார்த்து இரக்கமில்லாமல் வாதாடுவாள், உமா!

இந்த ஒரே வழியின் மூலம் - கலையின் மூலம்தான் சங்கரைத் திருப்ப

முடியும் - திருத்த முடியும் என்று உறுதியாக நின்றாள் உமா.

சங்கருக்கும் உமாவுக்கும் நெற்றித் திருநீறு சம்பந்தப் பட்டதில் உடலுறவு அற்றுப் போயிருக்கிறது என்பது தெரியவந்து பெற்றோர் அதிகமாகக் கவலைப்பட்டனர். அது குறித்து அப்போதைக்குப் பேச்சு எழுந்தது. உமா கண்கலங்கிப் பிடிவாதமாக நின்றாள்.

தாயுள்ளம் மகனையே சார்ந்து நின்றது. "நீ ஒப்புக் கொண்டுதான் போயேம்மா" என்று சொன்னாள், ராஜாமணியம்மாள். எப்படியோ எடுத்து மகிழ ஒரு குழந்தை தேவை.

சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். கண்டிப்பாகவும், பிடிவாதமாகவுமிருந்தார், உமாவைப் போல!

"உமா நீ சம்மதிக்காதே! இன்னிக்கு திருநீற்றைக் கலைத்துடுன்னு சொல்லுவான். நாளைக்கு குங்குமமே அசிங்கமா இருக்கு. நீயும் மேலைநாட்டுப் பொண்ணு போல நாகரிகமாக என்கூட ஏன் வரக்கூடாதுன்னு சொல்லுவான். முடிகிற காரியமா?" என்று கத்தினார்.

"அது எப்படி குங்குமத்தில் கைவைப்பான்" என்றாள் ராஜாமணியம்மாள்.

"வைச்சுட்டான்... அப்புறம்? முதல்லேயே முன்னெச்சரிக்கையாக இருக்கிறது நல்லதில்லையா? அவனை ஒரு விஞ்ஞானியா பரிமளிக்கச் செய்யறதுலே எனக்கு மகிழ்ச்சிதான்... ஆனா அவனை ஒரு இந்துவா பார்க்கிறதுலே திருப்தி!" என்றார் சந்திரசேகரன்.

"நீங்களே இப்படி மருமகளுக்குத் தூபம் போடறதா?"

"ஓ.. குழந்தை பற்றிச் சொல்றே ராஜம்! அவன் ஒரு இந்துவா - இந்து தர்மத்தின் வாரிசா ஒரு வாரிசைப் பெற்றுக் கொடுத்தா போதும். ஒரு விஞ்ஞானியின் மகனா எனக்கு வாரிசு தேவையில்லை."

உமா தனக்கும் தன்னுடைய கணவனுக்கும் நெற்றிச் சின்னத்தால் ஏற்பட்ட பிளவு என்பதை விளக்கினாளேயொழிய, இப்போது தன்னுடைய நாட்டியத்துக்காக ஏற்பட்ட புதிய திருப்பத்தைக் கூறினாளில்லை. தனக்கு நாட்டியம் தெரியும் என்பதைக் காண்பித்துக் கொள்ள அவள் விரும்பவில்லை. இந்தக் கலை ரகசியம் தனக்கும் தன் கணவருக்கும் இடையே இருந்தால் போதும் என்றே எண்ணினாள்.

ஆனால், சித்ரா பற்றி மட்டும் கூறாமல் அவளால் இருக்க முடியவில்லை.

“மாமா! இன்னொரு செய்தி உங்களுக்கு?” என்று ஆரம்பித்தாள்.

“என்னம்மா?” சந்திரசேகரன் கேட்டார்.

“இப்ப அந்தச் சித்ரா தொடர்பு கிடையாது.”

“என்ன சொன்னே.. நிஜமாவா சொல்றே” – ராஜாமணியம்மாள் அதிர்ந்தாள்.

“நிஜமாகத்தான் மாமி! அவ ஊரை விட்டே போயிட்டா?”

“உனக்கு எப்படித் தெரியும்?”

“கேள்விப்பட்டேன்.”

“அது எப்படி முடிந்தது?”

“ஒரு நாள் என்னைப் பற்றி அவள் கேவலமாகப் பேசியிருக்கிறாள். இவருக்குக் கோபம் வந்துவிட்டது. பேச்சுக்கு மேல் பேச்சு முற்றி உறவு முறிந்திட்டதாகக் கேள்வி!”

“இது என்னிக்கு நடந்தது?”

“நீங்க ரத்தினகிரி முருகன் கோவிலுக்குப் போயிருந்த அன்றைக்கு.”

“முருகா!” என்று கூச்சலிட்டார் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.

“22 ஆயிரமென்ன. 22 லட்சமே கோவிலுக்குத் தானமாகக் கொடுக்கலாம்” என்று அரற்றினாள் ராஜாமணியம்மாள்.

“எப்படியோ, சனி விலகியது. அது போதும். நாளைக்கே எல்லாக் கோவிலுக்கும் அர்ச்சனை!” என்றாள் ராஜாமணியம்மாள்.

டாக்டர் சங்கரின் உடல் கொஞ்சம் இளைத்திருந்தது. அவனுக்கு அழகான மனைவியை அனுபவிக்க முடியலையே என்ற கவலை முன்பு இருந்தது. இப்போது அந்த அழகோடு கலந்த நாட்டியக்கலையை ரசிக்க முடியவில்லையே என்கிற கவலை.

தனக்குள் வேரூன்றிப் போன லட்சியத்தை அவனால் கலைக்காக இழக்க முடியவில்லை. அவன் ஒரு மாபெரும் விஞ்ஞானி. அவனுடைய நுட்பமான அறிவு உணர்த்துகிறது, ஏதோ ஒரு சக்தி உலகை இயக்குகிறது என்று! அதற்காக இப்படி மூட நம்பிக்கையான கோட்பாடுகள் தேவையில்லை. இன்றைக்கு உமாவை இப்படிக் கோவில் பூசாரி மகளைப் போல அனுமதித்து விட்டால், நாளைக்கு

அவளுடன் நாம் பல அலுவல்களுக்குச் செல்ல நேரிடும். அப்போது யாராவது ஏதாவது எக்கச்சக்கமாகக் கேள்விகளைக் கேட்டு விட்டால் பிறகு பதில்சொல்ல முடியாது. பதுங்கவும் முடியாது. முளையிலையே கிள்ளி எறிய வேண்டும் என்பது அவனுடைய முயற்சி!

பூசையறை வரை அவள் - உமா எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும்! புருஷன் இதயத்துக்கு அவள் மிஸஸ் சங்கர் போலத்தான் இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு அவள் காவிய மனைவியாக இருக்கட்டும். எனக்கு அவள் ஓவிய மனைவியாகத்தான் பரிமளிக்க வேண்டும்.

உரக்கக் கத்திப் பேசாத நிலை, மனம் கதறிக் கொண்டது.

மேன்மாடத்து விஞ்ஞானக் கூடத்தில் எதையோ பரிசோதித்த வண்ணம் குறிப்புகளைத் தயார் செய்து கொண்டிருந்தான் சங்கர். மூளையில் இருக்கும் ‘செல்ஸ்’ எனக்கூடிய புள்ளிகளைப் பற்றி ஆராய்ந்தான். எலக்ட்ரானிக் செல்ஸ்களை அலைகளின் மூலம் ஏவ முடியுமா என்பது தான். அந்தப் பரிசோதனை மூளைக்குப் பதிலாகக் ‘காயில்’ வைத்து ‘செல்ஸ்’களை வெளியிட இயலுமா?

விடை சரியாகக் கிடைக்கவில்லை.

அப்போது உமா எதிரே வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் சிந்தனை தடைப்பட்டது. யந்திரம் நின்றது.

“உமா! உன் மனம் திருந்தவே திருந்தாதா?” என்றான் சங்கர்.

“நான் என்ன தப்பு பண்ணினேன், திருந்த?”

“நாட்டியமாட மறுக்கிறாயே!”

“கட்டிலில் இடம் கொடுங்கள், நான் காலில் சலங்கை கட்டுகிறேன்!”

“நீ என் கொள்கைக்குப் புறம்பா இருக்கிறியே! உன்னை நான் என் வசப்படுத்த வேண்டும்னு முயற்சி பண்றேன். அதை நான் வெளிப்படையா சொல்லிடறேன்!”

“நான் உங்களை என் வசம் திருப்ப எந்த முயற்சியும் எடுக்க விரும்பவில்லையே! உங்க கொள்கையிலும் நான் தலையிடலையே! அப்படியிருக்க, நீங்க அவசியமில்லாமல் என்னை என் முகத்தை எதுக்கு அசிங்கப்படுத்த விரும்புறீங்க?”

“அசிங்கப்படுத்தறேனா? நீ நெற்றியில் எதுவுமே இல்லாவிட்டாலும்

அழகாகத்தான் இருப்பே!”

“யார் பார்க்கறதுக்கு?”

“நான் பார்க்கச் சம்மதிக்கிறேன்!”

“நீங்க உயிரோடு இருந்தாத்தானே?” உமாவின் கண்கள் பனித்தன!

கீழே இறங்கி வந்த உமாவைக் கண்ட சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். கண் சமிக்ஞையால் என்னவென்பது போலக் கேட்டார். உமாவும் ஒன்றுமில்லை என்று சமிக்ஞை செய்துவிட்டு, “எலக்ட்ரானிக் சர்ச் பண்ணிக் கொண்டிருக்கிறார்!” என்றாள்.

சந்திரசேகரன் அறைக்குள் சென்றுவிட்டார்.

அப்போது தெருவாசலில் டாக்ஸி வந்து நின்றது. உள்ளிருந்து உலகநாத முதலியார் இறங்கினார். டாக்சி டிரைவர் ‘டிக்’கிலிருந்த பெட்டியை இறக்கி வைத்தான்.

தகப்பனாரைக் கண்டதும் மிக்க மகிழ்ச்சியுடன் “மாமி!” அப்பா வந்திருக்கிறார்! என்றாளேயொழிய ஓடிச் சென்று தந்தையை வரவேற்கவில்லை. வீட்டில் பெரியவர்களிருக்க, தனக்குள்ள பாசத்தைக் காட்டுவது நல்ல மருமகளுக்கு அழகல்ல என்பதை அவள் உணர்வாள்.

உமாவின் குரல் கேட்டு உள்ளிருந்து வேகமாக வெளியே வந்தார் சந்திரசேகரன். “வாங்க சம்பந்தி, வாங்க!” என்ன திடீர் வருகை... வருவதாகத் தந்தி கொடுத்திருந்தால் ஸ்டேஷனுக்குக் காரை அனுப்பியிருப்பேனே!”

உலகநாத முதலியார் வணக்கம் தெரிவித்துப் புன்னகை புரிந்தார்.

“திடீர்னு நினைச்சிக்கிட்டேன், புறப்பட்டேன். நாளைய கழிச்சி வர்றதாதான் புரோகிராம். சென்னையிலே கொஞ்சம் வேலையிருக்கு. அதையும் முடிச்சுக்கலாமேன்னுதான் திடீர்னு புறப்பட்டேன்.”

உலகநாத முதலியார் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்த போதே வேலைக்காரன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான். டாக்சிக்குரிய கட்டணத்தை சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். கொடுக்க முன்வந்தார். அவரைக் கொடுக்கவிடவில்லை உலகநாத முதலியார்.

வாசற்படியில் நின்றிருந்த உமாவைக் கண்டு சிரித்தார்.

“சவுக்கியமா அப்பா?” என்றாள் உமா.

உலகநாத முதலியார் முறுவல் பூத்தார்.

ராஜாமணியம்மாள் கேட்டாள், “அது என்ன! மகளைக் கண்டு ஒரு வார்த்தை சவுக்கியமான்னு கேட்கலை?” என்றாள்.

உலக நாத முதலியாரும், “அவளுக்கு இங்கே என்ன சவுக்கியக் குறைச்சல் வந்துடப் போறது, நான் கேட்கறதுக்கு?” என்றார்.

கூடத்தில் அமர்ந்தார் உலகநாத முதலியார்.

வேலையாள் சூடாகக் காபி கொண்டு வந்து கொடுத்தான். இதற்குள் மாடிக்குச் செய்தி எட்டியது. சங்கர் கீழே இறங்கி வந்து மாமனாரை விசாரித்தான்.

“என்ன மாப்பிள்ளை இளைச்சிருக்கீங்க?” என்றார் உலகநாத முதலியார்.

சங்கரும் சிரித்துக் கொண்டே “எல்லாம் உங்கள் பெண்தான்!” என்றான்.

உமாவுக்கு வேதனையாக இருந்தது. ஏன்? பெற்றவர்களுக்கும் அப்படித்தான்.

உலகநாத முதலியார் புரியாமல், “என்ன மாப்பிள்ளை அப்படிச் சொல்றீங்க?” என்றார்.

“உடம்புலே அதிகமா வெயிட் இருக்கிறது இதயத்துக்கு ஆகாதாம். அதனால் கொஞ்சம் குறைக்கச் சொன்னாள்?” என்று சங்கர் சொன்னதும் இலேசான சிரிப்பொலிகள் மிதந்தன.

“வெந்நீர் தயாராக இருக்கிறது” என்று வேலைக்காரி சொன்னாள்.

“எழுந்திருங்க சம்பந்தி, பயணக்களைப்பு. குளிச்சி முடித்துச் சாப்பிட்டதும் சாவகாசமாகப் பேசலாம்” என்று சந்திரசேகரன் கூறியதன் பேரில் குளித்து முடிக்க எழுந்தார் உலகநா முதலியார்.

## 15

இந்த இரண்டு நாட்களாகவே உமா கலகலப்பாக இருந்ததைச் சங்கர் கவனியாமல் இல்லை. தந்தையிடம் அவள் கொண்டிருக்கிற அன்பு அவனறிந்தது. ஒரு பெண் பெற்றோர்களுடைய பாசத்தை எப்போது குறைத்துக் கொள்கிறாள்? கணவனிடம் பூரண அன்பையும் இன்பத்தையும் பெறுகிற போது,

இது சங்கருக்குப் புரியாததுமில்லை. இன்னும் அவள் ஒரு தந்தைக்கு மகளாக இருக்கிறாளேயொழிய ஒரு கணவனுக்கு மனைவியாகப் பூரணத்துவம் பெறவில்லையே! பின் ஏன் கலகலப்பாக இருக்கமாட்டாள்?

சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். தம் மனைவியிடம் சொன்னார், "உமாவை உன் மகன் பூரண மனைவியாக்காத குறை, அவள் மனதில் தந்தை பாசம் கொடிகட்டியிருக்கிறது. ஆனாலும் அவள் புத்திசாலிப்பெண். சந்தர்ப்பம் அறிந்து நடந்து கொண்டு வருகிறாள்!"

"ஒரு கவலை, இன்னும் சாந்தியே ஆகவில்லை, ஆனா தீபாவளி வரிசைக்கு அழைப்பு" என்றாள் ராஜா மணியம்மாள்.

"நீ பெத்த பிள்ளை. அவனுக்கு ஒரு அல்ட்ரா மாடர்ன் கேர்லைப் பார்த்திருக்கணும். தப்பு பண்ணிட்டோம்."

"ஐந்து நாட்களுக்குக் கூட நாம் நிம்மதியா இருந்திருக்க முடியாது."

"நம்மோட நிம்மதிக்காக இந்தப் பொண்ணு தியாகம் பண்ணிக்கிட்டு வருது!"

"சரி சரி! வாயை மூடுங்க! சம்மந்தி காதுலே கேட்டுடப் போவுது!" என்று ராஜாமணியம்மாள் கூறிக் கொண்டிருக்கிறபோது, மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார் உலகநாத முதலியார்.

"என்ன சம்மந்தி! வெளியிலே புறப்பட்டுட்டீங்களா? சென்னையிலே பார்க்க வேண்டியவங்களைப் பார்த்தாயிட்டது இல்லையா?" என்றார் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.

"பார்த்தாயிட்டது. இன்னிக்கே ஊருக்குப் புறப்படணும். வயல்லே வேலையிருக்கு. நெற்பொதிகளை அடித்து மூட்டையாக்கணும். மாப்பிள்ளையாண்டான் வந்ததும் தீபாவளி வரிசைக்கு அழைச்சிட்டு அப்படியே உத்தரவு கேட்டுக்க வேண்டியது தான்." என்றார் உலகநாத முதலியார்?

"ஏம்பா! இன்னும் இரண்டு நாளைக்குத் தங்கிப் போனால் என்ன?" என்றாள் உமா, சமையற்கட்டிலிருந்து வெளியே வந்தவண்ணம்.

"இல்லேம்மா... வீட்டைக் கவனிக்கிறது யாரு?" ஒரு பெருமூச்சு. பிறகு சொன்னார். "என் செய்யறது. நான் இருக்கிற வரைக்கும் நிலம், வீடு, அது, இது! பிறகு உன் பேரில் வந்ததும் யார் கவனிக்கப் போறாங்க?"

சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். குறுக்கிட்டார். "அப்படிச் சொல்லாதீங்க

சம்பந்தி! நீங்கள் இருக்கிறதுக்குள்ளாகவே நானும் ராஜாமணியும் ஓய்வு எடுத்துக்க வல்லம் படுகைக்கே வந்துவிட்டாலும் ஆச்சரியப்படறதுக்கில்லே! சங்கருக்கு சென்னையைவிட வல்லம்படுகை மிகவும் பிடித்திருக்கு. ஆராய்ச்சிக்கூடம் ஒன்றைப் பெரிதாகக் கட்ட அங்கே ஏற்பாடு செய்யணும்னு சொல்லிக்கிட்டிருக்கான்.”

“ஆகா! பேஷா! இப்பச் சொன்னாலும் நம் பங்களாவுக்குப் பின்புறம் பத்துக்காணி புறம்போக்கு காலியா இருக்கு! அதை ஒரு மாதிரி விலை கொடுத்தா வளைச்சிக்கலாம்.”

கார் வந்து நிற்கிற சத்தம் கேட்டது. சங்கர் காரில் இருந்து இறங்கி உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். அவனுக்கு ‘மூட்’ சரியில்லை என்பதை முகம் எடுத்துக் காட்டியது.

வேறோன்றுமில்லை. நாளை மாலை ஒரு பார்ட்டி. டில்லியிருந்து மூன்று விஞ்ஞானிகள் வருகின்றனர். சங்கர் தான் முன்னிருந்து வரவேற்றுக் கவனிக்க வேண்டும். அனைவரும் மனைவி மக்களுடன் வருவர். முன்னின்று வரவேற்பவன் தன் மனைவியுடன் போகாமலிருந்தால் நன்றாக இருக்குமா? இந்தப் பூசாரி மகளை எப்படி அழைத்துச் செல்வது என்ற குழப்பமுடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

சங்கர் யாரையும் சட்டை செய்யாமல் மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருந்தான். உமாவுக்கு வருத்தமாக இருந்தது.

“என்னங்க! அப்பா இன்னிக்கே ஊருக்குப் புறப்படணுமா?” என்று ஆரம்பித்தாள்.

உடனே உலகநாத முதலியாரும் எழுந்து, “ஆமாம் மாப்பிள்ளே! ஊர்லே நிறைய வேலையிருக்கு! தீபாவளி வரிசைக்குச் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன். முன்கூட்டியே உமாவை அழைச்சிக்கிட்டு, வந்துடணும்!” என்றார்.

சங்கருக்குக் கடுப்பாக இருந்தது.

“எனக்கு அப்போ டில்லிக்குப் போகிற வேலையிருக்கு. உமாவை வேண்டுமானால் வந்து அழைச்சிட்டுப் போங்க!” என்றான் முகத்தில் அடித்தது போல!

உமாவுக்கு நெஞ்சு பிளந்தது.

ராஜாமணியம்மாள் மிக்க கோபமுடன், “சங்கர்!” என்றாள். சங்கர்

மீண்டும் திரும்பிப் பார்த்தான்.

“என்னடா இது! பெரியவர் கேட்கிறார், சமாதானமா நாலு வார்த்தை பேசிட்டுப் போறதுக்கு என்ன!”

“அதுக்குத்தான் அப்பா இருக்கிறாரே!”

“அப்பாவா வரிசைக்குப் போகப் போகிறார்?”

“நான்தான் போகணும்னு என்ன இருக்கு?”

“வழக்கம் இருக்குப்பா! என்றார் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.

“ஏதோ இரண்டொரு துணிமணி, சாமான்கள் கொடுப்பதை வாங்க நான் ஏன் கவுரவத்தை விட்டுப் பிச்சைக்காரன் போலப் போகணும்? இல்லியாப்பா? எனக்குப் பிடிக்காத வழக்கம். அப்படி என்ன இவர் இம்பாலா காரை வாங்கி, அதன் சாவியை, தங்கத் தட்டிலா வைத்துக் கொடுக்கப் போறாரு?”

சங்கர் வேகமாக மாடிக்குச் சென்றுவிட்டான்.

அனைவருமே அதிர்ச்சியால் கல்லாய்ச் சமைந்து நின்றனர்.

சங்கர் இப்படி அநாகரிகமாக நடந்துகொண்டது உமாவுக்கு அவமானமாக இருந்தது. தன் தந்தையார் எத்தனை பெருமிதத்துடன் வந்தார். எத்தனை சிறுமிதத்துடன் திரும்புகிறார்!

இரு தினங்களாகவே கணவன் முகத்தைக் காட்டிப் பேசவில்லை. கவலைப்பட வேண்டியவள் உமா! – முகத்தைச் சுளித்துக் கொள்ள வேண்டியவளும் அவளே! எதற்கும் மனம் கோணாத அவள் இது பற்றியதிலா சுளித்துக் கொள்ளப் போகிறாள்! கணவன் நடந்துவிட்டத் தரக்குறைவான நடத்தைக்காக ஏற்பட்ட அவமானத்தால் தந்தை மனம் புண்பட்டதே என்ற வருத்தம் கால்பங்குதான்! அதனால் தன் கணவனே அவமானம் தேடிக் கொண்ட நிலைதான் முக்கால் பங்கு அவளை உறுத்தியது.

இன்றைக்கு விஞ்ஞானிகள் வரவேற்புக் கூட்டம், விருந்து. தன் மனைவியை அழைத்துச் செல்ல வேண்டும், நாலு பேர் கேட்டால் என்ன பதில் சொல்வது என்கிற தருமசங்கடமான நிலை.

உமாவை அழைத்து இன்றைக்கு மட்டும் நெற்றியில் வேஷம் போடாமல் சங்கரின் கொள்கை மனைவியாக வரமுடியுமா என்று கேட்க நினைத்தான் சங்கர். அப்படிக் கேட்பதால் காரியம் நடக்குமா?

உமா இந்த ஒருநாளைக்கு மட்டும் எப்படிக் கொள்கையில் தளர்ந்து விடுவாள்? அப்படித் தளருகிறவள் படுக்கையறைக்கு வருகிறபோது மட்டும் சிவபக்தைக் கோலத்தைத் தவிர்த்து வரலாம் அல்லவா? அதற்கே – ஒரு பெண்ணுக்குரிய நிறைவுக்கே அவள் மறுக்கிறாள் என்றால் விஞ்ஞானிகள் கூட்டமாவது – மெஞ்ஞானிகள் கூட்டமாவது!

உமா நிச்சயம் மறுப்பாள், ஏன்? கேட்டுக் கேவலடைய வேண்டும் என்று எண்ணிப் புறப்பட்டு விட்டான் சங்கர். ஏதோ சாக்குப் போக்குக் கூறிக் கொள்ளலாம் என்கிற முடிவுக்கு வந்துவிட்டான் சங்கர்!

அன்றைக்கு முழுநிலா.

நான்கு மணிக்கெல்லாம் சங்கர் வெளியே புறப்பட்டு விட்டான்.

அவன் எங்கு செல்கிறான் என்ற செய்தி உமாவுக்குத் தெரியும். நியாயப்படித் தன்னையும் அழைத்துச் செல்ல வேண்டும், தன் கொள்கையின் காரணமாக அழைக்காமல் செல்கிறார் என்கிற மறைபொருளையும் அவள் அறிவாள். அதற்காக அவள் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை.

மைலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்குச் சென்று திரும்பலாம் போலிருந்தது. வாரத்துக்கு ஒருமுறையேனும் அவள் கபாலீசுவரரைத் தரிசிக்காவிட்டால் தலை வெடித்துவிடும்.

சில சமயங்களில் மாமியார் உடன் வருவாள். சில சமயங்களில் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். வருவார், சில சமயங்களில் வேலைக்காரியை உடன் அழைத்துச் சென்ற நாட்களும் உண்டு. அன்றும் அப்படித்தான். வேலைக்காரியை அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் புறப்பட்டாள்.

கபாலீசுவரரைக் காணுந்தோறும் கண்ணீர் மல்கி அழுவாள். தன்னை இந்நிலைக்கு ஆளாக்கிவிட்ட ரகசியம் என்ன என்று கேட்டு இறைஞ்சுவாள்! முன்செய்த தீவினையோ... அல்லது கர்மா என்கிறார்களே... அதுவோ?

இப்போதும் இறைஞ்சினாள்... காரணம் புரியவில்லை, காரியமும் விளங்கவில்லை. கண்ணீர் மல்கியதோடு திரும்பினாள்!

தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது.

வல்லம் படுகைக்குப் புறப்படுவது பற்றி வெகுவாக முயற்சி எடுத்துக்

கொண்டவர் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.

அன்று பகல் உணவுக்காகச் சாப்பாட்டு மேஜையைச் சுற்றி அவர்கள் அனைவருமே அமர்ந்தனர். உமாதான் பரிமாறினாள். வழக்கமாக வேலைக்காரிதான் பரிமாறுவாள். உமா வந்த நாள் முதல் தானே பரிமாறிப் பின்னர் கணவன் தட்டில் அமர்ந்து தானுண்பாள். ராஜாமணியம்மாள் பலமுறை பல பேர்களிடம் சொன்னதுண்டு. இப்படி ஒரு மருமகளைப் பெற்றது இந்தக் குடும்பம் செய்த பாக்கியம் என்று. ஆனால், மகன் அவள் விஷயத்தில் முரட்டுத்தனமாக நடந்து கொள்வது தான் அதிருப்தியை அளித்து வந்தது.

சங்கர் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சந்திரசேகரன் பேச்சைத் தொடங்கினார். “சங்கர்! நீ என்னப்பா முடிவு செய்தே?”

சங்கர் வாயண்டை கொண்டு சென்ற சோற்றுக் கவளத்துடன் தந்தையை நோக்கினான். “எது பற்றிப்பா!”

“வல்லம்படுகைக்குப் போகிறதைப் பற்றி!”

“தீபாவளிக்கா?”

“ம்ம்..!”

“நான்தான் அன்னிக்கே சொல்லிவிட்டேனே...”

“இம்பாலா கார் வரிசையா?”

“அது விளையாட்டுக்குச் சொன்னது!’

“விளையாட்டு என்று பெரியவர்களைப் புண்படுத்துவதா?”

“நான் யார்? என்னைப் போய் வரிசை அது இதுன்னு அழைக்க அவருக்கே தெரிய வேண்டும்! இதெல்லாம் மூடத்தனமான வழக்கங்கள்!”

“இம்பாலா வாங்கறது மட்டும் நல்ல வழக்கமா?”

“அது மதிப்பை உயர்த்துவது?”

“ஓகோ... நீ போக மாட்டாய்?”

“இல்லை. வேண்டுமானால் உமாவை அனுப்பி வையுங்கள்”

அதுவரை பேசாமலிருந்த உமா வாய் திறந்தாள்.

"நீங்க வராம எனக்கு மட்டும் அங்கே என்ன வேலை. அப்படித் தாய் வீட்டுப் பைத்தியத்துடன் அலையும் குணம் எனக்கில்லை."

சந்திரசேகரன் கடகடவென்று சிரித்துவிட்டார். அப்படிச் சிரித்ததில் அவருக்குப் புரைகண்டது. ஒரு குவளை நீர் அருந்திவிட்டு , "நல்லா சொன்னேம்மா உமா! உன் மாமியார் இருக்கிறாளே, கல்யாணமான புதிதில் என்னைத் துளைத்து எடுத்துவிடுவாள். அம்மா வீட்டுக்கு அடுத்தடுத்துப் போகலைனா தலைவெடித்துவிடும்!" என்றார்.

ராஜாமணியம்மாளுக்கு எரிச்சலாக இருந்தது. "போதும்! மருமகளிடம் பேசற லட்சணம்தான்!"

"அவ இதைத் தப்பா எடுத்துக்க மாட்டாடி! அதுக்குள்ளே எரிஞ்சு விழாதே!" என்று கூறிவிட்டுக் கையை அலம்பினார்.

"சங்கர்! இதுதான் உன் முடிவா? அந்தப் பெரிய மனுஷன் வேதனைப்படறது நமக்கு நல்லதல்ல. நீயும் போகாமல் உமாவும் போகாமலிருந்தால் ஊர் மக்கள் என்ன நினைப்பாங்க?" என்றார் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.

சங்கரும் கையலம்பிக் கொண்டே சொன்னான், "வேண்டும்னா நீங்களும் அம்மாவும் போய் வரிசையை ஏத்துக்கிட்டு வாங்க!"

சந்திரசேகரன் ருத்திரமூர்த்தியாகிவிட்டார். மனைவியை வைத்துக் கொண்டு என்ன பேச்சு பேசிவிட்டான்!

"சங்கர்...!" என்று அலறினார் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.

# 16

எதிர்பார்த்த மாதிரி ஏதும் நடந்துவிடவில்லை. கோபம் மனிதர்களுக்கு உரிமைச் சாதனம் என்றாலும், அந்த விதியை வெல்லக்கூடிய பண்பு சந்திரசேகரனிடம் இருந்ததால் தம்மைச் சமாதானப்படுத்திக் கொண்டார்.

அன்று மாலைவரை அந்த மாளிகையில் அமைதியே நிலவியது. யாரும் யாருடனும் பேசிக் கொள்ளவில்லை. கணவன் இப்படி இருப்பார் என்பது உமா எதிர்பாராதது. ஒரு விஞ்ஞானி என்பதால் உலகையே படைப்பவனாகி விட முடியுமா? அது ஒரு படிப்பு. உலகுக்குத் தேவையான படிப்பு என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் உலகமே அந்தப் படிப்புக்குத் தலைவணங்க வேண்டும் என்று ஆகிவிட முடியுமா? உமாவால் சரிமானமே

செய்யமுடியவில்லை.

விஞ்ஞானத்தை ஏன் குறை கூற வேண்டும். அவருடைய குணச்சித்திரம் - கேரக்டர் அப்படியானது என்று சமாதானம் செய்து கொண்டாள்.

சாளரத் தண்டை நின்று கொண்டிருந்தவள் வானத்தை அண்ணாந்து கவனித்தாள். கருமேகக் கூட்டம் கொட்ட மடித்துக் கொண்டிருந்தது. மேற்கு வானில் மின்னல் பளிச் பளிச் சென்று ஒளிக்கோலம் வரைந்தது. காலை முதல் நல்ல மழை. மூன்று மணி சுமாருக்குத்தான் ஓய்ந்தது. மீண்டும் எந்த நேரத்திலும் அது பிடித்துக் கொள்ளலாம்.

காற்று சிலுசிலுவென்று குளுமையாக வீசியது. அவளுக்கோ வியர்த்துக் கொட்டிக்கொண்டிருந்தது.சற்றே புறக்கடைப்புறம் சென்று காற்று வாங்கலாம் என்று நடந்தாள்.

தோட்டத்தில் இரண்டு வேப்ப மரங்கள்.

சுற்றிலும் கண்ணோட்டமிட்டுக் கொண்டு வந்த உமா,ஓரிடத்தில் வந்ததும் கண்கள் நிலைகுத்தி நின்றன.

அங்கே-

அழகிய நாகப் பாம்பு ஒன்று படம் விரித்து ஆடிக்கொண்டிருந்தது.வழக்கமாக இப்படியான கார்மேகக்காலத்தில் மயில்கள் தோகை விரிக்கும்,வசந்த மாலையில் நாகம் படம் விரிக்கும்! இப்போது நேர்மாறாகக்கண்டதை அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. தன்னுடைய வாழ்க்கை நேர்மாறாக அமைந்தது போலல்லவா இருக்கிறது!

சத்தமிட்டு யாரையாவது அழைக்கலாமா என்று நினைத்தாள். வேண்டாம் அவர் வீட்டில் இருக்கிறார். துப்பாக்கி எடுக்காமல் துருதுருவென்று இருக்கும் அவருடைய கைகள் சும்மா இராது. இது மனைப் பாம்பு. வந்தது போலவே சென்றுவிடும். யாரையும் ஒன்றும் செய்யாது.

அப்போது அதற்கேற்றாற் போல பாம்பும் படத்தை மும்முறை பூமியில் அடித்தது.கையெடுத்துக் கும்பிட்டாள். நாகம் சத்தியத்துக்கு உட்பட்டது. அதன் மறுபெயரே சத்தியம். இதனுள் அடங்கிய பொருள் சூட்சமம் நிறைந்தது.

அப்போது உமாவைக் காணாமல் தேடிவந்த டாக்டர் சங்கர், உமா ரசித்துக் கொண்டிருக்கும் பாம்பைக்கவனித்து விட்டான்."உமா

பாம்பு!” என்றலறிய சங்கர்

விறுவறு வென்று உள்ளே சென்றுதுப்பாக்கியை எடுத்து வந்தான்.

அதற்குள் நாகம் ஒரு பொந்துக்குள் சென்று மறைந்து விட்டது.

சங்கருக்குக் கோபமாக வந்தது. எடுத்ததுப்பாக்கி வீணாகிவிட்டதில்அவனுக்கு ஆத்திரம். மேலே நோக்கினான். மந்தார வானில் கூடு நோக்கிச் செல்லும் கொக்குக் கூட்டம்.

“டுமீல்” என்று துப்பாக்கி வெடித்தது

ஒரு கொக்கு பரிதாபமாக விழுந்து துடித்து இறந்தது. உமாவுக்கு வேதனை தாளவில்லை.

கொக்கை எடுத்தாள். அது மாண்டு கிடந்தது. “ஒரு உயிரை அநியாயமாக கொன்னுட்டீங்க!”

சங்கர் அலட்சியமாகச் சொன்னான்: “இதனால் உலகுக்கு எந்த நஷ்டமும் இல்லை.”

“நஷ்டத்தைப் பார்த்தால் பல விஷயங்களை வாதிக்கலாம். உங்களால் யந்திரத்தால் மனிதனைக் கண்டு பிடிக்க முடிகிறதோ இல்லையோ, ஆனா…இறந்த உயிரை மீட்கவே முடியாது. இன்றல்ல என்றைக்குமே எந்த உயிரை மீட்கவே முடியாது. இன்றல்ல என்றைக்குமே எந்த விஞ்ஞானிகளாலும் இதைச் செய்ய முடியாது.”

“உமா!” – கர்ச்சித்தான் சங்கர்.

“கோப்பட்டு என்ன பிரயோஜனம்? மனித சிந்தனை யந்திரமாகி விட்டது. ஒண்ணைச் சொல்லுவேன்…”எலக்ட்ரானிக் “மனிதனை நீங்கள் படைக்கலாம். ஆனால் அதைக் கண்டுபிடிக்கிற விஞ்ஞானியை ஒரு பெண்தான் படைக்க முடியும்!”

உமா வேகமாக உள்ளே சென்று வட்டாள்.

அவள் சொன்னதை வெகு நேரம் சிந்தித்துப் பார்த்தான் சங்கர். எத்தனை பெரிய உண்மையை எவ்வளவு சர்வ சாதாரணமாச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

அவள் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை! யாரால் மறுக்க முடியும்?

மதிக்க முடியாவிட்டாலும் மறுக்க முடியுமா?

இனிமை தரத்தான் இரவு உதயமாகிறது.மனிதர்கள் அதைக் கசப்பாகவும் பயன்படுத்திக் கொள்கிறார்களே! அதற்காக நிலவு வெப்பத்தை கொட்டுகிறதா? அது தன் கடமையைச் செய்து கொண்டுதான் இருக்கிறது!

உமா தன் கடமைப்படி கணவனுக்குப் படுக்கை விரித்து விட்டுக் கீழே தன்னுடைய படுக்கையைப் போட்டுப் படுத்தாள். இன்னும் சங்கர் வரவில்லை. அவன் மேல் மாடியில் ஏதோ ‘எக்ஸ்பிரிமண்ட்’ செய்து பார்த்துக் கொண்டிருந்தான்.

உமாவின் நினைவு வல்லம் படுகைக்குச் சென்று திரும்பியது. அப்பா என்ன மனவேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறாரோ! ஒரே பெண்! அவளுக்கு என்னென்ன செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டாரோ! அடுத்த பெண் இருந்தாலும் அவள் முலம் நிறைவேற்றிக் கொள்ளலாம்.இவரை எப்படியும் சம்மதிக்கச் செய்ய முடியாது. அவருடைய கொள்கைக்கு நாம் சம்மதிக்கச் செய்ய முடியாது.அவருடைய கொள்கைக்கு நாம் சம்மதித்து விட்டால் பிறகு எல்லாமே சரியாகிவிடும். சே, சே! அவர் யாரிடமும் சரணடைய வேண்டாம். தெய்வத்திடம் சரணடையலாம்! அது ஒருவேளை என் கலையின் மூலமாகவே நிகழட்டுமே! உலகின் புகழ் பெற்ற தமிழ் விஞ்ஞானி உருப்படியாகச் செயலைச்சாதிக்கத் தெய்வ நம்பிக்கை மிக மிக அவசியம். தெய்வநம்பிக்கையற்ற எந்தச் செயலும் அரைவேக்காடாகவே முடிகிறது!

காலடிச் சத்தம்.

கணவர் வருகிறார்;

எழுந்து கொண்டாள், மரியாதைக்காக.

“உமா.”

“என்னங்க?”

“காஷ்மீருக்குப் போய் வரலாமா என்று யோசிக்கிறேன்!”

“ஏன்”

“உன்னுடன்தான். அங்கே உன் கலையழகையும், அழகுக் கலையையும்இதமாகப் பருகி மகிழணும்னு ஆசைப்படுகிறேன்.”

“நான் ஒரு பக்தையாகவே உங்களுடன் வரலாம் அல்லவா? இமயமலை என் கடவுள் வாழ்கிற இடம்.எனக்கும் நிறைவாக

இருக்கும்!”

“நீ ஏன் ஒரு காஷ்மீரியப் பெண்ணாக என்னோடு வரக்கூடாது?” “கனடா நாட்டுக்கு அழைத்தாலும் ஒரு தமிழச்சியாகத்தான் நான் வருவேன்; ஒரு இந்து தர்மப் பெண்ணாகத்தான் வருவேன்.”

“அப்படி நீ மறுத்தால்-“

“மறுத்தால்-“

“உன்னைக் கொன்று விடலாம் என்று முடிவுசெய்துவிட்டேன்!”

உமா கலகலவென்று சிரித்தாள்.

“ஏன் உமா இப்படிச் சிரிக்கணும்? உன்னைக் கொல்லப் போறேங்கிறதுல்லே இப்படி ஒருஆனந்தமா?”

மீண்டும் சிரித்துவிட்டு உமா சொன்னாள்.

“உங்களுக்கு என் மேலே இருக்கிற ஆத்திரம் இப்படிச் சொல்லச் சொல்றது. நீங்க என்ன ஒத்தெல்லோவா? நான்தான் டெஸ்டிமோனியாவா? நம்ப ரெண்டு பேருக்குமிடையே கையளவு இடமே கிடைக்கவில்லை; கைக்குட்டையா கிடைக்கப் போகிறது?”

“இந்த விளக்கை அனைத்துவிடு…” சங்கர்,ஒத்தெல்லோ சொன்னது போல ஆரம்பித்தான்.

உமா குறுக்கிட்டாள்: “உங்க வாழ்க்கையிலே வேறு விளக்கு கிடையாது!”

“நானே ஒரு வெளிச்சம்!”

“ஆனால் சக்தி – மனைவிதான்.”

சங்கர் மேற்கொண்டு பேச முடியவில்லை. அவர்களுடைய விளக்கு ஒருமுறை கண்சிமிட்டி எரிந்தது. எங்கோ மின்னல்!

அடுத்த வினாடி-

விளக்கு பட்டென்று அணைந்தது.

ஒரே இருட்டு-

உமா எழுந்திருக்கவில்லை. சங்கர் என்னென்னமோ அந்த சில விநாடிகளில் எண்ணுகிறான். பலாத்காரம்…பலாத்காரம்…

என்ன செய்துவிட முடியும்? இருட்டில் நெற்றியை அழித்து நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்..

ஆனால்…ஆனால்..

இது நாம் செய்கிற காரியமா?

சே, அவள்தான்என்ன நினைப்பாள்?

“மெழுகுவத்தி கொண்டு வரட்டுமா? வெளிச்ச மில்லை.” “வேண்டாம். இருட்டிலும் என்னால் வெளிச்சமுடனிருக்க முடியும்!”

கணவனுடைய பதிலைக் கேட்டு உமா வியந்து கொண்டாள்.

“உனக்கு இருட்டு பயமா இருக்கா உமா?”

நான் வெளிச்சத்திலும் பயப்படுவதுண்டு.” வெளிச்சத்திலும் பயப்படுவதுண்டா?” ம்ம்!

சில மனிதர்களைச் சந்திக்கிற போது!”

ஓ…என்னைக் கண்டு பயப்படுவதில்லையே!” “இருட்டிலும் வணங்குகிறேன்!”

மனைவியின் பதிலைக் கேட்டு சங்கர் வியந்து கொண்டான்.

குப்பென்று வெளிச்சம் பரவியது.

“உமா!”

“ம்…!”

“நம் வாழ்வு இப்படியே முடிந்துவிடும் போல இருக்கு!”

“முடியட்டுமே…!”

“நட்டம் யாருக்கு? எனக்குத்தானே?”

“அப்படியா! எனக்கு லாபமானால்?...அந்தக் கணக்கை சித்ராவை விட்டு எழுதச் சொல்லுங்க! தூக்கம் வருது…”

சங்கர் எழுந்து சென்றுவிளக்கை அணைத்தான். பிறகு ஜீரோ வால்ட் எரிந்தது.

# 17

தீபாவளிப் பொழுது ‘நரகாசுரா’ என்று விடிந்தது.

இந்நேரம் வல்லம்படுகையில் தன் வீட்டிலிருக்க வேண்டியவள் என்கிற நினைவுடன் தலை முழுகிக் கொண்டிருந்தாள் உமா. கலியாணமானவளானாலும் கன்னி முத்திரையுடன் கூடிய உடலைப் பார்த்து மற்ற பெண்களைப் போலக் கவலை கொண்டாளில்லை.அவளுக்கு உடல் வாகுவின் கம்பீரத்தைப் பற்றியே நினைவு கிடையாது. அவளுடைய நினைவு சிவன், கணவன்!

குளித்து முடித்த ஈரத் தலையுடன் வெளியேவந்தாள்.சங்கர் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பிடிக்காத விசேஷ நாள். நரகாசுரனாவது மண்ணாங்கட்டியாவது! இப்படியான விசேஷங்கள் இல்லாவிட்டால் மனிதர் உருப்படியாகச் செலவு செய்யமுடியாதே! குழந்தை சட்டையில்லையே என்று அழுகிற போது வெற்றுநாளில் எவனாவது குடும்பச் செலவைக்குறைத்தோ,கடன்பட்டோ சட்டை தைத்துத் தருவானா? எவனாவது பலகாரம் செய்துதான் படைப்பானா?

மனித வாழ்வுக்கு ஏற்படுத்திய நல்ல விஷயங்கள் என்று போற்றுவானேயொழிய நாலுந் தெரிந்த அவன் எப்படிக் கொண்டாட முடியும்?

சங்கரைத் துயிலெழுப்பிக் குளியலறைக்கு அனுப்பிவைத்தாள் உமா.

வீதியில் பிள்ளைகள் பட்டாசுக்கட்டுகளை வெடித்தனர். எங்கோ வீதிகளிலிருந்து யானை வெடிகளின் காதைப்பிளக்கும் சத்தம்.

சங்கர் குளித்து முடித்து வெளியே வந்தான். அவனைத்தவிர அனைவருமே புத்தாடைகள். அவன் அதைப்பற்றிக்கண்டு கொள்ளவில்லை.

எல்லாரும் ஒன்றாக அமர்ந்து இனிப்புடன் உண்ண ஆயத்தங்கள் நடைபெற்றன. அப்போது-

தெருக் கதவோரமாக ஒருவன் “சார்!” என்று குரல் கொடுத்தான்.

“யாரப்பா நீ?”சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். விசாரித்தார்.

“விஞ்ஞானி அய்யா இருக்காங்களா?”என்று பணிவுடன் கேட்டான்

அவன்.

“நான்தான் என்ன வேண்டும்?” – என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தான் சங்கர்.

வந்தவன் கையிலிருந்த சின்னஞ் சிறிய தங்கத் தட்டில் ஒரு சிறு சாவியை வைத்து, “இதை வல்லம் படுகை மிராசுதாரர் ஐயா உங்ககிட்டே கொடுத்துட்டு வரச் சொன்னாங்க!” என்று நீட்டினான்.

அனைவருக்குமே ஓர் அதிர்ச்சி.

“என்ன இது?” என்றான் சங்கர்.

மூடியிருந்த கதவுகளைப் பரக்கத் பிறந்து காட்டினான் வந்தவன். வெளியே புத்தம் புதிய இம்பாலா கார், அழகைக் கொட்டி நின்று கொண்டிருந்தது.

அதைக் கண்ட அனைவருடைய கண்களும் பல விநாடிகள் வரை நிலைக்குத்தி நின்றன.

“நான் வர்றேன் சார்!”

சந்திரசேகரனுக்கு நினைவு திரும்பியது. “இருப்பா சாப்பிட்டுப் போகலாம்.”

“ஐயா! இதை ஒப்படைக்கத்தான் வல்லம்படுகை ஐயாசொன்னாரு. சாப்பிடச் சொல்லலை.”

தங்கத் தட்டையும் கார் சாவியையும் ஒப்படைத்து விட்டு அவன் விடைபெற்றுக் கொண்டு நடந்தான்.

உமா இந்த உலகில் பெற முடியாத ஒன்றை பெற்று விட்டது போன்ற உணர்வுடன் “ஈஸ்வரா!” என்று கண்மூடிப் பிரார்த்தனை புரிந்தாள்.

சங்கரால் எதையும் பேச முடியவில்லை. அவன் மாடி நோக்கி நடந்தான்.

சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.சொன்னார்: “சங்கர்! உன் மாமனார் எவ்வளவு பெரிய மனுஷன் என்பதைக் காட்டிட்டாரு!”

அவன் மேலும் சில படிகளை ஏறினான்.

“சங்கர்! நீ உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிதான். யாரும் மறுக்க முடியாது. ஆனா… இந்தக் குடும்பத்தை ரொம்ப சின்னதாக்கி

விட்டே…இதையும் நீ மறுக்க முடியாது!” என்றார் ஐ.ஏ.எஸ்.

அவன் மேலும் சில படிகளைக் கடந்தான்.

“சங்கர்! யாரும் பெற முடியாத பிள்ளையைப் பெத்துட் டேன்னு கர்வப்பட்டுக்கிட்டிருந்தேன். யாரும் பெறக் கூடாத மருமனைப் பெற்றுட்டோம்னு நிரூபித்துக் காட்டிட்டாரு வல்லம்படுகை சம்பந்தி!”-சந்திரசேகரன் கண்ணீர் விடுகிறார்.

சங்கர் கடைசிப் படிகளை நெருங்கிக் கொண்டிருந்தான்.

“சங்கர்! வாழ்க்கையிலே படிப்பு பெரிசு இல்லேடா…பண்பாடு! ஆராய்ச்சி பெரிசு இல்லேடா… அனுபவம்! கவுரவம் பெரிசு இல்லேடா… கடமை! தவம் பெரிசு இல்லேடா…தருமம்!ககனத்தின் கோளங்கை பெரிசு இல்லேடா…கடவுள்!கடவுள்!”

ஒவ்வொன்றையும் சத்தமிட்டுக் கூறிக் கொண்டேதாமும் ஒவ்வொரு படியாக ஏறிப் பின்தொடர்ந்தார் சந்திர சேகரன் ஐ.ஏ.ஸ். அவர் அவமானத்தால் குன்றிப்பட்டார்.

சங்கர் எந்தவிதப் பதிலையும் சொல்லாமல் மாடிவாசலில் நுழைகிற போது-

“சங்கர்!” என்றலறினாள் அன்னை ராஜாமணியம்மாள்.

சங்கர் திரும்பிப் பார்த்தான்.

“சாப்பிட வராம எங்கே போறே?”என்று சத்தமிட்டுக் கேட்டாள் அன்னை.

சங்கர் இப்போதுதான் நாவசைத்தான்.

“சாப்பாடு வல்லம்படுகையில்! காபி வேண்டுமானால் வழியில்! இன்னிக்கு இங்கே தண்ணீர்கூடப் பருக மாடடேன்” என்று கூறிய சங்கர், மனைவியை நோக்கி, “உமா! சீக்கிரம் தயாராகு!” என்று கட்டளையிட்டான்.

உமா மட்டுந்தானா மகிழ்ந்தாள்?

பெற்ற உள்ளங்களில் இனிப்பை வாரி இறைத்து விட்டான் சங்கர்.

புத்தம் புதிய இம்பாலா கார் வல்லம்படுகையை நோக்கி வேகமாகப் பறந்து கொண்டிருந்தது.இம்முறையும் காரின் பின்சீட்டில்தான் உமா அமர்ந்திருந்தாள். வல்லம்படுகையில் இருந்து முன்பு வருகிறபோதும்

அப்படித்தான். இப்பவும் அதில் மாற்றமிலலை. பக்கத்தில் அமருகிற பாக்கியம் இன்னும் கிடைக்கவில்லை போலும்!

விழுப்புரத்தில் காபி அருந்தினர். காரில் இருந்தவண்ணமே அருந்தினர். பிறகு அந்த மூச்சில் கார் வல்லம்படுகையை நோக்கிப் பறந்தது.

“சிதம்பரம் வழியாகத்தானே போறீங்க?” என்றாள் உமா.

“ஏன்?”

“கோயிலுக்கு உள்ளே போகிற பாக்கியம் கிடைக்கா விட்டாலும், கோபுரங்களைத் தரிசிக்கிற பாக்கியமாவது கிடைக்குமேன்னுதான்.”

சங்கருக்குப் புரிந்தது. :கார் சிதம்பரம் வழியாகத்தான் போயாகணும்.”

கார் பண்ணுருட்டியைத் தாண்டியது.

தாகம் எடுத்தது உமாவுக்கு. அவள் வாய்திறக்கவில்லை. புதிய கார்! மிக உயர்ந்த கார்.காற்று வேகத்தில் ஓடியது.

மணி இரணடை நெருங்கிக் கொண்டிருந்தது. கார் வல்லம்படுகையை அடைந்து மிராசுதாரர் மாளிகையில் நின்றது.

வெளியில் கேட்ட சத்தத்தைச் செவிசாய்த்த உலகநாத முதலியார் எட்டிப் பார்த்தார். தாம் அனுப்பிய கார் தம் மாளிகை வாசலில் வந்து நிறகிறது. ஏன்? மாப்பிள்ளை திருப்பி அனுப்பி விட்டாரா?

எழுந்து வெளியே வருகிற போது-

மகளும் மருமகப் பிள்ளையும் இனையாக வருவதைக் கண்டுஉள்ளம் பூரித்து விட்டார் உலகநாத முதலியார். அன்புடன் வரவேற்றார்.

எடுத்ததும் முதல் வார்த்தைகளாக, “மாமா! என்னை மன்னிச்சிடுங்க!” என்றான் சங்கர்.

உலகநாத முதலியார், :மாப்பிள்ளே… பெரியவார்த்தை சொல்றீங்க! உலகப் புகழ் பெற்ற மருமகப் பிள்ளையைப் பெற்றவன் நான். நீங்கள் ரொம்பகுறைவா கேட்டுட்டீங்களேன்னு, இந்த இம்பாலா காரை எப்படியோ, பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து வாங்க முடிந்தது.நான் நீங்க அடிக்கடி மேல்நாட்டுக்குப் போக வேண்டி வருமே…ஒரு விமானத்தையே வாங்கித் தரலாம்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன், அதுக்கென்ன! இருக்கிற சொத்தை யாரு அனுபவிக்கப் போறது? நீங்கதானே!”

வேலையாட்கள் பம்பரமாகச் சுழ்ன்று வேலைகளைக் கவனித்தனர். எசமானர் கட்டளையிட வேண்டும் என்று யாரும் காத்திருக்கவில்லை. பண்டு பலகாரங்கள் துரிதமாகத் தயாராகிக் கொண்டிருந்தன.

ஆடைகளைக் கழற்றி வைத்துவிடடுக் களைப்பாற்றிக் கொண்டிருந்த சங்கர் "உமா! சாப்பாடு ராத்திரிக்குப் பார்த்துக்கலாம். அகால வேளை. ஏதாவது டிபன் தயார் பண்ணச் சொல்" என்றான்.

டிபன் அரைமணி நேரத்தில் இனிப்புடன் தயாராகி விட்டது.

மூவரும் அமர்ந்து உண்டு முடித்தனர்.

பிறகு உலகநாத முதலியார் மகளிடம் சொல்லிக் கொண்டு வெளியில் புறப்பட்டார். சிதம்பரத்துக்குத்தான் பயணமானார்.

"காரை வேகமா ஓட்டின அலுப்பு தீர படுத்து ஓய்வு எடுங்களேன்" என்றாள் உமா. சங்கருக்கு அது நியாயமாகவே பட்டது. எனவே அவன் மாடியறை நாடிச் சென்றான்.

உமா கூடமாட ஆக வேண்டியதைக் கவனித்தாள். வேலையாடகள் எசமானியம்மா துணை புரியவே சிரமம் தெரியாமல் வேலைகளில் மூழ்கினார்கள். ஏறத்தாழ 16 வித இனிப்புகள் தயாராகிக் கொண்டிருந்தன. அதே மாதிரி 16 வித கார வகைகள். எதுவுமே கெடாத அளவுக்குரிய வகைகள்.

ஊர் மக்கள் அடிக்கடி வந்து உமாவை விசாரித்துச் சென்றனர். கிடைத்த புருஷனைப் பற்றிச் சொன்னார்கள். உலகில் எவருக்குமே கிடைக்காத பாக்கியம் என்றனர். உமாவுக்குமே கிடைக்காத பாக்கியம் என்றனர். உமாவுக்குப் பெருமை தாளவில்லை. கழுத்தை நீட்டுகிற போது பயப்படுகிற பெண், வாழ்க்கை நடத்துகிற போது'எவ்வளவு பெரிய உயர்ந்த கணவன்' என்று மற்றவர்களால் புகழப்படுகிற போதுதான் பயப்பட்டதன் இன்பத்தினை அடைகிறாள்; அனுபவிக்கிறாள்.

சரியாக மாலை ஆறு மணிக்கு எழுந்தான் சங்கர். அதற்குள் வீடே அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஊர் பெரிய மனிதர்கள், பெண்கள் கூடியிருந்தனர். எழுந்து வந்த சங்கருக்கு ஒன்றுமே புரியவில்லை. பிறகு அவன் தன்னை அலங்கரித்துக் கொள்ளத் தயாரானான்.

ஒரு லாரி வந்து நின்றது. அது நிறைய வரிசைப் பொருள்கள்.

காரிலிருந்து இறங்கினார் உலகநாத முதலியார்.

ஊர் மக்கள் வியக்க, சங்கர் விழிக்க மாப்பிள்ளைக்குத் தீபாவளி மரியாதை செய்தார் உலகநாத முதலியார். அந்த மரியாதையின் காரணமாக உமா பெரிதாக உயர்ந்து நிற்பதாக சங்கருக்குத் தெரிந்தது.அவளுக்குத் தானிழைத்து வரும் இராக்கொடுமை எத்தகையது என்பதையும் உணரச் செய்தது.

இரவு பல முக்கியஸ்தர்களுடன் சங்கர் விருந்துண்டு மகிழ்ந்தான்.

அன்றிரவு-

தனியறை-

உமா தரையில் மஞ்சமிட்டுப் படுத்தாள். சங்கருக்கு வேதனையாக இருந்தது. தன் வீட்டில் என்பது வேறு விஷயம். அவள் வீட்டிலேயே அவளுக்கு நரகம். ஆமாம். கணவனுடன் இன்பம் பகிராத ஒருத்திக்கு அதைவிட நரகம் என்ன இருக்க முடியும்?

முதலிரவு அன்று, அதே அறையில்தான் அவர்களுக்குள் தகராறு நடந்தது. அது இன்றளவும் நீடித்து வந்திருக்கிறது.

“உமா!” சாந்தமாக அழைத்தான் சங்கர்.

“என்னங்க!” – தேனாகக் கேட்டாள் உமா.

“இந்த அறையில்தானே நமக்குள் தகராறு எழுந்தது.”

“இதே அறையில் தகராறு தீரட்டும்னு சொல்றீங்களா?”

“நீ மனம் வைத்தால்!”

“யாரும் மனம் வைக்க வேண்டாம். ஏதோ கதைகளில் திருட்டுத்தனமாகச் சந்திக்கிறவங்க, மனம் வச்சா மார்க்கம் உண்டு”ன்னு பேசிக்கிற மாதிரி பேசறீங்களே! நான் உங்க மனைவி, நீங்க என் கணவர். ஒப்பந்தம். நான் உங்கள் கொள்கையில் தலையிடாதவ…நீங்க ஒப்பந்தத்தை மீறி என் கொள்கையிலே தலையிட்டீங்க! அதனாலே மாத்திக்க வேண்டியது நீங்கதான்!”

# 18

சங்கர் கட்டிலில் புரண்டு படுத்தான்.

“உமா! என் கொள்கைப்படியே உன்னை அடைய முடியும். பலாத்காரமாக உன்னை எதுவும் செய்ய முடியும். எனக்கு அது

சரின்னு படலை. ஏன்னா…நீ ஒரு சூப்பர் ஆர்ட்! அதைப் பாழாக்க நான் விரும்பவில்லை. நீ குளிக்கிறப்ப என் கொள்கைப்படி உன்னை அடைய முடியும். நீ முகம் கழுவித் துடைத்துக்கிட்டு வர்றியே அப்போ என்னால் எதையும் செய்ய முடியும். ஆனாலும் நான் அப்படியெல்லாம் விரும்ப வில்லை. பார்ப்போம்…நீயே ஒரு நாளைக்கு ஒத்து வருவே!"

"ஆமாம்; சூப்பர் ஆர்ட்னு சொன்னீங்களே… அதன் அர்த்தம்?"

"அது…அது-ஒரு கடந்த…"

"கடந்த…"

"சரியா தமிழிலே சொல்லத் தெரியலை."

"தெய்வீக ஓவியம்!"

"ஒ…அப்படி அர்த்தமா!"

"அதனாலே நீங்களே என்ன ஒரு சூப்பர் நேச்சர்னு ஒப்புக்கிட்டு உங்க கொள்கையை ஒரு நாளைக்கு மாத்திக்கிட்டே தீருவீங்க!"

"உமாஇ வல்லம்படுகைதான் நீ நாட்டியம் பயின்ற இடமா?"

"இல்லை. பாபநாசம்!"

"ஓ…மறந்துட்டேன். அங்கேயே போகலாம். நீ ஆடிக் காட்டேன். நாட்டியம் பிறந்த இடம் அல்லவா?

"என் பாபம் நாசமாகுமா?"

சங்கர் விழித்தான்.

அப்போது-

பயங்கரமான சிறுத்தையின் உறுமல் ஒலி கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு மாட்டின் "அம்மா!" என்ற அவல ஒலி பரிதாபமாகக் கேட்டது.

சங்கர் எழுந்து கொண்டான்.அவன்தான் வேட்டைக்கலை அறிந்தவனாயிற்றே! ஒலிகளைக் கொண்டே என்ன நிகழுகிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

"உமா! சமீபத்தில் சிறுத்தை வந்திருக்கு. ஏதோ ஒரு மாடு பலியாகி

இருக்கிறது. ஜனங்கத் தவிக்கிற கூச்சல்!" என்று கூறிக் கொண்டே மாடிப் படிகளை இரட்டை இரட்டையாகத் தாவி இறங்கினான்.இதற்குள் வெளியில் சென்று ஏதோ பேசிவிட்டு உள்ளே திரும்பிய உலகநாத முதலியார், மாப்பிள்ளையைக் கண்டதும், "நீங்க போய் தூங்குங்க மாப்பிள்ளை. ஒண்ணுமில்லே… சிறுத்தை ஒண்ணு ஒரு மாசமாக கிராமத்தைக் குழப்புது. எங்கேயிருந்தோ திரும்பி வருது…இரண்டு மூணு ஆடு மாடுகள் பலியாகுது…இன்னிக்கு வகையா கிராமத்துக்குள்ளேயே வந்துட்டது. தீர்த்துக் கட்டிடறேன்" என்று கூறிக் கொண்டே அலமாரியைத் திறந்தார். நீண்ட இரட்டைக் குழாய் வேட்டைத் துப்பாக்கியை எடுத்துக் குண்டுகளை நிரப்பினார்.

"வேட்டைக்கு நான் போகிறேன் மாமா" என்றான் சங்கர்.

உலகநாத முதலியார் வியப்புடன் நோக்கினார்.

அதற்குள் பின்னால் வந்து கொண்டிருந்த உமா, "அப்பா உங்க மருமகப்பிள்ளை வேட்டையில் சூரர். ஆனாலும் இப்போதைக்கு அனுமதிக்காதீங்க!" என்றாள்.

சங்கர் அண்ணாந்து கவனித்தான்.

"ஏன் உமா?"

"அதுக்காக வயசான காலத்திலே இவர் போறது உனக்குச் சரியா இருக்கா?"

"அப்பாவுக்கு இது பழக்கமான ஒன்று; உங்களுக்கு எப்போதாவது…"

"இல்லை நான் போய்த்தான் தீரவேண்டும் மாமா!தயவு செய்து துப்பாக்கியை இப்படிக் கொடுங்க."

சங்கர் துப்பாக்கியைப் பிடுங்கினான்.

மறுத்து முரண்பட உலகநாத முதலியாரால் முடியவில்லை. மருமகப் பிள்ளையிடம் அவருக்கு நிரம்ப பயமிருந்தது.

துப்பாக்கியைக் கையில் ஏந்தியதும் அதன் முனையைப் பற்றிக் கொண்டாள் உமா.

"விடு உமா?" – சங்கர் புறப்பட்டான்.

முதலியார் பயந்துவிட்டார், "உமா அது லோடட் துப்பாக்கி."

“உமா, என்னை கோழையாக்காதே! நீ போய் படு!” என்றான் சங்கர்.

முதலியாரும், சரி விடம்மா, நானும்தான் கூடப் போறேன். எதுவும் வந்துடாது” என்று கூறிக் கொண்டே இன்னொரு துப்பாக்கிக்கு ஏற்பாடு செய்ய வெளியே சென்றார் உலகநாத முதலியார் வீட்டுத் துப்பாக்கியைக் கேட்டு வாங்கி வரும்படி ஆளையனுப்ப அவர் சென்றார்.

“நீங்க போய்த்தான் ஆக வேண்டுமா?” உமா கண்டிப்பாகக் கேட்டாள்.

“போய்த்தான் தீர வேண்டும். இப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்ட பிறகு எந்த வேட்டைக்காரனாலும் தோள் துடிக்காம இருக்க முடியாது, உமா!”

“அப்படியானா ஒரு நிபந்தனை…!”

“என்ன?”

“உங்க கைக்குட்டையை இப்படிக் கொடுங்க…?”

“ஏன்?”

கொடுங்களேன் சொல்றேன்!”

உள்ளே சென்று பேண்டை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே வந்தான். பையிலிருந்த கைக்குட்டையை எடுத்துக் கொடுத்தான்.

கைக்குட்டையைப் பெற்ற உமா ஒரு கணம் கண்மூடித் தியானித்து அதன் முனையை முடித்துக் கொடுத்தாள்.

“இந்த முடியை அவிழ்க்காமல் அப்படியே கொண்டாந்து கொடுக்கணும்.”

உமா கூறியது வெறுப்பாகவும், வேதனையாகவும் இருந்தது சங்கருக்கு. என்ன மந்திரமா?” என்று கேட்டான்.

“ எதுவோ ஒண்ணு! அப்படியே கொண்டாந்து கொடுக்கப் பாருங்க! தயவு செய்து எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவிழ்க்காதீங்க!”

ஏதோ சொல்லுகிறாள் என்று நினைத்து அப்படியே பேண்ட் பையுள் நுழைத்தான். துப்பாக்கியை ஏந்திக் கொண்டு புறப்பட்டான். உமா தன் தெய்வம் சிவபிரானை வேண்டிப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

வல்லம்படுகைக்குத் தள்ளியிருந்த அந்தப் பயங்கரத் தோப்பினுள் சிறுத்தை மறைந்து கொண்டிருந்தது.ஏறத்தாழ இருபது பேர்கள் கையில் துப்பாக்கிகள். ஏனையவர் தடியும் தாம்புமாகச் சென்றிருந்தனர்.

ஒரு துப்பாக்கிக்கு நான்கு துணைவர்கள் வீதம் நான்கு திசையாகப் பிரிந்து சென்று மறைந்தனர் நடுவே இரண்டு ஆடுகளைக் கட்டிவிட்டனர். ஆடுகள் தங்கள் அற்ப ஆயுளைத் தெரிந்தோ என்னமோ பரிதாபமாகக்கத்தின.

நல்ல இருள் கவ்வியிருந்தது. அன்று அமாவாசை வேறு. வானில் கருமேகம் பந்தலிட்டு நட்சத்திரங்கள் மறைந்திருந்தன. இருளைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?நல்லவேளையாக மழையில்லாமல் இருந்ததே பெரிய காரியம்.

இரண்டொரு லாந்தர் விளக்குகள். தழைகளைப் போட்டு மறைத்திருந்தனர்.

கிழக்குத் திசைப் பக்கமாக சங்கர் ஒரு புதர் மறைவில் துப்பாக்கியுடன் நின்று கவனித்துக் கொண்டிருந்தான். அப்படியும் மறைவு போதாதென்று மேலே பக்கத்தில் ஓங்கிப் படர்ந்து வளர்ந்திருந்த அரசமரக்கிளையொன்றைப் பிடித்து இழுத்து உடைத்தான். அது அப்படி ஒரு கூராகவும், இப்படி ஒருகூராகவும் ஒடிந்தது. ஒடித்த கிளையை மேலும் மறைவாக்கி ஒளிந்து நின்று கொண்டிருந்தான். வலக்காலை அருகில் பாறை போலிருந்த ஒன்றின் மீது வைத்துச் சுற்றும் முற்றும் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மெல்ல மெல்லச் சிறுத்தையின் உறுமல் கேட்டது. அது எந்தத் திசைப் பக்கத்திலிருந்து கேட்கிறது என்பதை அனைவரும் காதுகளைக் கூர் தீட்டிக் கவனிக்க முனைந்தனர். அடிக்கொரு தடைவ ஆடுகளின் அவலக் குரல்கள்!

அடுத்து வெகு நேரம் வரை உறுமல் சத்தம் கேட்கவில்லை. அவ்வப்போது எங்கோ புதர்கள் அசைவது போல… சல பல சமயங்களில் சருகுகளின் சலசலப்பு.சிறுத்தை நகர்கிறது.எங்கு…

இருட்டில் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.பொதுவாக அப்படி வேட்டைக்கு-கருமுகில் சூழ்ந்த இரவு நேரத்தில் புறப்படுவது உசிதமாகாது. ஆனாலும் வேறு வழியில்லை.

சங்கர் கணத்துக்கு கணம் கண்களை இருளில் பழக்கித்திசை தோறும் கவனித்துக் கொள்ளத் தவறவில்லை.

திடுமென்று உறுமல் குரல்...

அங்குமிங்கும் பார்வைகள்.

குரல் மேலிருந்து கேட்கிறது-

சங்கர் அண்ணாந்து கவனிக்கிறான்...

அரச மரத்தின் கிளையில் சிறுத்தை நின்று வாய்திறந்து சங்கரைக் குறிபார்க்கத் தொடங்கிவிட்டது.அவன் நின்ற திசைப் பக்கமாகவா சிறுத்தையும் நடமாடியிருக்க வேண்டும்!உலகநாத முதலியார் அரண்டு போய்விட்டார். சத்தமெழுப்பவும் கூடாது. ஆனாலும் துப்பாக்கியைக் கெட்டியாகப் பற்றியவண்ணம் நகரஆரம்பித்தார்.

சங்கர் துப்பாக்கியை உயர்த்திக் குறிபார்த்துச் சுடுவதற்குள் பூதாகாரமான உறுமலுடன் மரத்திலிருந்து சிறுத்தை அப்படியே பாய்ந்தது

“உமா!” என்று சத்தமெழப்பினானே யொழிய ஸ்டிகரைஅழுத்த நேரமில்லாமல் போய்விட்டது.

அடுத்து நடந்தது-

மறைவுக்காக ஒடித்த கிளையின் செங்குத்தான கூரில் சிறுத்தை பாய்ந்த வேகத்தில் செருகிக் கொண்டு கால்களை உதறிப் பயங்கரமாக அலிறியது. கூட்டம் கூடிவிட்டது. இப்படி எதிர்பாராத விதமாகக் கால் இடறிச் சிறுத்தைப் பலியாகும் என்று யார்தாம் எதிர்பார்த்திருக்கமுடியும்? ரத்தம் சொட்டுச் சொட்டென்று கொட்டிக்கொண்டிருந்தது. உறுமலின் பயங்கரச் சத்தம் கொள்ளிட நதிக்கரைக்கு அப்பாலும் கேட்டிருக்க வேண்டும்.

என்னே வியப்பு! யாருக்கும் வேலையில்லாமல், சிறுத்தை அதன் முடிவை அதுவே தேடிக் கொண்டதே! வேறொன்றுமில்லை. சிறுத்தை பாய்கிற போது கால்வழுக்கிக் குறி தவறி இருக்க வேண்டும். ஒடிந்தகிளையில் அதன் பாய்ச்சல் வேகம் உராய – கிளையின் கூர் அதன் வயிற்றில் பொத்தில் கொண்டது.

சிறுத்தையின் மரணத் துடிப்பைப் பொறுக்க மாட்டாத உலகநாத முதலியார் “டுமீல் டுமீல்” என்று இருமுறை சுட்டார்.சிறுத்தைக் குரல் ஓய்ந்தது.

லாந்தர் விளக்குகளைக் கொண்டு வந்தனர்.

சங்கர் பாறையின் மீதிருந்து காலை எடுத்தான்.அப்போது ஒருவன் சொன்னான்: “என்னங்க சாமி! சிவலிங்கத்து மேலே காலை வச்சிக்கிட்டு இருந்து இருக்கீங்க!”

“என்ன சிவலிங்கமா?”

ஆமாம்; ஒரு பாழடைந்த சிவலிங்கத்தின் மீதுதான் காலை வைத்துக் கொண்டிருந்தான்.

பேண்ட் பையிலிருந்து கைக்குட்டை முனையின் முடி தொங்கிக் காற்றில் அசைந்து கொண்டிருந்தது.

சங்கருக்கு உமாவின் நினைவும் அவள் கொடுத்தனுப்பிய கைக்குட்டை நினைவும் அப்போதுதான் வந்தன.

அவன் மனம் முனங்கிக் கொண்டது.

“உமா! ரியலி சூப்பர்நேச்சர் கேர்ல்!”

## 19

கொள்ளிட நதியின் பசுமையான சூழலை மறுநாள் மாலைப் பொழுதில் ரசித்தனர் சங்கரும் உமாவும். அந்த ‘இனிய சூழல்’ சங்கருக்கு வெகுவாகப் பிடித்தது.

இருவரும் காரை ஒருபுறமாக நிறத்திவிட்டுக் காலாரநதிக்கரை ஓரமாக நடந்தனர்.

உமா கேட்டாள்;: “ஆமாம்: நீங்க எம்.எஸ்.சி. முடித்ததும் எதுபற்றி ஆராய்ச்சி பண்ணி டாக்டரேட் பட்டம் வாங்கினீங்க? ரொம்பா நாளா கேக்கணும்னு நினைச்சிட்டிருந்தேன்.”

“நல்ல வேளையா கொள்ளிட நதிக்கரையில் அந்த ஞாபகம் வந்ததே” என்று கூறி நகைத்தான் சங்கர். பிறகு சொன்னான்:

“மனித உடலின் மின்னாற்றல் சக்திபற்றி..”

“ஓகோ…”

“ஏன் கேட்டே உமா.”

“தெரிஞ்சுக்கக் கூடாதா? யாராவது கேட்டால் நான் விழிப்பது கேவலமில்லையா? ராத்திரி அப்பா கேட்டார். விழித்தேன். இதுவே

வேறு யாரவது இருந்து விட்டால்…?”

“சொல்ல லேண்டியதுதானே, விஞ்ஞானமா? மெஞ்ஞானமா என்பது பற்றி ஆராய்ச்சி செய்தார்னு.”

“உங்களுக்கு ஏன் தெய்வீகமான காரியங்கள் மூடநம்பிக்கையாக தெரியுது?”

“நீ என்ன பத்திரிகை நிருபரா? இது என்ன கேள்வி?”

“இதையும் யாராவது கேக்கலாமில்லையா?”

“கேப்பாங்க, கேப்பாங்க!”

“சொல்லுங்களேன்!”

“அத்வைதம் பற்றித் தெரியுமா?”

“தெரியும்.”

“பின்னே ஏன் கேக்கறே. மனித உடலிலேயே எல்லா சக்திகளும் உண்டு. அது தெரியாதவர்களுக்குப் பிற உலகநம்பிக்கை தேவை. அதையே நான் மூடநம்பிக்கைன்னு சொல்றேன்.”

“உங்ளுக்கு த்வைதம், அத்வைதம் கூடத் அதரியுமா?”

“சாக்ரட்டீஸ் முதல் சங்கரர் வரை தெரியும். இங்கர்சால் முதல் பெரியார் வரை தெரியும்.”

“அத்வைதத்தில் நம்பிக்கையுண்டா?”

“உமா! நான்தான் சொல்லிட்டேனே! நான் நாத்திகன் அல்ல, அழுத்தமாக உன் நெஞ்சில் எழுதிக்கொள்.என்னை நான் உணர்ந்தவன். எனக்கு உன் மாதிரி அடுத்ததை நம்புகிற பலவீனம் கிடையாது…நீகுங்குமமே அணியாவிட்டாலும் என் உயிர் போகாது போதுமா?”

“போதும்… மாலை வேளையில் பேச வேண்டாம். வானில் தேவதைகள் உலவும்னு சொல்லுவாங்க! நீங்க ஏதோ கெட்டதைச் சொல்லப் போக,“ததாஸ்து”னு வாழ்த்திட்டுப் போயிடப் போவுது!”

சங்கர் கலகலவென்று சிரித்தான்.

கொள்ளிட நதிக்கரையில் ஒற்றைக்கால் தவம் புரிந்த கொக்குகள்

சிரிப்பொலி கேட்டுச் சடசடவென்று பறந்தன்.

“சில விஞ்ஞானிகளுக்குத் தெய்வ வரப்பிரசாதமே அறிவை மேலோங்கச் செய்திருக்கிறது. கணித மேதை ராமானுஜம், நாமகிரி தேவியின் உபாசகர்.”

“நான் மறுக்கலை. நியூட்டனும் மாகஸ்வெல்லும் கூட இப்படியானவர்கள்தாம். நான் மனித உடலை ஆராய்ச்சி செய்கிறவன். என்னுள் ஓர் உலகம் இருப்பதை உணர்கிறேன்.”

“ஐன்ஸ்டின்…”

“போதும்! வேறு பேச்சு பேசுவோம்.”

“பேச என்ன இருக்கு? வேண்டுமானா இந்த நதிக்கரையில் நீ ஆடு. நான் அந்த நடராஜரை வேணும்னா உன் மூலம் தரிசிக்கிறேன்.”

“நான் உங்களை முதலில் தரிசிக்கணும். பிறகுதான் நீங்க நடராஜரைத் தரிசிக்க முடியும்?”

“உனக்குப் பகவத்கீதை தெரியும்லே?”

“மனனம்!”

“நீ எப்படி நினைக்கிறாயோ, அப்படி நான் தரிசனம் தருவேன்னு பரமாத்மா சொல்லியிருக்கிறாரு! நீ உன் ஜீவாத்மாவை நான் எப்படி வேண்டுகிறேனோ அப்படி தரிசனம் கொடுக்க ஏன் தயார்பண்ணிக்கக் கூடாது.”

“நான் தயார் பண்ணிக்க விரும்பலை, உங்களைத்தயார் பண்ண ஆசைப்படுகிறேன்.”

“அது முடியாது, உமா! ஒரு நாளைக்கு நீ என் கருத்தை ஏற்பாய். அந்தத் தெளிவு என்னிடமிருக்கிறது.உன்னை நீ சரிபாதியாக்கிக் கொள்வாய். அந்த முடிவும் உன்னிடமிருக்கிறது. ஒரு பாதி தெய்வத்துக்கும் மறுபாதி எனக்கும் நீ வழங்கியே தீருவாய்! நான் வெற்றி கண்டே தீருவேன்.”

“அப்போது நான் ஆடியே தீருவேன். நீங்கள் ரசித்தே தீருவீர்கள்.”

மழைத்துளி இலேசாக விழுந்தது.

இருவரும் திரும்பினர்.

மூன்றாம் நாள்-

உலகநாத முதலியாரிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பினர். ஊர் மக்களே திரண்டு வந்து விடை கொடுத்தனர். தீபாவளிச் சீர்க்கான சாமான்கள் லாரியில் 'புக்' செய்து அனுப்பி விடுவதாகச் சொன்னார் முதலியார்.

இம்பாலா கார் இருவரையும் சுமந்து கொண்டு புறப்பட்டது.

"உமா! இந்தத் தடவையும் நீ சிதம்பரம் கோபுரத்தை தரிசிக்க வேண்டுமா?" என்றான் சங்கர்.

"ஆமாம்; நான் சொல்லணும்னு நினைச்சேன்."

"நீ சொல்லவே தேவையில்லை. இந்தத் தடைவ நீ கோயிலுக்குப் போயே தரிசித்திட்டு வரலாம். உன் கொள்கையில் நான் குறுக்கே நிற்கமாட்டேன். அப்பவாவது நீ என்னை புரிஞ்சிக்கிட்டா சரி!"

உமா பெரிதாக மகிழ்ந்து போனாள்.

கார் சிதம்பரக் கிழக்குவாசல் கோபுரத் தண்டையில் நின்றது.

"உமா! நீ போய் வரலாம்" என்றான் சங்கர்.

"நீங்களும் வாருங்களேன். உங்கள் ரசனைக்குரிய கலைச்சிலை- தங்க வடிவம் கொண்டு எப்படி இருக்கு துன்னு பார்க்கலாம் இல்லியா? நான் சிலைனுதான் சொன்னேன். பார்க்கலாம் இல்லியா? தெய்வம்னு சொல்லலை. இதுதான் மூலச்சிலை. பார்க்கக் கொடுத்து வைக்கணும்."

சங்கருக்கும் இந்த எண்ணம் சென்ற ஆருத்திராதரிசனத்தின் போது ஏற்பட்டதுதான். ஏதோ நினைவு உந்தலின் காரணமாகவும் - மனைவி இதன் மூலம் தன்னைப் புரிந்து உடன்படுவாள் என்கிற நினைப்பின் காரணமாகவும் இறங்கினான்.

இருவருமே கோயிலுள்ளே பிரவேசித்தனர்.

பிரபல விஞ்ஞானி சங்கர் என்று இனம் கண்டு கொண்ட ஒரு சிலர் காதோடு காதாப் பேசத் தொடங்கினர். கோவிலில்செய்தி பரவிவிட்டது. வாய்த்த மனைவி விஞ்ஞானியைக் கோயிலுக்கே அழைத்து வந்து விட்டாள் என்றும் விமர்சித்தனர்.

இதற்குள் கோயில் அதிகாரிகளுக்குச் செய்தி எட்டவே, ஓடோடி வந்து தீட்சிதர்கள் சகிதமாகப் பரிவட்டம் கட்டி அழைக்கத் தொடங்கினர்.

சங்கரால் மறுக்க முடியவில்லை. உள்ளே நுழைந்ததும் குற்றமாகிப் போய்விட்டது.

தீப ஆராதனைகள் அமர்க்களமாக நடந்தன.உமாகண்ணீர் சொரிந்து தன் தேவனைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தாள். தீட்சிதர் கொண்டு வந்த தூப ஆராதனைத்தட்டில் பணம் போட வேண்டு. கணவனுடைய ‘பர்சை’ கேட்டு வாங்கி அதிலிருந்து நூறு ரூபாய் நோட்டை எடுத்துப் போட்டுப் பிரசாதமெடுத்து இட்டுக் கொண்டாள்.

“நூறு ரூபாய் போடணுமா!” மெல்லக் கேட்டான் சங்கர்.

“நீங்க நூறு வயசு வாழணும்னு பிரார்த்தனை செய்துகிட்டேன்!”

சங்கர் தன்னுள் சிரித்துக் கொண்டாலும், சிறுத்தை வேட்டைக்குப் போனபோது போட்ட கைக்குட்டை முடி நினைவுக்கு வரத்தான் செய்தது.

அப்போது-

சற்றும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்து விட்டது.

மிக மிகத் தொண்டு கிழவர் அருகே வந்தார். பஞ்சகச்ச வேட்டியும்பூணூலும் விபூதி அலங்காரமும் அவரைப் பிராமணர் என்பதைப் பறைசாற்றின.

“சங்கர்! உன்னை வாழ்த்தறேம்பா! எனக்கு நூறு வயசு நெருங்குது. தமிழ்நாட்டிலே ஒரு விஞ்ஞானிதோன்றலையேன்னு வருத்தப்பட்டதுண்டு. உன் பேரைப்பத்திரிகையிலே பார்த்துப் பூரித்துப் போனேன். எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?” என்று சொல்லிக் கொண்டே வர, சங்கர்தன்னை மறந்து பெரியவர்க்குக்கை கூப்பி நின்றான்.

அப்போது-

அந்த வயதான பிராமணர் கையிலிருந்த விபூதியை எடுத்து சங்கர் நெற்றியில் கொஞசம் எதிர்பாராதவகையில் இட்டுவிட்டு, “நோய் நொடியில்லாமல் இருக்கணும். தீர்க்காயுசு மான்பவ!” என்றார்.

தேள் கொட்டியது போலாய் விட்டது சங்கருக்கு. அவனால் நெற்றியைத் துடைத்துக் கொள்ள முடியவில்லை.உமா ஏதோ மின்னல் பளிச்சிட்ட உதயம் போன்ற உணர்வு பெற்று மலைத்து நின்றாள்.

சங்கரின் கண்கள் மூலத்தானத்தில் - திருநிலை யறையில் தங்கப் பிரகாசமுடன் திருநடம்புரியும் தில்லையம்பல வாணனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன.

# 20

தினப் பத்திரிக்கைகளின் செய்திகொட்டை எழுத்துக்களில்பிரசுரமாகிவிட்டது. “பிரபல விஞ்ஞானி டாக்டர் சங்கர் சிதம்பரம் கோயிலுக்குத் தம் மனைவியுடன் சென்று வழிபட்டார்!”

மறுக்க வேண்டும் என்றுதான் தோன்றியது சங்கருக்கு. என்ன மறுத்து என்ன பயன்? நல்ல வேளையாக நெற்றியில் விபூதி வைத்துக் கொண்ட செய்தி வெளியாகாமல் போயிற்றே!

சந்திரசேகரனும் ராஜாமணியம்மாளும் இரண்டு மூன்று தடைவ செய்தியைப் படித்தனர். உமாவின் இலட்சியத்துக்கு இது முதல் வெற்றியாகவே தெரிந்தது.

லாரியில் சீர்ச் சாமானகள் வந்துஇறங்கின. மாளிகையில் இடம் இருக்கிறதா என்கிற பிரச்சினையே எழுந்து விட்டது. ஒரு பிரபலமான மருமகப் பிள்ளைக்குச் செய்யவேண்டியதைச் செய்திருந்தான்.

சங்கர் வெளியில் சென்றிருந்தர்.

பத்திரிகை செய்தி அவனுக்குத் தலை வேதனையாக இருந்தது.

வீடு திரும்புகிற போது மாலை இருட்டி விட்டது. உமா புன்முறுவலுடன் வரவேற்று ஆவன புரிந்தாள். தயாராக இருந்து சிற்றுண்டி படைத்தாள்.

“பத்திரிகை பார்த்தீர்களா?” என்று கேட்க வாய்திறந்தாள். பார்க்காமலிக்க முடியாது. இப்படிக் கேட்பது கேலி செய்வதற்கு ஒப்பாகி விடுமோ என்று பயந்து வாயை மூடிக் கொண்டாள்.

இருவரும் மாடியடைந்தனர்.

சங்கர் வானொலியை முடுக்கினான்.

அப்போது பிராந்திய செய்திகளை அறிவித்துக் கொண்டிருந்தனர். செய்திகளில் சித்ராவின் பெயர்அடிபடவே இருவருமே செவிகளைக் கூர்தீட்டிக் கவனித்தனர்.

“பிரபல நாட்டியக் கலாவல்லி சித்ரா அவர்கள் தமது நாட்டிய விருந்தளிக்க மலேஷியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அப்படியே ஏனைய நாடுகளையும் சுற்றிக் கலைப் பயணத்தை முடித்துக் கொண்டு தம் குழுவுடன் அடுத்த மாதஇறுதியில்திரும்பலாம். அடுத்து ரஷ்யாவுக்குச் செல்லப் போவதாக நிருபர்களிடம் அவர் குறிப்பிட்டார்?”

யார் முகத்தையும் யாரும் பார்க்கவில்லை. இருவருமே வானொலி முகத்தைக் கூர்ந்து கவனித்துச் சிந்தனையில் ஆழ்ந்தனர்.

அடைமழைக்குரிய ஐப்பசி மறைந்து கார்த்திகை பிறந்தது.

டாக்டர் சங்கர் தன்னுடைய ஆராய்ச்சியில் தீவிரமாக முனைந்திருந்தான். மூளையுள்ள மனித யந்திரத்தைப் படைப்பதில் ஆழ்ந்திருந்தான். இன்னும் சில மாதங்களுக்குள் ஆராய்ச்சியை முடித்தாக வேண்டும்.

இந்த நிலையில்தான்-

ஏதோ ஒன்றுக்குச் சோதனை செய்யப் போக இன்னொன்றுக்கான முடிவு கிடைக்க, அதனை மருத்துவத் துறைக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்கிற தீவிர ஆலோசனை பிறந்தது. எலக்ட்ரானிக்கின் கர்த்தாவான விஞ்ஞான மேதை ரூதர் போர்டுவின்நிலையும் நிகழ்ச்சியும் நினைவுக்கு வந்தன. ரூதர்போர்டு மின்னாற்றலான எல்கட்ரானிக்கைக் கண்டுபிடிக்கப் போய், ரேடியோ ஆக்டிவிட்டி (வானொலிகதிரியக்கம்)யைக் கண்டுபிடித்தது போல, சங்கர் ஒரு புதிய கண்டுபிடிப்புக்கு ஆளானான்.

அதாவது புற்றுநோய் மனித உடலில் எப்பகுதியில் இருக்கிறது என்பதை மிக இலேசான முறையில் கண்டுபிடிக்கத் தக்க யந்திரமே அது. ஒரு 18 அங்குல விட்ட அளவுள்ள வட்டமனைக்கு சுழற்சி யந்திரம் பொருத்திவிட்டு மனிதன் அதன் மேல் நின்றால் மிக மிக மெதுவாகச் சுழலும். ஒரடி இடைவெளிவிட்டு அவன் அளவுக்கு நீண்டஇரண்டடி அகலம் உள்ள எலக்ட்ரானிக் கண்ணாடி.உள்ளே வெளிச்சம்.மனிதன் நிர்வாணமாக நிற்க வேண்டும். அடுத்த அறையில் அலைக் கதிரியக்க நீளமான உயர்ந்த பெட்டியில் மனித உடற்கூறு சித்திரப்பகுதியில் மின்மினி போல எரிந்து எரிந்து அடங்கும் சமிக்ஞையின் மூலம் கண்டுபிடித்து உடனடி சிகிச்சைக்கு ஏற்பாடு பண்ணலாம். புற்றுநோய் அற்றவர்களுக்கு மின்மினிச்சமிக்ஞை ஏற்படாது.ஓர் அரிய கண்டுபிடிப்புதான்! இந்த முறைக்கு என்ன பெயரிடலாம்... “சங்க்ரே”..!

“உமா” என்று குரல் விடுத்தான் டாக்டர் சங்கர். தன்னுடைய இந்த அரிய கண்டுபிடிப்பைப் பற்றிமனைவியிடம் கூறி மகிழ ஆசைப்பட்டான்.

உமாவைக் காணோம் அவனுக்கே புரிந்தது.மேல்மாட விஞ்ஞானக் கூடத்திலிருந்து சத்தமிட்டால் எப்படிக் கேட்கும்? கடிகாரத்தை நோக்கினான். மணிபதினொன்றரை. இந்நேரம் படுத்துக் கொண்டிருப்பாள்.

நேரே படுக்கையறை நாடி வந்தான். அங்கே உமாவைக்காணவில்லை. இந்நோரமாகியும் உமா படுக்கைக்கு வர வில்லையே! என்ன காரணம்? கீழே படுத்துக் கொண்டாளா?

வராந்தாவைக் அவளுடைய தவத்துக்காகத் தனியாக ஒழித்து விடப்பட்டிருந்த பூசையறையில் நடராச பெருமான் சிலையருகில் சப்பனமிட்டுக் கண்மூடித் தவத்தில் ஆழந்து கிடந்தாள்.இன்றைக்கு என்ன இந்நேரத்தில் பூஜை?

நினைவு வந்தது. மாதமொரு முறை வரும் சிவராத்திரியில் மட்டும் இரவு பன்னிரண்டு மணி வரை விரதமிருந்து பூஜை செய்து பின்னர் பாலருந்தி விட்டுப்படுப்பாள்.

உமாவிடம் உடனடியாகச் சொல்ல வேண்டும் என்கிற துடிப்பில் இங்குமங்குமாக உலவினான் சங்கர்.

வராந்தாவில் ஏதோ ஆள் நடமாட்டச் சத்தம் கேட்டுராஜாமணியம்மாள் மெல்ல வெளியே எழுந்து வந்து எட்டிப் பார்த்தாள். மகன் சங்கர் ஏனிப்படி உலவவேண்டும்? உமா பூசையறையில் இருக்கிறாளோ? அது இவனுக்குப் பொறுக்கவில்லையோ…?

சங்கர் பூஜையறையுள்ளே உமா செய்யும் தவக்கோலம் என்னவென்றுதான் பார்ப்போமே என்று எண்ணிநுழைந்தான்.அங்கே-

நடராஜர் சிலையின் கழுத்தில் ஒரு நாகப்பாம்பு படம் விரித்தாடிக் கொண்டிருந்ததைக் கவனித்து விட்டான். ஆமாம்; உமாஅன்று சொன்ன மனைப்பாம்பு!

“ஐயோ! என் உமாவைத் தீண்டிவிடப் போகிறது” என்ற அதிர்ச்சியால் ஓடினான்.

சங்கர் அப்படி ஓடுவதைக் கண்ட ராஜாமணியம்மாள்

விடுவிடுவென்று படிகளில் ஏறிவர-

சங்கர் துப்பாக்கியுடன் அங்கு வந்து குறிபார்க்க-

ஏதோ மனைவியின் மீது இருக்கிற கோபமும், பக்தி நிலையும் மகனைப் பித்தனாக்கி விட்டன என்று ராஜாமணியம்மாள் நினைக்க-

சங்கர் சுடநினைக்கிற போது குறுக்கே ஓடி வந்துதள்ளி இரு கைகளாலும் அறைய-

துப்பாக்கி வெடிச் சத்தம் எழ-

குண்டு பக்கத்திலிருந்தஉமாவின் பெரிய புகைப்படத்தின் மீது பாய்ந்து சுக்கலாக உடைய-

மனைப்பாம்பு நழுவியோடி மறைய-

உமா அதிர்ச்சியால் கண் விழிக்க-

தாயால் அடிப்பட்ட சங்கர் காலைத் தவறிப் படிக்கட்டுகளில் வைக்க-

அது இடற-

குப்புற விழுந்து கடகடவென்று உருள-

ராஜாமணியம்மாள் “சங்கர்!” என்று அலறினாள் இந்தக் களேபரத்தில் தவம் கலைந்து ஓடி வந்து கவனித்த உமா! “தெய்வமே! இது என்ன தண்டனை!” என்று அவலமாகக் கதிறினாள்.

உமா ஓடிச்சென்று கணவனைத் தாங்கித் தூக்கினாள். சங்கர் மயக்க நிலையடைந்திருந்தான். புதிய கண்டு பிடிப்புக்கான மகிழ்ச்சி நிலையும், பாம்பைக் கண்டஅதிர்ச்சி நிலையும், அன்னை அடித்த புரியாத நிலையும்,உருண்டு விழுந்து அடிபட்ட தன்னிலையும் சேர்ந்து அவனை உணர்விழக்கச் செய்துவிட்டன.

“மாமி! என்ன நடந்தது?” என்று கேவினாள் உமா. இதற்குள் சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ். குறட்டையொலி உறக்கத்திலிருந்து விழித்து எழுந்தோடி வந்தார்.

ராஜாமணியம்மாள் விம்மும் நெஞ்சுடன் கண்டதை விளக்கினாள். பாம்புச் செய்தி உமா அறியாத ஒன்றுடாக்டருக்குனு ‘போன்’ செய்ய முனைந்தார் சந்திரசேகரன். ஆனால் உமா, “டாக்டர் வந்து கவனிக்கிற வரை காலதாமதம் செய்யக்கூடாது. காரை எடுங்க மாமா, பெரிய ஆஸ்பத்திரிக்குப் புறப்படணும்” என்று ஆவேசம் வந்தவள்

போலக் கூறினாள்.

# 21

உலகம் முழுவதுமே ஒரே பரபரப்பு கண்டு விட்டது. செய்திப் பத்திரிக்கை கொட்டைத் தலைப்பில் செய்தியை வெளியிட்டன.

‘பிரபல விஞ்ஞானி டாக்டர் சங்கருக்கு அதிர்ச்சியின் விளைவாக மூளையின் ஒரு பகுதி கெடுதல் கண்டிருக்கிறது.ஆபரேஷன் மூலம் குண்ப்படுத்த முடியுமா என்பது சந்தேகம்தான். ஆனால் நிபுணர்கள் பரிசோதனை செய்து வருகின்றனர்.

உமா பெருக்கிய கண்ணீருக்கு எல்லையேது? பெற்ற உள்ளங்கள் பரிதவித்து துடித்தன. பெறற்கரிய பிள்ளையை இழந்து விடுவோமா?

உமாவுக்கு அந்தச் சந்தேகம் ஏற்படவில்லை.

தெய்வம் காக்கும்; தன்னுடைய மஞ்சள் குங்குமத்துக்குப் பங்கம் ஏற்டாது என்று திடமாக நம்பினாள்.

எப்படியோ ஜாதகப்படி அவருக்கு அற்பாயுள்! அதுமுடிந்து வட்டது!- இதுவே பெற்றவர்களின் தீர்ந்தமுடிவு.

மூன்று தினங்கள் கழித்து உணர்வு வந்தது, டாக்டர், சங்கருக்கு!

யாரையும் டாக்டர்கள் அனுமதிக்கவில்லை. அன்றுமாலை பெற்றவர்களை மட்டும் அனுமதித்தனர். உடன்உமாவும் சென்றாள். அனைவரையும் கண்ட சங்கர் அனையப் போகிற விளக்கொளியில் ஏற்படுகிற பிரகாசம் போன்று முகம் மலர்ந்து புன்னகை புரிந்தான். எந்த நேரத்திலும் மீண்டும் சுய உணர்வு இழக்கலாம். சற்றே அதிர்ச்சி கண்டாலும் உணர்விழக்க வழிஏற்படும்.

மனைவியைக் கூர்ந்து கவனித்தான்.உமா புன்சிரிப்பை வரவழைத்து கண்ணீர் விட்டாள். அதற்குள் டாக்டர்கள் வந்து அவர்களை வெளியே அனுப்பி வைத்தனர்.

மூளையைப் பற்றி ஆராய்ச்சி செய்த மூளை நிபுணனுக்கு மூளைக்கோளாறு என்கிற செய்திதான் பலருக்கு வியப்பை உண்டு பண்ணியது. தெய்வத்தின்பால் நம்பிக்கை மட்டும் கொண்ட சனாதனிகள் தெய்வத்தோடு விளையாடலாமா?’ என்றும் அங்கலாய்த்துக் கொண்டனர்.

அறுவை சிகிச்சை பற்றிய ஆராய்ச்சிகள் பலமாக நடந்தன. மேலை நாட்டிலிருந்து டாக்டர்களை அழைக்கலாமா என்றும் கேட்டிருந்தனர்.அது தேவையில்லை. இந்திய டாக்டர்கள் சோடைகள் அல்லர் என்பதை நிரூபிக்கப் பலர் முயன்றனர். பம்பாயிலிலுந்தும் சிலர் வந்திருந்தனர். எப்படிப் பார்த்தாலும் மூளையின் ஒரு பகுதியை சரிபடுத்தி ஒப்பேற்றுவது என்பது சிரமமான காரியமானாலும் டாக்டர்கள் தெய்வத்தை நம்பிப் பிரார்த்தனை செய்து கொண்டனர். இந்தியா ஓர் மேதையை இழக்கக் கூடாது என்று பலரும் வேண்டிக்கொண்டனர்.

பதினைந்து தின ஆராய்ச்சி, எக்ஸ்ரே-க்குப் பிறகு ஆபரேஷன் செய்வதாக முடிவு எடுத்தனர். இதற்கிடையில் ஏற்பட்ட சுயநினைவின்போது தான் கண்டுபிடித்திருக்கும் ‘சங்க்ரே’ பற்றி வேறு மெல்ல விமர்சித்து விட்டான். உலகப் பத்திரிகைகள் அதைப்பற்றி வேறு பிரமாதமாகச் செய்திகளை வெளிப்படுத்தி விட்டன். இந்தியச் சிறப்புக்கு வேறு என்ன வேண்டும்?

அன்று வெள்ளிக்கிழமை, அறுவைசெய்கிறநாள். அனைவருமே பக்கத்திலிருந்தனர். மதில்மேல் பூனை என்பதுபோன்ற அறுவை சிகிச்சை. அனைவருமே சங்கரைக்கண்ணாரக் கண்டனர். சங்கரால் கொஞ்சம் பேசமுடிந்தது. தாய் தந்தையரிடம் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுப் பிறகு உமாவிடம் தனித்துப் பேச விழைந்தான். அனைவரும் வெளியே சென்றனர். உலகநாத முதலியாரும் வெளியே வந்தார்.

மனைவியைக் கூர்ந்து கவனித்தான். அவனுடைய கண்களே கலங்கிவிட்டன. “உமா...! இப்படி வந்து உட்காரு!” உமா அருகில் சென்று அமர்ந்தாள்.

“ஒரு விஷயம் தெரியுமா உமா! இந்த மூளை நோய் மாடிப்படியிலிருந்து விழுந்ததாலே மட்டும் ஏற்படலை. இது ஒரு காரணமாகி விட்டது. இரண்டு மாத காலமாகவே கலையாலும், எதிர்ப்பாலும், ஏமாற்றத்தாலும் ஏற்பட்டு வந்தது இதுக்கெல்லாம் காரணம் யார் தெரியுமா? நீதான்?”

மெல்லிய குரலில் நிறுத்தி நிறுத்திக் கூறினான் சங்கர். உமா நானில்லை என்பது போல வேதனையுடன் தலையசைத்தாள்.

“நீதான் உமா! டாக்டர்களிடம் இந்தச் செய்தியை அம்மா, அப்பாகிட்டே சொல்ல வேணாம்னு சொல் லிட்டேன். நான் செத்துட்ட பிறகு அவங்க உன்னைகுறை சொல்லக்கூடாது பாரு!”

“நீங்க சாக மாட்டீங்க! என் தெய்வம் என்னைக் கைவிடாது.”

“உன் வார்த்தையிலே எனக்கு நம்பிக்கையிருக்கு. ஆனாலும் என் நோயிலும் எனக்கு நம்பிக்கையிருக்கு. டாக்டர்கள் திறமைசாலிகள். ஆனாலும் விதி…”

சங்கர் மேற்கொண்டு பேசவில்லை.

“விதியை நம்புகிறீர்களா?”

“…”

“அப்படியெனறால் அந்த விதியை நீங்கள் வென்று விடலாம். விதியை வெல்பவர்தான் வஞ்ஞானிகள்!”

“நீ இப்ப என் பக்கம் திரும்புகிறது மாதிரி…”

என் குங்குமம் அழிபடுமானால்…”

“குங்குமம் என்பதே தேவையற்றதுஎன்று பிரசாரம் செய்வாயா?”

இப்ப ஏன் அந்தப் பேச்சு? பேசாம ரெஸ்ட் எடுங்க!”

சங்கருக்கு மயக்கம் ஏற்பட்டது.

“உமா! நான் பிழைப்பது என்பது மதில்மேல் பூனைதான்! ஒரே வருத்தம். உன் அழகை அனுபவிக்க முடியவில்லை. உன் கலையை ரசிக்க முடியவில்லை. நான் கொடுத்து வைக்காதவன்.”

“இல்லை நீங்க அதிர்ஷ்டக்காரர். திரும்பி வருகிறபோது இந்த உமா மேலும் அழகாக விளங்குவாள்; நீங்க விரும்புகிற அப்சரஸ் மாதிரி ஆடுவாள். ஆப்பரேசன் வெற்றிகரமாக நடக்கும். என் தெய்வம் என்னை கைவிடாது.”

உமா விடைபெற்றாள்.

தியேட்டருள் கொண்டு சென்றனர்.

அப்போது மாலை ஏழு மணி.

சங்கருக்கு மயக்கம் தரப்பட்டது.

கடிகாரம் சப்த சுரங்களாக ஒலித்தது

சங்கருக்கு இருந்த கொஞ்ச நஞ்ச உணர்வில் அது சுருதி கூட்டியது.

அவனுடைய மயங்கிய நினைவில் உமாசலங்கை கட்டி நிற்கிறாள்! ஆடற்கலைத் தெய்வமாகநிற்கிறாள்!

நிபுணர்கள் பலர் சூழ அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருந்தது.

சங்கர் எங்கோ இமாச்சலப் பிரதேசத்தில் "உமா!உமா!"

என்று கூவி அலைகிறான். உமா…அதோ…அதோ…ஆதிசக்தி கோலம் பூண்டு நடனமாடுகிறாள். அண்டசராசரங்களும் கிடுகிடுக்க நடனமாடுகிறாள். சிவனை வென்றுவிட்ட செருக்கார்ந்த நடனமாக ஆடுகிறாள். புவனங்கள் அதிர்கின்றன! கறைக்கண்டவனுக்கு மூத்தவளாக, அவளே சங்கரரின் அன்னையுமாயினவளுமாக ஆடுகிறாள், ஆடுகிறாள்; அகிலம் தழைக்க ஆடுகிறாள்…

அறுவை சிகிச்சை முடிகிறது.

உணர்வு எப்போது வருமோ…சொல்ல முடியாது. அப்படி வருகிறபோது அதைத் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களுக்கு யாரையும் அனுமதிக்கக் கூடாது என்பது தலைமை டாக்டரின் கண்டிப்பான உத்தரவு.

வீட்டில்-

உமா அன்று முதல் இன்று வரை அன்ன ஆகாரம், ஊண் உறக்கமின்றிச் சிவப்பாடை அணிந்து தவக்கோலச் செல்வியாகவே காட்சியளித்தாள். பூசையறையிலிருந்து குளிக்க வருவாள், யாரிடமும் பேசமாட்டாள்.பேசவந்தவர்களையும் கவனிப்பதில்லை. அவளுடைய நினைவும் அந்த அளவுக்கு இல்லை. ஈரத்தலையுடன் அப்படியே பூசையில் அமர்வாள். அவளுடைய மனம் நடராச மூர்த்தியிடம் வாதித்துக் கொண்டே இருந்தது.

"ஈஸ்வரா! என் மாங்கல்யத்தைப் பறித்திடாதே! என்குங்குமத்தை அழிச்சிடாதே ! உன்னை வணங்குகிற நியாயம் அவருக்குப் புரிய வேண்டும். என் குங்குமம் அழிபடுமேயானால்… நானே உலகக் குங்குமங்களுக்கு அர்த்தமில்லையென்று சத்தமிட்டுக் கூவுவேன்! என்கணவரினும் ஒரு படி மீறிவிடுவேன். நான் யார்? என் கணவருக்குப் புரியவேண்டும். அப்போது நீ யார்… அது அவருக்குப் புரிய வேண்டும். புரிந்தே தீரும்! அவர் இயற்கையோடு நட்புறவு கொண்டு போராடும் விஞ்ஞானியாக வேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு. விரோதியாக இயற்கையுடன் அணுகக்கூடாது. தெய்வமே! காப்பாற்று!..."

தொலைபேசி கிணுகிணுத்தது.சங்கர் சுய உணர்வுடன் இருக்கிறான். வந்து பார்க்கலாம் என்ற செய்தியைத் தொலைபேசி அறிவித்தது.

“உமா! உன் புருஷன் பொழைச்சிக்கிட்டான்!”

ராஜா மணியம்மாள் பறந்தாள்.

குளிர்சான அறை. சங்கர் படுக்கையில் சாய்ந்து கிடந்தான். தாய் கண்ணீரும் மகிழ்ச்சியுமாக நின்றிருந்தாள்.

“உமா எங்கே?” என்று சமிக்ஞை மூலம் கேட்டான் சங்கர்.

“வருவாடா, சங்கர்! அன்னையிலிருந்து இன்னையவரை சாப்பாடா, தூக்கமா? பூசையறையில் மாங்கல்ய பிச்சைக்குப் போராடிக்கிட்டு இருக்கா! அவ செஞ்ச தவம்தான் நீ பிழைச்சேன்னு சொல்லுவேன் …!”

அப்போது-

உமாவை அழைத்துக் பெதண்டு சந்திரசேகரன் ஐ.ஏ.எஸ்.மெடல்ல வந்து கொண்டிருந்தார்.

உமாவைக் கண்ட சங்கர்ஒளி நிறைந்த முகத்துடன் முறுவலித்தான்.

எல்லையற்ற மகிழ்ச்சியுடனும், முறுவலுடனும் கணவனை நோக்கினாள் உமா. தலைமுடியில் ஈரம் இன்னமும் சொட்டிக் கெண்டிருந்தது. சிவந்த உடையும், திருநீறு துலங்கும் நெற்றியும், சிவந்த குங்குமமும் சாட்சாத் அந்த அகிலாண்டேஸ்வரியை நினைவு படுத்தின. கையிலிருந்த பூக்கூடையைக் கட்டிலின்மேல் வைத்தாள். அதிலிருந்த குங்குமத்தை எடுத்து, துணிந்து கணவர் நெற்றியில் - சிதம்பரத்தில் ஒரு பிராமணர் வைத்ததுபோல – வைத்து விடலாமா என்று ஒரு கணம் எண்ணினாள். பிறகு என்ன நினைத்துக் கொண்டாளோ, அது முறையல்ல என்று நினைத்து அந்தக் குங்குமத்தை தனது தாலியில் இட்டுக் கொள்ள முனைகிற போது

சங்கர் அவள் கையை மெல்லப் பற்றினான்.

உமா வியப்புடன் கூர்ந்து கவனித்தாள். அனைவருமே கூர்ந்து கவனித்தனர். ஏனிப்படிப் பலர் முன்னிலையில் கையைப் பற்ற வேண்டும்?

உலகநாத முதலியாருக்கு மட்டும் புரிந்து விட்டது. தம்மகள் வென்று விட்டாள்!

தெய்வீகப் புன்னகை தவழ சங்கர், பற்றிய கையை அருகே கொண்டு வந்து, தன் நெற்றியிலிடுமாறு சைகை காட்டினான்.

உமா இந்த உலகையே வென்று விட்டது போன்ற பெருமிதம் கண்டாள். தன் லட்சியத்தை இறைவன் எவ்வழியில் நிறைவேற்றுகிறான் என்பதை நினைத்துப் பார்த்த போது…

ஆகா! எத்துணை பெரிய நன்றிக் கடல் அவன்! எத்தனைப் பெரிய நாயகன் அவன்!

சங்கர் நெற்றியில் குங்குமப் பிரசாதத்தை இட்டாள் உமா. அப்போது சங்கர் அவள் காதுக்கு மட்டும் கேட்கிறவகையில் “உமா! நீ நடனமாடிப் பார்த்துட்டேன். அந்தப் பாரசக்தி மாதிரியே ஆடினே… ஆப்ரேஷன்லே உன்னை நினைச்சிக்கிட்டே கண்ணை மூடினேன்… நான் கண்டு வந்தது உன்னோட ஆனந்தத் தாண்டவம்தான்!” என்றான்.

தன்னை மறந்த மனோலயத்துடன் கணவனுடைய கால்களைப் பற்றித் தலைபுதைத்தாள், தெய்வம் தொழுதேகணவனைத் தொழுதெழுந்த பெய்யனப் பெய்யும் மழைக்குரிய மங்கை நல்லாள் உமா!

அவள்…அடுத்த கணம்…

காவியத்துக்கும் எட்டாத நிலையை அடைந்து விட்டாள்! தெய்வமாகி விட்டாள்!

தெய்வங்களை மனிதர்கள் வழிபடுகிறார்கள். தெய்வங்கள் யாரை வழிபடுகின்றன என்கிறதத்துவார்த்தமான கேள்வி எழுந்தால்

உமாவைப் போன்ற காவிய மங்கையர்களை வணங்கித் தூய்மை பெறுகின்றன!

இதுவே சத்தியமான தத்துவம்!

***********************************